


# தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்




ஐங்கரன் விக்கினேஸ்வரா



# தேசிய சுய நிர்ணயமும்
# ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

**தேசிய சுய நிர்ணயமும்**
**ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்**
ஐங்கரன் விக்கினேஸ்வரா
முதற்பதிப்பு: 2024 வைகாசி
© ஐங்கரன் விக்கினேஸ்வரா
வடிவமைப்பு : க.பரணீதரன்
வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்
பக்கம்: 104
விலை: 500.00
அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Thesiya Suyanirnayamum**
**Iropiya Sirupanmai Inankalum**
Ainkaran Wigneswara
First Edition: 2024 May
© Ainkaran Wigneswara
Layout : K.Bharaneetharan
Published by Jeevanathy, Kalai aham, Alvai
Pages: 104
Price: 500.00
Printed at Baranee Printers, Nelliady.
ISBN: 978-955-0958-72-6

ஜீவநதி வெளியீடு – 356

## சமர்ப்பணம்




# சோமசுந்தரம் சுரேஷ்

மண்ணில் : 06/07/1970 விண்ணில்: 24/05/2023

தலைநிமிர் கழக யாழ் இந்துவின்
மாற்றுக் குறையாத மன்னவன் !
சோமசுந்தரம் சுரேஷ்
முதலாவது ஆண்டு நினைவாக !..

# பொருளடக்கம்

1. கட்டலோனியா  கலைந்த கனவாகும் தேசம் /09

2. பாஸ்க் - ஐரோப்பாவின் மூத்தகுடி /17

3. அப்காசியா  நீண்ட கால அல்லலில் மக்கள் /25

4. தெற்கு ஒசேத்தியா  பிராந்திய பகை சூழ்ந்த மண் /32

5. நாகோர்னா காராபாக் - வரலாற்றுப் பகை /38

6. ஆர்மேனியா  கொடூரமான இனப்படுகொலை /44

7. செச்சினியா  நீறு பூத்த நெருப்பு /51

8. திரான்ஸ்னிஸ்ட்ரியா  சிக்கித் தவிக்கும் மக்கள் /59

9. கொசோவா  செர்பியர் ஒடுக்கப்படும் சிறுபான்மையினர் /67

10. சைப்ரஸ் - பிரிவினையும் சுகந்திரமும் /74

11. வட அயர்லாந்து  உள் நாட்டுப் போரின் முடிவு /79

12. ஸ்கொட்லாந்து  தனித்துவமான தேசம் /85

13. கொசோவோ  ஐரோப்பாவின் புதிய தனிநாடு /93

14. பின்னிணைப்பு  1

15. பின்னிணைப்பு  2

# முன்னுரை

**விடுதலைக்கான புதிய பாதையில்**
**வானில் தெரியும் நம்பிக்கை நட்சத்திரம்!**

தமது சுயநிர்ணய உரிமைக்காக, சுதந்திரத்திற்காகப் போராடும் ஐரோப்பிய இனங்களின் போராட்டங்களை உள்ளடக்கி வெளியாகின்றது "தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்" என்ற ஐங்கரன் விக்கினேஸ்வராவின் புத்தகமானது வெளியாகின்றது.

தமது ஆயுதப் போராட்டத்தின் ஊடாக தமது சுதந்திரத்தைப் பெற்றுவிட முடியும் என்ற அசையாத ஈழத்தமிழர்களின் நம்பிக்கையைப் பன்னாட்டு அரசியல், இராணுவ தந்திரோபாய உதவிகளுடன் ஶ்ரீலங்கா அரசு இனப்படுகொலையை நிகழ்த்தி அழித்த பதினைந்தாவது ஆண்டைக் கடக்கும் இக்காலத்தில் இப் புத்தகம் வெளியாவது ஈழத்தமிழர்களுக்கு மிக முக்கியமானது.

இந்தப் பூமிப்பந்தில் ஈழத்தமிழர்களாகிய தாங்கள் மட்டுமே சுதந்திரத்திற் காகப் போராடுபவர்கள் அல்ல, உலகில் மிக வளர்ச்சியடைந்து, மனித உரிமை களில் முன்னிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள நாடுகளிலும் தமது சுயநிர்ணய உரிமைக்காக மக்கள் தொடர்ந்து போராடுகின்றார்கள் என்ற செய்தியைச் சொல்லியிருக்கும் இந்தப் புத்தகம் தமிழர்களுக்குத் தரும் மன உறுதியும் உந்து சக்தியும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது

ஐரோப்பிய ஒன்றியத்தில் கட்டலோனியா, பாஸ்க், அப்காசியா, தெற்கு ஒசத்தியா, நாகோர்னா காராபாக், ஆர்மேனியா, செச்சினியா, திரான்ஸ்னிஸ்ட்ரியா, கொசோவா, சைப்ரஸ், வட- அயர்லாந்து, ஸ்கொட்லாந்து ஆகியவற்றில் நிகழும் விடுதலைப் போராட்டங்களின் பல்வேறு தகவல்கள் மிகக் கச்சிதமான சொற்கூட்டுக்களால் உருவாக்கப்பட்ட கட்டுரைகளிலிருந்து அறிவு பிரவாகித்து வழிவது எமக்கு உந்து சக்தியே.

இரண்டு அரசுத் (தேசம்) தீர்வுக்காகப் போராடும் சைப்ரஸ் நாட்டின் போராட்டம் வேண்டிநிற்கும் தீர்வானது ஈழத்தமிழினம் வேண்டிநிற்கும் தீர்வுக்கு ஒப்பானது என்னும் தகவல் நாம் கற்பனைகளை அடிப்படையாகக் கொண்டு

போராடவில்லை என்ற தகவலை எமக்குச் சொல்லிச் செல்கிறது.

இக்கட்டுரைகளை வாசித்து முடித்த பின்னர் எமது தமிழ்த் தேசிய விடுதலைக் கோரிக்கையின் நியாயப்பாடுகளை கொண்டு சேர்க்க வேண்டிய எம்மையொத்த பல்தேசிய மக்கள் யார்? என்ற கேள்விக்கான பதில் சுழுவா கின்றது. அப்பதிலின் ஊடாக நாம் எமது போராட்ட நியாயத்தை அம்மக்களிடம் எடுத்துச்செல்ல வேண்டும் என்ற அரசியல் நடவடிக்கையொன்றும் புலனாகின்றது.

விடுதலைக்கான புதிய பாதைகளிற் பயணிக்கவேண்டிய காலத்தில் வானிற் தெரியும் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒன்றாகப் புலப்படுகின்றது "தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்".

**கலாநிதி இ.நா.ஸ்ரீஞானேஸ்வரன்**

# என்னுரை

**சர்வதேச வரலாற்றுப் பார்வையில்**
**ஐரோப்பிய தேசிய இன முரண்பாடுகள்:**

உலகெங்கிலும் ஒவ்வொரு தேசிய இனங்களும் ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து கொண்டிருக்கின்றன. தனக்கென தனி அரசுகளை அமைத்துக் கொள்ளும் போராட்டங்களை இன்னமும் நடத்திக் கொண்டிருக் கின்றன. இவ்வகையில் ஐரோப்பாவில் நிகழும் சிறுபான்மை இனங்களின் தேசிய சுயநிர்ணய போரராட்டங்களை வரலாற்றுத் தகவல்களுடன் இந்நூல் எடுத்துரைக்க முயல்கிறது.

தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் உலக அரங்கில் முனைப்புப் பெற்றுள்ள முறைமையை உற்று நோக்கும் பொழுது, இரண்டு விடயங்கள் மிகத் துல்லியமாகின்றன. ஒன்று வரலாற்று ரீதியிலான இன அழிப்பையும், இன சுத்திகரிப்பையும் வெளிக்காட்டுகின்றன.

மற்றொன்று பூலோக அரசியல் காரணிகளின் விளைவாக எழுந்த எழுச்சிகளின் விளைவாக உருவாகிய போராட்டங்களையும் அவதானிக்கலாம். இதனுள்இன உணர்வின் அடிப்படையாக எழுந்த போராட்டங்களை தற்காப்புத் தேசியம், எதிர்த்தாக்குத் தேசியம் என இரண்டு நிலைப்பாடுகளில் வரைப் படுத்தலாம்.

இவ்வகையில் தமது சுயநிர்ணய உரிமைக்காக, சுதந்திரத்திற்காகப் போராடும் ஐரோப்பிய இனங்களின் போராட்டங்களை உள்ளடக்கி வெளியாகும் ”தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்” என்ற இந்நூலில் கட்டலோனியா, பாஸ்க், அப்காசியா, தெற்கு ஒசத்தியா, நாகோர்னா காராபாக், ஆர்மேனியா, செச்சினியா, திரான்ஸ்னிஸ்ட்ரியா, கொசோவா, சைப்ரஸ், வட-அயர்லாந்து, ஸ்கொட்லாந்து ஆகியவற்றில் நிகழும் போராட்ட வரலாற்றை, நிகழ்கால தரவுகளுடன் ஒப்பீடு செய்கிறது.

ஐரோப்பாவில் உள்ள சிறுபான்மை இனங்களின் விடுதலைப் போராட்டங்களின் தற்பாரியத்தை உற்று நோக்கினால், இனக்குழுமம் அல்லது

இனத்துவ உணர்வென்பது அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறும் ஒரு காரணியாக உள்ளது.

அதே வேளையில் இந்த இனங்களின் தேசிய எழுச்சியானது பெரும்பாலும் ஏகாதிபத்திய, முதலாளித்துவச் சுரண்டலுக்குட்பட்ட நாடுகள் அரசியல் ரீதியாக காலனித்துவ முடிவின் பின்னரே ஐரோப்பிய நாடுகளில் தோன்றியுள்ளமை தெரிகின்றது.

பதினொட்டாம் நூற்றாண்டின் மத்திய காலம் முதல் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஐரோப்பாவிலே காணப்பட்ட பிரித்தானிய, ஜேர்மனிய, இத்தாலிய பெருந் தேசிய சக்திகளின் வெளிப்பாட்டின் விளைவே ஆசிய- ஆபிரிக்க நாடுகளில் இன எழுச்சிப் போராட்டங்களாக வலுப்பெற்றன.

ஆயினும் உலகை தன் காலடியில் காலனித்துவப்படுத்திய மேற்கத்தய பெருஞ்சக்திகள், தங்கள் சிறுபான்மை மக்களை அடக்கியமை வரலாற்றுத் துயராகும். அதாவது ஐரோப்பிய தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங் களினூடே இழையோடும் தேசியத்தைப் பற்றிய நுண்ணிய விடயம் இதுவேயாகும்.

இத்தகைய சிறுபான்மை இனங்களின் தேசிய எழுச்சிப் போராட்டங்கள் இருபத்தியோராம் நூற்றாண்டை கடந்தும் தொடர்கிறது. இந்த உண்மையின் யதார்த்தத்தை "தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்" என்ற இந்நூலில் வெளிப்படுத்துகிறேன்.

1990களில் இருந்து "சர்வதேச வரலாற்றுப் பார்வையில் தேசிய இனமுரண்பாடுகள்" எனும் தொடர் தலைப்பில் நான் எழுதிய கட்டுரைகள் ஐரோப்பிய, தாயக பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியாகின. இக்கட்டுரைகளின் முதலாவது பாகமே இந்நூலாகும். இந்நூலாக்கத்தில் பயணித்த அனைவருக்கும் மிக்க நன்றிகளுடன்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

01

# கட்டலோனியா – கலைந்த கனவாகும் தேசம் :

## ஐரோப்பிய ஒன்றிய தடைகளும்...
## ஸ்பெயின் ஆதிக்க அழுத்தங்களும்...




*ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகள் தொடர்ந்த வண்ணமும், ஸ்பெயின் அரசின் அழுத்தங்கள் நீடித்த வேளையிலே 2017ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கட்டலோனியா (Catalonia) விடுதலை பெற்று தனி நாடாகிவிட்டதாக ஒரு பிரகடனத்தை வெளியிட்டது. கட்டலோனியா தன்னாட்சிப் பிரதேசத்தின் அதிபர் கார்லஸ் பூஜ்டியமோன் மற்றும், பிராந்தியத் தலைவர்களும் கையெழுத்திட்டு அப்பிரகடனத்தை வெளியிட்டனர்.*

**தனி நாடாக பிரகடனம் :**

*"சுதந்திரமான, இறையாண்மை உள்ள நாடாக கட்டலோனி யாவை அங்கீகரிக்கவேண்டும்," என்று அந்தப் பிரகடனம் வேண்டு*

*கோள் விடுத்தது. ஸ்பெயினின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக இருந்து வந்த கட்டலோனியாவில் தனிநாடு கோரி **2017** அக்டோபர் **1**இல் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஸ்பெயின் நாட்டுடன் இணைந்து இருப்பதா..? அல்லது தனிநாடாக பிரிந்து செல்வதா..? என்பதை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது.*

*உலகெங்கிலும் ஒவ்வொரு தேசிய இனங்களும் ஒடுக்கு முறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து கொண்டிருக்கின்றன. தனக்கென தனி அரசுகளை அமைத்துக் கொள்ளும் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றன. அப்படி ஸ்பெயினிலிருந்து பிரிந்து கட்ட லோனியா தேசமும் தனிநாடாக தன்னை **27.10.2017** அன்று பிரகடனப் படுத்திக் கொண்டது. மக்களின் விருப்பம், ஸ்பெயினிடம் இருந்து கட்டலோனியா தனி நாடாகப் பிரிந்து செல்லவேண்டும் என்பதே என்று கட்டலோனிய நாடாளுமன்றத்தில் கூறிய பூஜ்டியமோன், அதே நேரம் தாம் இந்த விஷயத்தில் பதற்றத்தைத் தணிக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.*

*செழிப்பான வட-கிழக்கு பகுதியான கட்டலோனியாவில், உள்ள **23** இலட்சம் மக்களில், வாக்குப்பதிவில் பங்கேற்ற **90** சதவிகிதம் பேர், சுதந்திரம் வேண்டும் என்றே வாக்களித்துள்ளனர். இந்த வாக்கெடுப்பில் **43** சதவிகித ஓட்டுக்கள் பதிவாகின.*

*இந்த தேர்தலில் பல முறைகேடுகள் நடந்ததாகவும், சில வாக்குப்பெட்டிகள் ஸ்பெயின் காவல்துறையால் பறிமுதல் செய்யப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.*

**தனி நாட்டு வாக்கெடுப்பை அங்கீகரிக்கவில்லை**

*ஸ்பெயின் தனி நாட்டுக்கான வாக்கெடுப்பை அங்கீகரிக்க வில்லை. அதன் தலைவர்களையும் கைது செய்தது. கட்டலோனிய சுதந்திரம் கோரி போராடிய தலைவர்கள் சிறையில் அடைத்தனர். ஸ்பெயினுக்கெதிராக கிளர்ந்தெழுந்தனர் மக்கள்.*

*கட்டலோனிய சுதந்திரம் கோரி ஸ்பெயினுக்கெதிராக போராடிய தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதை அடுத்து, ஏறத்தாழ **3,50,000** மக்கள் பார்சிலோனாவில் வீதியில் இறங்கி போராடினர்.*

*கட்டலோனியா சுதந்திர இயக்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக இவர்கள் அமைதியான ஒரு பேரணியையும் மேற் கொண்டனர். **2017**ஆம் ஆண்டு கட்டலோனியா எனும் தனி நாட்டை வலியுறுத்தி சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பு சட்டத்திற்குப் புறம்பாக நடந்தது எனவும் ஸ்பெயினால் குற்றஞ்சாட்டப்பட்டது.*




**நாடாளுமன்ற கலைப்பு:**

இதனை அடுத்து, ஸ்பெயினில் இருந்து பிரிந்து தனி நாடாவதாக அறிவித்த தன்னாட்சி பிரதேசமான கட்டலோனியாவின் பிராந்திய நாடாளுமன்றத்தை கலைப்பதாக அன்றைய ஸ்பெயின் பிரதமர் மரியனோ ரஜாய் அறிவித்தார்.

ஸ்பெயினின் நேரடி ஆட்சியின் கீழ் கட்டலோனியா வருவதாகவும், விரைவில் தேர்தல் நடத்தப்பட்டு கட்டலோனியாவுக்கு புதிய அரசு தேர்வு செய்யப்படும் என்றும் அவர் அப்போது கூறினார்.

கட்டலோனியா தன்னாட்சிப் பிரதேசத்தின் அதிபர் கார்லஸ் பூஜ்டிமோன் தலைமையிலான அமைச்சரவையையும் பதவி நீக்கம் செய்ய அவர் உத்தரவிட்டார். அத்துடன் கட்டலோனியா தனது சுதந்திரம் குறித்து விடுக்கும் எந்த ஒரு பிரகடனத்துக்கும் எந்த ஒரு பலனும் இருக்காது என்று ஸ்பெயின் பிரதமர் மரியானோ ரஜாய் எச்சரித்தார்.

மேலும், கட்டலோனியா பிரதேசத்துக்கு வழங்கப் பட்டிருக்கும் தன்னாட்சி உரிமையை இடை நிறுத்தப்படும் என்று அவர் கூறினார்.

**வளமான கட்டலோனியா :**

*ஸ்பெயினில் வளமான பகுதி கட்டலோனியா. அவர்களுக்கென தனி கலாச்சாரமும், மொழியும் இருக்கிறது. அந்தப் பகுதியில் 75 லட்சம் பேர் வசிக்கிறார்கள். இது சுவிட்சர்லாந்து மக்கள் தொகையை விட அதிகம்.*

*ஐரோப்பிய ஒன்றியம் இந்த பிரச்சனையை ஸ்பெயினின் உள் விவகாரமாகக் கருதி, பிரிவினைவாத தலைவர்கள் முன் வைத்த கோரிக்கைகளைப் புறந்தள்ளிவிட்டது, ஸ்பெயினின் ஒரு தன்னாட்சி பெற்ற மாகாணம் ஆகும். இதன் தலைநகரம் பார்செலோனா, இதன் பரப்பளவு 32,114 சதுர கி.மீ. ஆகும். இதன் மக்கட்தொகை 7,504,881 ஆகும்.*

*கட்டலோனியா இது ஸ்பெயினின் வட கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. கட்டலோனியா மாகாணத்திற்கு, தனி அரசியலமைப்பு சபை, தனி நாடாளுமன்றம், தனி தேசிய கீதம்,தனி கொடி மற்று முத்திரைகள் கொண்டது. கட்டலோனியா ஸ்பெயினின் நான்கு மாகாணங்களை அடக்கி உள்ளது. பார்செலோனா, கிரோனா, இலைய்டால், தரகோனா. பார்செலோனா இதன் தலைநகரமாகவும் மிகப் பெரிய நகரமாகவும் விளங்குகின்றது. ஸ்பெயினின் இரண்டாவது பெரிய நகரமாகவும் ஐரோப்பாவின் பெரும் பெருநகரப் பகுதிகளில் ஒன்றாகவும் உள்ளது.*

*2017 அக்டோபர் 27இல் கட்டலோனியா தன்னைத் தனிநாடாக அறிவித்தது.*

**கட்டலோனியா தன்னாட்சி :**

*முந்தைய கட்டலோனியா மன்னராட்சியின் பெரும்பகுதி தற்போதைய கட்டலோனியாவில் அடங்கியுள்ளது. மற்ற பகுதி பிரான்சின் பிரன்னீசு-ஓரியன்டேல் மாகாணத்தின் பகுதியாக உள்ளது. இதன் எல்லையாக வடக்கில் பிரான்சும் அந்தோராவும் உள்ளன. கிழக்கில் மத்தியதரைக் கடல் உள்ளது. ஸ்பெயினின் பிற தன்னாட்சிப் பகுதிகளான அரகொன் மேற்கிலும் வளன்சியான் மாநிலம் தெற்கிலும் உள்ளன. இப்பகுதியில் காத்தலான், ஸ்பெயின் மற்றும் ஆக்சிதத்தின் அரணிய மொழியும் அலுவல்முறை மொழிகளாக விளங்குகின்றன. தற்போதும் பார்சிலோனா கால்பந்துக் கழகம் உலக அளவில் முதல் இடத்தை வகிக்கிறது. காட்டலோனியா தன்னாட்சி பகுதி, ஸ்பெயினில் இருந்து பிரிந்து சுதந்திரமான நாடாக அமைவதற்கு நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 80% மக்கள் காட்டலோனியா தனி நாடாக பிரிவதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.*

வரலாற்றில் காட்டலோனியா :

*10ஆவது நூற்றாண்டில் கிழக்கு மாவட்டங்களான செப்டி மேனியாவும் மார்சா ஸ்பெயினும் பிரான்சியாவிடமிருந்து விடுதலை பெற்றன. இவை பார்செலோனா மாவட்டத்துடன் இணைந்தன. பின்னர் 1137இல் பார்செலோனாவும் அரகொனும் இணைந்த அரகொன் மன்னராட்சி நிறுவப்பட்டது. இக்காலத்தில் கட்ட லோனியா கடற்வணிக செல்வாக்குள்ள பகுதியாக மாறியது. அர கொன் கடற்படையின் முதன்மைத் தளமாகவும் மத்திய தரைக்கடலில் ஆட்சிப்பரப்பை விரிவுபடுத்த உதவியாகவும் இருந்தது.*

*1469க்கும் 1516க்கும் இடையே அரகொன் மன்னரும் காஸ்தியோ அரசியும் திருமணம் புரிந்த போதிலும் இணையாக தங்கள் பகுதிகளை ஆண்டு வந்தனர். கட்டலோனியா அறமன்றங்கள், நாடாளுமன்றம், மற்ற அமைப்புக்கள் தங்கள் தனி அடையாளத்தை தக்க வைத்துக் கொண்டிருந்தன.*

*1640-52 காலப்பகுதியில் கட்டலோனியா காஸ்தியோ படைகளுக்கு எதிராக தங்கள் பகுதியில் புரட்சி செய்தனர். பிரான்சியப் பாதுகாப்பில் கட்டலோனியக் குடியரசு அமைக்கப்பட்டது. 1659இல் பிரென்சு உடன்பாட்டின்படி காஸ்தியோ கட்டலோனியாவின் வடபகுதியை பிரான்சிற்கு கொடுக்க இணங்கியது.*

*1701 - 14 காலகட்டத்தில் சந்ததிப் போரில் அரகொன் மன்னர் ஸ்பெயின் மன்னர் பிலிப்பிற்கு எதிரணியில் இணைந்தார்.*

*இப்போரில் பிலிப் வென்றதால் ஸ்பெயின் முழுமையும் காஸ்தியோ அல்லாத அமைப்புக்கள் அழிக்கப்பட்டன. அனைத்து சட்ட ஆவணங்களிலும் ஸ்பெயின் தவிர்த்த மற்ற மொழிகளுக்கு தடை விதிக்கப்பட்டது.*



**ஸ்பெயின் உள்நாட்டுப் போர் :**

*நெப்போலிய, கார்லிசுட்டு போர்கள் நடைபெற்ற போதிலும் கட்டலோனியா பொருளியல் வளர்ச்சியையும் தொழில் மயமாக் கலையும் கண்டது. 19ஆவது நூற்றாண்டில் பண்பாட்டு மறுமலர்ச்சி ஏற்பட்டது. அத்துடன் கட்டலோனிய தேசிய உணர்ச்சியும் வளர்ந்தோங்கியது. இக்காலத்தில் பல தொழிலாளர் இயக்கங்கள் உருவாகின. 1913இல் நான்கு கட்டலோனிய மாநிலங்களும் பொதுநலவாய மொன்றை உருவாக்கிக் கொண்டன. இரண்டாவது ஸ்பெயின் குடியரசு காலத்தில் மக்களாட்சி மலர்ந்த நேரத்தில் கட்டலோனிய அரசு மீள்விக்கப்பட்டது. ஸ்பெயின் உள் நாட்டுப் போரை அடுத்து சர்வாதிகாரியாக பிரான்சிஸ்கோ பதவி யேற்ற பிறகு அடக்குமுறை மீள கட்டவிழ்க்கப்பட்டது. கட்ட லோனிய அமைப்புகள் அழிக்கப்பட்டன, மீண்டும் அலுவல்முறை பயன்பாடுகளில் கட்டலோனிய மொழிக்குத் தடை விதிக்கப்பட்டது.*

*ஆயினும் 1950களிலும் 1960களிலும் கட்டலோனியா குறிப்பிடத்தக்க பொருளியல் முன்னேற்றத்தைக் கண்டது. முதன்மையான சுற்றுலா இடமாக மாறியது. இதனால் ஸ்பெயினின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தொழிலாளிகள் கட்ட லோனியாவிற்கு குடி பெயர்ந்தனர். பார்செலோனா ஐரோப்பாவின் மிகப் பெரிய பெருநகரப் பகுதிகளில் ஒன்றானது.*

*1975 - 82இல் ஸ்பெயின் மக்களாட்சிக்கு மாறியபோது கட்டலோனியாவிற்கு அரசியல் மற்றும் பண்பாட்டு தன்னாட்சி வழங்கப்பட்டது. ஸ்பெயினில் மிகவும் துடிப்பான சமூகங்களில் ஒன்றாக கட்டலோனியா விளங்குகின்றது.*

**கட்டலோனியா விடுதலை இயக்கம் :**

*1922 ஆம் ஆண்டில் கட்டலோனியா விடுதலை இயக்கம் தோன்றுகிறது. ஸ்பெயின் ராணுவத்தில் பணியாற்றிய பிரான்சிஸ் மாசி என்பவரால் தொடங்கப்பட்ட இந்த இயக்கம் ஸ்பானிய அரசிட மிருந்து விடுதலை பெறுவதை நோக்கமாகக் கொண்டு இயங்கியது. பின்னாட்களில் பல இயக்கங்கள் சேர்ந்து கட்டலோனியா குடியரசு இயக்கத்தை உருவாக்கினர்.*

*1930 ஆண்டில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் இந்த இயக்கம் பெரு வெற்றி பெற்றது. தனிநாடு கேட்டு வந்த இந்த இயக்கம் ஸ்பெயின் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி தன்னாட்சி பெற்ற கட்ட லோனிய குடியரசு அமைத்துக் கொண்டது.*

*சர்வதிகார ஆட்சி அமைந்த பின்பு தன்னாட்சி அதிகாரம்*

பறிக்கப்பட்டதையும் 1980 ம் ஆண்டு மீண்டும் தன்னாட்சி அதிகாரம் மீட்டுப்பெறப்பட்டது.

1980 ம் ஆண்டில் அமைக்கப் பெற்ற நாடாலுமன்றம் ஸ்பெயின் அரசின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது. கேட்டலோனியா மக்களின் சமூக, அரசியல் பொருளாதாரத் திட்டங்களை தாங்கள் நினைத்தது போல் நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. இதனால் கட்டலோனியா மக்கள் வீரியமிக்க போராட்டங்களை நடத்தினர். இதனால் ஸ்பெயின் அரசு "தேசத்தகுதி" கொண்ட தன்னாட்சி உரிமை கொடுக்கப்படும் என்று அறிவித்தது. அந்த அறிவிப்பு வெளியான உடன் ஸ்பெயின் உயர்நீதிமன்றம் "தேசத்தகுதி" கொண்ட தன்னாட்சி உரிமை என்பது அரசிலமைப்புக்கு புறம்பானது என்று கூறி இதனைத் தடை செய்தது. இது தான் இன்று கட்டலோனியா விடுதலைப் பிரகடனம் வரை கொண்டு வந்து சேர்த்துள்ளது.

**கட்டலோனிய தனி நாட்டு கோரிக்கை**

2008 இல் அமெரிக்காவில் தொடங்கிய பொருளாதார நெருக்கடி ஐரோப்பிய யூனியனைக் கடுமையாகப் பாதித்தது. ஐரோப்பிய யூனியனில் உள்ள நாடுகள் கடன்களால் திணறின. அயர்லாந்து, போர்த்துக்கல், கிரீஸ் நாடுகள் கடனில் மூழ்கிப் போனது. அந்நாடுகளை தொடர்ந்து இத்தாலியும் ஸ்பெயினும் கடன் நெருக்கடியில் சிக்கின.

ஸ்பெயினைப் பொருத்தவரை தனி நாட்டுக்கான வாக் கெடுப்பையே அது அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என தேர்தல் நடப்பதற்கு முன்பாகவே அறிவித்துவிட்டது. வாக்கெடுப்பு சட்டவிரோதமானது என அறிவித்ததுடன் இவ்வாக்கெடுப்பை ஒழுங்கு செய்பவர்கள், வாக்குப் பத்திரங்களை அச்சடிப்பவர்கள், வாக்குச் சாவடிகளாக தமது இடங்களை அறிவித்துக் கொள்பவர்கள் என அனைவர் மீதும் கடும் சட்டம் பாயும் என எச்சரித்தது.

அதையும் மீறி தேர்தல் நடந்த போது தேர்தல் சாவடிகளைக் கைப்பற்றியும், கட்டலோனியா மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியும் கோரத்தாண்டவமாடியது இதையும் மீறி 43 வீத மக்கள் கலந்து கொண்டு 92 வீத மக்கள் கட்டலோனிய விடுதலைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.வாக்கெடுப்பையும் சுதந்திரத்திற்கான பிரகடனத்தையும் ஸ்பெயின் அரசாங்கம் சட்டவிரோதமாகத் கருதி நடவடிக்கையில் இறங்கியது.

கட்டலோனிய விடுதலைப் பிரகடனத்தை அறிவித்த அடுத்த நாளே கட்டலோனியா நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டதாக

*ஸ்பெயின் பிரதமர் அறிவித்தார். கட்டலோனியாவில் பதவி வகித்த காவல்துறை உயரதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.*

*கட்டலோனிய வாக்கெடுப்புக்கு காரணமாக இருந்தவர்கள் மீது தேசத்துரோக வழக்கு பதியப்பட்டது. கட்டலோனிய பிரதமர் கார்லஸ் ப்யூஸ்மண்ட் மீதும் தேசத்துரோக வழக்கு பாய்ந்தது. அவர் ஸ்பெயின் விருந்து வெளியேறி பெல்ஜியம் நாட்டில் அரசியல் அடைக்கலம் புகுந்தார். மேலும், பலர் கடுமையான ஒடுக்குமுறை களை சந்திக்க நேர்ந்தது. கட்டலோனியா மீது இராணுவ ஆட்சி நடத்துவதற்குரிய அதிகாரத்தை ஸ்பெயின் நாடாளுமன்றம் அந் நாட்டின் பிரதமர் மரியானோ ரஜாய்க்கு வழங்கியது. அத்துடன் கடும் தாக்குதலை கட்டலோனியா மீது நடத்துவதற்கு ஸ்பெயின் முயற்சித்தது.*

*ஏற்கனவே பாஸ்க் மக்களின் விடுதலைப் போராட்டத்தை தடுத்து நிறுத்திய ஸ்பெயின் கட்டலோனியாவின் சுதந்திரப் பிரகடனத்தை சர்வதேச நாடுகளும் அங்கீகரிக்கவில்லை.*

*கட்டலோனியாவின் சுதந்திரப் பிரகடனத்தை இலங்கை அரசும் முந்திக் கொண்டு நிராகரித்தது.*

**கட்டலோனியா கற்ற பாடம் :**

*ஐ.நா. அவை, ஒன்றிற்கு மேற்பட்ட தேசிய இனங்களை கொண்ட நாட்டிலிருந்து எந்தவொரு தேசிய இனமும் பிரிந்து செல்வதற்கு உரிமை உள்ள சுயநிர்ணய உரிமையை அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்துள்ளது.அந்த சுயநிர்ணய உரிமையை சட்டப் பூர்வமாக ஏற்றுக் கொண்டு தான் எல்லா நாடுகளும் ஐ.நா அவையில் அங்கம் வகிக்கின்றன. அதற்கு ஸ்பெயின் விதிவிலக்கல்ல.*

*40 ஆண்டுகளாக ஆயுத போராட்டத்தை நடத்தி கொண்டிருந்த பாஸ்க் விடுதலை போராட்டத்தை ஒடுக்கிய ஸ்பெயினுக்கு கட்டலோனியா விடுதலை போராட்டத்தை நசுக்குவது மிக பெரிய வேலையாக கருதவில்லை. அதனால் தான், கட்ட லோனியா விடுதலை பிரகடனத்தை அறிவித்த அடுத்த நாளே கட்ட லோனிய நாடாளுமன்றம் ஸ்பெயின் பிரதமரால் கலைக்கப்பட்டது.*

*கட்டலோனிய விடுதலை பிரகடனத்தை செய்தவர்களும் துணை நின்றவர்களின் மீதும் தேசத்துரோக குற்றசாட்டப்பட்டது. அத்துடன் காவல்துறை அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். நீதிமன்றத்தில் நேர்மையாக விசாரணையை எதிர்கொள்ளச் சென்றவர்கள் சிறையில் அடைக்கபட்டார்கள். இப்படி ஸ்பெயின் கட்டலோனியா மீது கடூர அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பது உலகறிந்த உண்மையாகும்.*

02

## பாஸ்க் – ஐரோப்பாவின் மூத்தகுடி :

## ஜனநாயக வழிக்கு திரும்பும் “பாஸ்க்” போராடமும்...
## ஆயுதப் போராட்டத்தை நிறுத்தும் “எட்டா” அமைப்பும்...




*ஐரோப்பாவில், ஸ்பெயின் நாட்டில், தனித்துவமானவர்களும், ஐரோப்பாவின் மூத்தகுடியான பாஸ்க் மொழி பேசும் மக்களுக்காக (Basque Country), தனிநாடு அமைக்க போராடும் “எட்டா” அமைப்பு ஐரோப்பிய யூனியனால் பயங்கரவாத இயக்கமாக தடைசெய்யப் பட்டாலும், அதன் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தாலும், ஒரு நூற்றாண்டு கால பாஸ்க் விடுதலைப்போராட்டம் இன்று வரை அரசியல் ரீதியாக தொடர்கின்றது.*

*ஸ்பெயினில் பாஸ்க் போராளிகள் அமைப்பான “எட்டா” தனிநாட்டுக்கான தமது போராட்டத்தில் “ஆயுத வழியை” இனிமேல் கையாளப் போவதில்லை என **2011** ஆண்டில் அறிவித்த போதிலும், பாஸ்க் இன மக்களின் பிராந்தியங்களில் அரசியல் பதற்றமான*

*சூழ்நிலை இன்னமும் உள்ளது.*

*சர்வதேச, மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அழுத்தங்களினால் "ஜனநாயக வழிக்கு" தாம் திரும்புவதற்காக இந்த முடிவைத் மேற்கொண்டதாக அவர்கள் தெரிவித்தனர். தமது கோரிக்கைகளுக்கு ஜனநாயக முறையிலேயே தீர்வு காணலாம் என நம்புவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.*

**ஜனநாயக வழிக்கு திரும்புதல் :**

*கடந்த 40 ஆண்டுகளாக எட்டா போராளிகளால் முன்னெடுக் கப்பட்டு வந்த ஆயுதப் போரில் பல நூறு மக்கள் கொல்லப்பட்டனர். 1959 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட எட்டா அமைப்பு வடக்கு ஸ்பெயினின் ஏழு பிரிவுகளிலும், பிரான்சின் தென்மேற்குப் பகுதியிலும் தனிநாடு கோரிப் போராடியது.*

*எட்டா 1989, 1996, 1998 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் போர்நிறுத்தங்களை அறிவித்தது. இறுதியாக 2010 செப்டம்பர் 5, அன்று, எட்டா புதியதாக போர்நிறுத்தத்தை அறிவித்தது, அது இன்னும் நடைமுறையில் உள்ளது, மேலும் 2011 அக்டோபர் 20 அன்று, எட்டா தன் "ஆயுத செயற்பாடுகளின் நிறுத்தத்தை உறுதி படுத்தி" அறிவித்தது.*

*2012 நவம்பர் 24 இல், ஆயுதக் குழுவைக் கலைக்கவும் அதன் நடவடிக்கைகளை நிறுத்தவும் ஒரு "உறுதியான முடிவுக்குவர" பேச்சுவார்த்தைக்கு தயாராக உள்ளது என அறிவித்தது. 2017 ஏப்பிரல் 7 ஆம் திகதி இந்தக் குழுவானது தன் ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்கள் அனைத்தையும் ஒப்படைத்ததுடன், அதிகாரப்பூர்வமாக நிராயுதபாணியான அமைப்பாகவும் அறிவித்தது.*

*ஸ்பெயினில் எப்படி கட்டலோனியா மக்கள் ஒரு மாநிலம் என்றளவில் இருக்கிறார்களோ அதைவிட சற்று கூடுதலான அதிகாரத்தோடு பாஸ்க் இன மக்களும் இருக்கிறார்கள்.*

**கட்டலோனியா – பாஸ்க் மக்களின் போராட்டம் :**

*ஸ்பெயினில கட்டலோனியா மக்கள் தங்கள் விடுதலைக்கான போராட்டத்தை தொடக்கம் முதலே ஜனநாயக வழியில் மட்டுமே நடத்திக் கொண்டிருந்தனர். ஆனால் பாஸ்க் மக்களோ மிகப்பெரும் ஆயுதப் போராட்டத்தை நடத்திவிட்டு தற்காலிகமாக போர் நிறுத்தத்தை அறிவிப்பு செய்துவிட்டு ஜனநாயக வழியில் தங்கள் கோரிக்கைக்கு தற்போது குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.*

*பாஸ்க் மொழி பேசும் மக்களின் ஸ்பெயினுக்கு எதிராக*




தனிநாடு கேட்டு போராடி வந்த இயக்கத்தின் பெயரே ETA எட்டா (தாயகத்திற்கும் விடுதலைக்குமான இயக்கம்).

**1938** இல் சர்வதிகாரி பிரான்சிஸ் பிராஸ்கோ ஸ்பெயினின் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு கட்டலோனியாவை எப்படி எல்லா விதத்திலும் ஆக்கிரமித்தனரோ, அப்படியே பாஸ்க் மொழியும் தடை செய்யப்பட்டது. எல்லா உரிமைகளும் காலில் போட்டு மிதிக்கப் பட்டது.

எனவே இந்த ஒடுக்குமுறைக்கு எதிராக PNU என்றழைக்கப் படுகிற பாஸ்க் தேசியக்கட்சி ஜனநாயக வழியில் முதலில் போராட்டத்தை முன்னெடுத்தது.

ஜனநாயக வழிப்போராட்டங்களில் எவ்வித நன்மையும் சர்வதிகாரி ஆட்சியில் கிடைக்கப் போவதில்லை என்று உணர்ந்த PNU - வின் மாணவர் அமைப்பு போராளிகள் ஆயுதப் போராட்டத்தை நடத்துவது என்று தீர்மானித்து உருவாக்கிய அமைப்பு தான் எட்டா ETA.

**ஐரோப்பாவின் மூத்தகுடி பாஸ்க் மொழி – 'எயுஸ்கரா'**

ஐரோப்பாவில், ஸ்பெயின் நாட்டில், தனித்துவமான பாஸ்க் மொழி பேசும் மக்களுக்காக, தனிநாடு அமைக்க போராடும் எட்டா, ஐரோப்பிய யூனியனால் பயங்கரவாத இயக்கமாக தடைசெய்யப் பட்டாலும், அதன் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தாலும், ஒரு நூற்றாண்டு கால பாஸ்க் விடுதலைப்போராட்டம்

இன்று வரை தொடர்கின்றது.

ஸ்பெயினில் கஸ்திலியன் (ஸ்பானிய மொழி), கத்தலான், கலேக்கோ, பாஸ்க், என்ற நான்கு வேறு மொழிபேசும் இனங்கள் வாழும் நாடாகும். இருப்பினும் ஸ்பானிய மொழி மட்டுமே உத்தியோக பூர்வ மொழியாக இருந்து வருகின்றது.

அண்மைக்காலங்களில் அதிகாரப்பரவலாக்கல் மூலம் பிற மொழிப் பிரதேசங்களுக்கும் சுயாட்சி அந்தஸ்து வழங்கப்பட்டதால் , அந்த மொழிகளும் நீண்டகால அடக்குமுறைக்குப்பின் மறுமலர்ச்சி கண்டுள்ளன எனலாம்.

இவற்றில் பாஸ்க் மொழியை அவர்கள் மொழியில் எயுஸ்கரா என அழைப்பர். இந்த மக்கள், மிக நீண்ட காலமாகவே தமது உரிமையை விட்டுக்கொடாது, தனிநாடு கோரிப் போராடி வருகின்றனர். அதனை ஆயுதப் போராட்டமாக முன்னெடுத்தது “எட்டா” அமைப்பாகும். பாஸ்க் மொழி பிற ஐரோப்பிய மொழி களோடு தொடர்பில்லாத தனித்துவமான மொழியாகும். தற்கால ஐரோப்பியர்கள் வந்து குடியேறிய காலத்திற்கு முன்பே பாஸ்க் இன மக்கள் வாழ்ந்து வந்ததற்கான சான்றுகள் உள்ளன. இதனால் ஐரோப்பாவின் முத்த குடியென்றும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

**பாஸ்க் நாடு - ஒரு புவியியல்**

பாஸ்க் மக்கள் பீஸ்னீஸ் மலைகளின் அடிவாரத்தில் வடக்கு ஸ்பெயினிலும், தெற்கு பிரான்சிலும் பிஸ்கே விரிகுடாவை சுற்றி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வசித்து வருகின்றனர். அவர்கள் ஐரோப்பாவில் பழமையான வாழ்ந்த இனக்குழு. இருப்பினும், ஆய்வாளர்கள் பாஸ்க்கின் சரியான தோற்றத்தை இன்னமும் தீர்மானிக்கவில்லை. 35,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பாவில் வாழ்ந்த கிரோ-மேக்னன் வேட்டைக்காரர்களின் நேரடியான வழித்தோன்றல்களே இவர்கள்.

**பாஸ்க்கு நாடு – Basque Country:**

பாஸ்க்கு மக்களின் தாயகப் பகுதியானது அத்திலாந்திக்கு கடலோரத்தில் மேற்கு பிரான்சு, ஸ்பெயினிலும் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. 16வது நூற்றாண்டிலிருந்தே பாஸ்க்கு மக்கள் வாழும் இப்பகுதியின் பெயர் பாஸ்க் நாடு என ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

18ஆம் நூற்றாண்டிலிருந்து பாஸ்க்கு மக்களை தனியாக அடையாளப்படுத்தவும் தனிநாடு கோரியும் எழுச்சி பெற்றுள்ள பாஸ்க்கு தேசியவாதத்திற்கு முன்னமே இவ்வாறு அழைக்கப்

*பட்டுள்ளனர். பாஸ்க் தேசிய மற்றும் விடுதலை அமைப்பானது 1959 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.*

*பாஸ்க் மக்களின் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் காக்க தனிநாடு வேண்டி ஸ்பெயின் ஆதிக்கத்தில் உள்ள தெற்கு பாஸ்க் நாட்டுப் பகுதியில் தொடர் தாக்குதலில் ஈடுபட்ட ஒரு ஆயுதக் குழு வாக எட்டா உருவானது. பாஸ்க் தேசிய விடுதலை இயக்கத்தின் பிரதான குழுவாக எட்டா உள்ளது. மேலும் பாஸ்க் போராட்டத்தின் மிக முக்கியமான செயற்பாட்டாளராகவும் உள்ளது.*

**ஆயுதப் போராட்டமாக வளர்ச்சி :**

*எட்டா விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிணமித்த போது அது பலரது கவனத்தை ஈர்த்தது. ஸ்பெயினில் பாஸிஸ சர்வாதிகார ஆட்சி நடந்ததும், அதனை உள்நாட்டு மக்கள் மட்டுமல்ல பிற ஐரோப்பிய நாடுகளும் விரும்பாததும் பரந்த ஆதரவைப் பெற்றுக்கொடுத்தது.*

*இன்று ஒரு பயங்கரவாத இயக்கமாக ஒதுக்கப்படும் எட்டா, அன்று பலரால் ஒரு விடுதலை இயக்கமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது என்பதைக் கேட்கும்போது ஆச்சரியமாகத்தான் இருக்கும். பிற்காலத்தில் தலைகீழாக மாறிய உள்நாட்டு-சர்வதேச அரசியலும், எட்டாவின் கொள்கைகளை விட்டுக்கொடுக்காத பின்வாங்காத போர்க்குணமுமே இந்த முரண்பாட்டின் காரணங்கள் ஆகின.*

**பிரமிக்கத்தக்க தாக்குதல் :**

*1973 ம் ஆண்டு ஸ்பானியப் பிரதமர், மரணப்படுக்கையில் இருந்த சர்வாதிகாரி பிராங்கோவினால் தனது அரசியல் வாரிசாக முன்மொழியப்பட்டவர்தான் பிளாங்கோ. வருங்கால சர்வாதிகாரியை கொலை செய்யத் திட்டம் தீட்டியது எட்டா . பிளாங்கோ அடிக்கடி போகும் தேவாலயத்திற்கருகில் இருந்த வீட்டை எட்டா கொரில்லாக் கள் வாடகைக்கு எடுத்தனர். அங்கிருந்து பிளாங்கோவின் வாகனம் நிறுத்தும் வீதிவரை சுரங்கம் தோண்டினர். குறிப்பிட்ட நாளில் சுரங்கத்தினுள் வைத்த குண்டுகள் வெடித்து பிளாங்கோ ஸ்தலத்திலேயே மரணமுற்றார். இந்தப் பிரமிக்கத்தக்க தாக்குதற் சம்பவம் ஸ்பெயின் முழுவதும் எட்டாவின் புகழ் பரவக் காரண மாயிற்று. இதன் பின் ஸ்பெயினில் சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வரவும் பாராளு மன்ற ஜனநாயகம் ஸ்தாபிக்கப்படவும் இத்தாக்குதல் வழிகோலியது.*

புதிதாகப் பதவியேற்ற அரசாங்கம் பாஸ்க் பிரதேசத்திற்கு சுயாட்சி வழங்குவதாக அறிவித்தது. எயுஸ்கரா மொழி பாடசாலைகளில் கற்பிக்க அனுமதி வழங்கப்பட்டது. ஆயினும் ஜனநாயக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை தயங்கித் தயங்கி நடைமுறைக்குக் கொண்டு வந்தது. மாநில அரசுக்கான அதிகாரங்களை கைமாற்றுவதில் இழுபறி நிலையேற்பட்டது. எட்டாவிற்கும் அரசுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையும் முடிவற்று இழுபட்டது. மாயையிலிருந்து விடுபட்ட எட்டா உறுப்பினர்கள் மீண்டும் போராட்டப் பாதையை நாடினர்.


சில வருடங்களின் பின்னர் ஸ்பெயினை மட்டுமல்ல, முழு ஐரோப்பாவையும் உலுக்கிய பாஸ்க் விடுதலைப்போர் தீவிரமாக வெடித்தது. இம்முறை எட்டாவின் தாக்குதல்கள் மிகக் கடுமையாக விருந்தன. இராணுவ பொலிஸ் அதிகாரிகள் மட்டுமல்ல நீதிபதிகள் ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஆகியோரும் குறிவைத்துத் தாக்கப்பட்டார்கள். அவர்கள் எத்தனை பாதுகாப்புகளுடனும் பவனி வந்த போதும் திட்டமிட்ட கார் குண்டுவெடிப்புகளுக்குப் பலியாகினர். தாக்குதல் பட்டியலில் வந்தவர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் எட்டாவினால் எதிரிகளாக அறிவிக்கப்பட்டார்கள்.

எட்டாவின் மத்திய, தென் அமெரிக்க நாடுகளில் தலைமறைவாக இயங்கிய உறுப்பினர்கள் கண்டுபிடிக்கப்பட்டு நாடுகடத்தப் பட்டனர். அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் தமது பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் எட்டாவின் பெயரையும் சேர்த்துள்ளன. இராணுவ, அரசியல் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். கட்சி அரசியல் பிரதிநிதித்துவம் கூட தடைசெய்யப்பட்டது. இருப்பினும் எட்டா பாஸ்க் விடுதலைப் போராட்டத்தை 21 ம் நூற்றாண்டிற்கு எடுத்து வந்து விட்டது என்பது உண்மையே.

**பயங்கரவாதக் குழு என முத்திரை :**

அமெரிக்காவில் 2001 செப்டம்பரில் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்ட பிறகு உலகின் போக்கு மாறத் துவங்கியது. ஆயுதந்தாங்கிய போராளி இயக்கங்களின் நியாயங்கள் எல்லாம் கணக்கில் கொள்ளாமல் அனைத்து இயக்கங்களும் பொதுவாக ஒட்டுமொத்தமாக தடை செய்யப்பட்டன.

இதனால் எட்டாவின் ஆயுதப் போராட்டம் கடுமையான நெருக்கடியைச் சந்தித்தது. எட்டாவின் போராட்டத்திற்கு முதலில் ஆதரவாக இருந்த பிரான்சு பிறகு ஸ்பெயினுடன் இணைந்துகொண்டு பாஸ்க் விடுதலைப் போராட்டத்தை எதிர்த்தது. மேலும் எட்டாவின்




*40 ஆண்டு கால தொடர் ஆயுதப் போராட்டம், அம்மக்களையே சோர்வடைய வைத்து விட்டது.*

*ஐரோப்பிய நாடுகளும் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொண்டு அரசியல் கைதிகளை அந்நாட்டிடம் ஒப்படைக்கத் தொடங்கின.*

*இதனால் எட்டாவின் அரசியல் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். அவர்களின் ஆயுதக் குவியல்கள் பறிமுதல் செய்யப் பட்டன. எனவே, அரசியல் ரீதியாக இயக்கம் பலவீனமடையத் தொடங்கியது.*

*இதனால் போராட்டத்தில் தோற்பதைவிட பின்வாங்குவதே சிறந்தது என்று எட்டா வேறு வழியின்றி தன் ஆயுத போராட்டத்தைக் கைவிட்டது. எட்டா 1989, 1996, 1998 மற்றும் 2006 ஆகிய ஆண்டு களில் போர்நிறுத்தங்களை அறிவித்தது. 2010 செப்டம்பர் 5, அன்று, எட்டா புதியதாக போர்நிறுத்தத்தை அறிவித்தது. அது இன்னும் நடைமுறையில் உள்ளது, மேலும் 2011 அக்டோபர் 20 அன்று, எட்டா தன் "ஆயுத செயற்பாடுகளின் நிறுத்தத்தை உறுதிபடுத்தி" அறிவித்தது. 2012 நவம்பர் 24 இல், குழுவைக் கலைக்கவும் அதன் நடவடிக்கைகளை நிறுத்தவும் ஒரு "உறுதியான முடிவுக்குவர" பேச்சுவார்த்தைக்கு தயாராக உள்ளது என அறிவித்தது.*

*2017 ஏப்பிரல் 7 ஆம் திகதி இந்தக் குழுவானது தன் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் அனைத்தையும் ஒப்படைத்ததுடன், அடுத்த நாளிளில் இருந்து அதிகாரப்பூர்வமாக நிராயுதபாணியான அமைப்பாகவும் அறிவித்தது.*

**இரட்டைக் கோபுரத் தாக்குதல்:**

*அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்கா மட்டுமின்றி ஐரோப்பிய நாடுகளும் பயங்கரவாதத்திற் கெதிரான போர் என்ற போர்வையில் தத்தமது நாடுகளில் இயங்கிக் கொண்டிருந்த இயக்கங்கள் மீது தடை விதித்தன. பலர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்பட்டனர்.*

*அத்துடன் ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாடுகளில் நடக்கிற போராட்டங்களை ஒடுக்குவதற்காக "ஐரோப்பிய காவல் துறையையே" உருவாக்கிக் கொண்டன. குற்றங்களை விசாரிக்க ஐரோப்பிய நீதிமன்றத்தையும் அமைத்துக் கொண்டன. ஐரோப்பாவில் இருக்கக் கூடிய நாடுகளில் இனி ஒரு நாடு தனியாகப் பிரிந்து விடக் கூடாது என்பதில் இன்று வரை கவனமாக இருக்கின்றன.*

*எனவே, விடுதலைக்காகப் போராடுகிற இயக்கங்களை ஒடுக்குவதில் தங்களுக்குள் இணைப்பை வைத்துக் கொண்டன. "போராட்ட தளங்களை" தங்கள் நாடுகளுக்குள் அமைத்துக் கொள்ளாதவாறு பார்த்துக் கொண்டன. பண பரிவர்த்தனைகளையும் தடுத்து விட்டன. இவையெல்லாம் பாஸ்க் இன மக்களின் விடுதலைப் போராட்டத்தை நலிவடையவிட்டது.*

*அதிலும் மார்க்சியக் கண்ணோட்டத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பை உள்ளடக்கிய எட்டாவின் பாஸ்க் தனிநாடு ஆயதப் போராட்டத்தை கடுமையாக ஒடுக்கினர். ஸ்பெயின், பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய மாநிலங்கள்,ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றால் எட்டாவை பயங்கரவாதக் குழு என முத்திரைக் குத்தின.*

*இதனால் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்கள் இந்தக் குழுவை "பயங்கரவாதிகள்" என்று குறித்தன. ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் பிற நாடுகளில் 300 க்கும் மேற்பட்ட இதன் உறுப்பினர்கள் சிறைகளில் தற்போதும் உள்ளனர்.*

**ஆயுதம் போராட்டம் கைவிடல் :**

*போராட்டத்தில் தோற்பதைவிட பின் வாங்குவதே சிறந்தது என்றடிப்படையில் எட்டா தன்னுடைய ஆயுதம் போராட்டத்தை கைவிட்டது. ஆனாலும் பாஸ்க மக்களின் விடுதலை உணர்வு வளர்ந்து கொண்டே தான் இருக்கிறது. உலகம் முழுவதும் விடுதலைக்காகப் போராடுகிற மக்களுக்கு இன்றும் ஆதரவை வழங்கிக் கொண்டு தான் இருக்கின்றனர்.*

# 03

# அப்காசியா – நீண்ட கால அல்லலில் மக்கள் :

## ஆதிக்க ஆக்கிரமிப்பு தொடரும் ஜோர்ஜீயா...
## உண்மையில் நேசக்கரம் நீட்டுகிறதா ரஷ்யா...



*அப்காசியா தனித்தன்மை வாய்ந்த கலாச்சாரம் மற்றும் பண்டைய வரலாறு கொண்ட ஒரு அற்புதமான நாடு. இந்த பகுதியில் வசிக்கும் மக்கள், தங்கள் தாயகத்திற்கு "இயற்கையின் நிலம்" என்றே பொருள் கூறுவர்.*

*அப்காசியா (Abkhazia) என்பது கவ்காசியா மலைகளில் உள்ள ஒரு பகுதியாகும். வடமேற்கு ஜோர்ஜியாவில், பாரிய காவ்காசுய மலைகளுக்கு தெற்கே, கருங்கடலின் கிழக்கு கடற்கரையில் உள்ள ஒரு ஐ.நா நடைமுறையில் அங்கீகரிக்கப்படாத குடியரசு ஆகும். முன்பு இது ஜோர்ஜியாவின் ஒரு அதிகாரபூர்வ பகுதியாக தன்னாட்சியுள்ள குடியரசாக இருந்தது.*

*ரஷ்ய அரசால் ஆகஸ்ட் 26, 2008 இல் இக்குடியரசையும்,*

*தெற்கு ஒசேத்தியாவையும் தனிநாடுகளாக அங்கீகரித்து அறிவித்தது. ஐநாவின் வேறு எந்த வீட்டோ உறுப்பு நாடுகளும் இதுவரையில் இதனை அங்கீகரிக்கவில்லை.*

*வடக்கு எல்லையில் ரஷ்யா உள்ளது இது 8,660 சதுர கிலோமீட்டர் (3,340 சதுர மைல்) பரப்பளவைக் கொண்டுள்ளது மற்றும் சுமார் 240,000 மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. இதன் தலைநகரம் சுகுமி. தன்னாட்சி குடியரசான அப்காசிய அரசை முறையாக ரஷ்யா, வெனிசுலா, நிகரகுவா, நாவுரு மற்றும் சிரியா ஆகிய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

**அப்காசியா 1992 தனி நாடாக பிரகடனம் :**

*1980களின் இறுதியில் சோவியத் யூனியன் சிதைவடையத் தொடங்கியபோது, ஜோர்ஜியாவின் சுதந்திரத்தை நோக்கிய நகர்வுகள் தொடர்பாக அப்காஸ் மற்றும் ஜோர்ஜியர்களிடையே இனப் பதட்டங்கள் வளர்ந்தன. பல அப்காஸ்கள் இதை எதிர்த்தனர், ஒரு சுதந்திர ஜோர்ஜியா தங்கள் சுயாட்சியை அகற்ற வழிவகுக்கும் என்று பயந்து, அதற்கு பதிலாக அப்காசியாவை ஒரு தனி குடியரசாக நிறுவ வாதிட்டனர். கொர்பச்சேவின் பெரெஸ்ட்ரோயிகாவின் தொடக்கத் துடன், அப்காஸ் தேசியவாதிகளின் நிகழ்ச்சி நிரல் மிகவும் தீவிரமானதாகவும் பிரத்தியேகமாகவும் மாறி வலுப்பெற்றது.*

*1988 ஆம் ஆண்டில், அப்காசியாவின் தன்னாட்சி குடியரசின் அரசு அந்தஸ்தை மறுசீரமைக்குமாறு ஜோர்ஜியா கேட்கத் தொடங்கினர். ஏனெனில் அப்காசியாவை மற்றொரு குடியரசாக சமர்ப்பிப்பது அவர்களின் வளர்ச்சிக்கு போதுமான உத்தரவாதங்களை அளிக்கவில்லை என்று கருதப்பட்டது.*

**சர்வஜன வாக்கெடுப்பில் அப்காசியா :**

*மார்ச் 1990 இல், ஜோர்ஜியா சுதந்திர இறையாண்மையை அறிவித்தது, 1921 முதல் சோவியத் அரசாங்கத்தால் நிறுவப்பட்ட ஒப்பந்தங்களை ஒருதலைப்பட்சமாக ரத்துசெய்து அதன் மூலம் சுதந்திரத்தை அறிவித்தது.*

*அப்காசியாவின் மக்கள்தொகையில் 52.3% (கிட்டத்தட்ட அனைத்து ஜோர்ஜிய இனத்தவர் அல்லாத மக்கள்) வாக்கெடுப்பில் பங்கேற்று தன்னாட்சி குடியரசை பாதுகாக்க பெரும் பெரும்பான்மை யுடன் (98.6%) வாக்களித்தனர்.*




**எட்வார்ட் ஷெவர்ட்நாட்ஸே ஜோர்ஜியா தலைமை :**

*1991இல் முன்னாள் சோவியத் வெளியுறவு மந்திரியும் உலகளவில் பிரபல்யமான சோவியத் ஒன்றிய ராஜதந்திரி எட்வார்ட் ஷெவர்ட்நாட்ஸே ஜோர்ஜியா நாட்டின் தலைவரானார்.*

*ஜோர்ஜியாவிலிருந்து அப்காசியா விலகியதும், ரஷ்ய ஒருங் கிணைப்பைக் கோரும் அப்காசியன் இயக்கத்தால் ஜூலை 1989 இல் சுகுமியில் ஒரு மோதல் வெடித்தது. ஜோர்ஜிய இராணுவம் சுகுமி மீது படையெடுத்து போர் தீவிரமடைந்தது. நீண்ட கால போரின்பின் ரஷ்யாவிற்கும் ஜோர்ஜியாவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் பின்னர், ஜூலை 1993 இல் ஜோர்ஜியா, அப்காசியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளால் போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.*

*ஜோர்ஜியாவிற்கும் அப்காசியாவிற்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானதன் பின்னர் ஐ.நா.பாதுகாப்புக் குழு அப்காசியாவில் ரஷ்ய இராணுவத்தை ஒரு அமைதிகாப்பாளராக நிறுத்திவதை அங்கீகரித்தது. அதே ஆண்டு நவம்பரில் அப்காசியா ஒரு புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டு, ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்து, சுதந்திரத்தை அறிவித்து.*

*அப்காசிய மக்கள் 1992 ஆம் ஆண்டில் ஜோர்ஜியாவிடம் இருந்து தம்மை தனிநாடாக அறிவித்தனர். இதனை அடுத்து 1992 முதல் 1993 வரை இரு நாடுகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரில் ஜோர்ஜியா தோல்வியடைந்தது என்றே கருதலாம்.*

**ஐநாவின் போர் நிறுத்த உடன்பாடு :**

*1994 இல் ஐநாவின் ஆதரவில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது. ஐநாவின் கண்காணிப்பில், ரஷ்யா தலைமையிலான அமைதிப் படையினர் தலைநகர் சுகுமியில் நிலை கொண்டனர். எனினும் இது தொடர்பாக ரஷ்யாவுக்கும் ஜோர்ஜியாவுக்கும் இடையில் முறுகல் நிலை நீண்ட காலமாக தொடர்ந்தது.*

*யூலை 2006 இல் ஜோர்ஜியா அப்காசியாவின் "கடோரி கோர்ஜ்" பகுதியில் வலிந்த இராணுவத் தாக்குதலை நடத்தியிருந்தது. ஆயினும் ஆகஸ்ட் 2008 இல் அப்காசியப் படைகள் கடோரி ஏரியின் பெரும் பகுதிகளை மீளக் கைப்பற்றியது.*

**அப்காசிய அரச வரலாறு :**

*அப்காசிய அரச ராஜ்யத்தின் முனைப்பான காலம் எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. பின் ஒன்பதாம் நூற்றாண்டின் இரண்டா வது பாதியில் அது ஜோர்ஜியா பகுதியாக மாறியது. பதின்மூன்றாம் நூற்றாண்டில், அப்காசியாவை மங்கோலிய- தத்தார்கள் (*Mongolian-Tatarian*) கைப்பற்றி வென்றார்கள். பதினாறாம் நூற்றாண்டு முதல் துருக்கியர்களால் ஆளப்பட்டு பின் அப்காசியா ரஷ்யாவின் ஒரு பகுதியாக இணைந்தது. ஜோர்ஜியாவில் அக்டோபர் புரட்சியின் வாசம் 1917களில் உணரப்பட்டது. 25.02.1921, ஜோர்ஜியாவில் போல்ஷ்விக் ஆட்சி நடத்தப்பட்டது. அதற்கு முன்பே அப்காசியா மார்ச் 1921 இல் சோவியத்தில் இணைந்ததாக அறிவித்தனர்.*

*தற்போது ஜோர்ஜியாவிற்கு அப்காசியா மீது கட்டுப்பாடு இல்லை என்றாலும், ஜோர்ஜிய அரசாங்கமும் பெரும்பாலான ஐக்கிய நாடுகள் சபை உறுப்பு நாடுகளும் அப்காசியாவை, ஜோர்ஜீயாவின் ஒரு பகுதியை சட்டப்பூர்வமாகக் கருதுகின்றன. ஆயினும் ரஷ்ய அரசிய லமைப்பு இப்பகுதியை "அப்காசியா தன்னாட்சி குடியரசு" என்று குறிப்பிடுகிறது.*

**ரஷ்ய அமைதி காக்கும் படை :**

*1994 யுத்த நிறுத்த உடன்படிக்கையும், மற்றும் பல ஆண்டு பேச்சுவார்த்தைகள் நடந்த போதிலும், இன்னமும் சர்ச்சை தீர்க்கப் படாமல் உள்ளது. ஐக்கிய நாடுகளின் பார்வையாளர் பணி மற்றும் ரஷ்ய தலைமையிலான காமன்வெல்த் சுதந்திர நாடுகளின் (சிஐஎஸ்) அமைதி காக்கும் படையின் நீண்டகால இருப்பும், பல சந்தர்ப்பங் களில் வன்முறை வெடிப்பதைத் தடுக்க தவறிவிட்டது என்றும் கருதப்படுகிறது.*




**2008 ரஷ்ய - ஜோர்ஜியா போர்**

*ஆகஸ்ட் 2008 இல், ரஷ்ய- ஜோர்ஜியப் போரின்போது ஜோர்ஜியப் படைகளுக்கு எதிராக அப்காசிய படைகள் போராடின. இது ரஷ்யாவால் அப்காசியாவை முறையாக அங்கீகரிப்பதற்கு ஒப்பானதாகும்.*

*ஆகஸ்ட் 28, 2008 அன்று, ஜோர்ஜியாவின் பாராளுமன்றம் அப்காசியாவை ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு பிரதேசமாக அறிவித்தது. இந்த நிலைப்பாடு மேற்குலக சர்வதேச சமூகத்தின் பெரும்பான்மை யினரால் ஆதரிக்கப்பட்டது.*

**நிலக்கரி வளமிக்க பூமி:**

*தொழிற்துறையைப் பொறுத்தவரை, அப்காசிய குடியரசில் நிலக்கரி 40வீதம் வளம் உள்ளது ஆகும். முக்கியமாக நிலக்கரி மூலமான மின் உற்பத்தி நிலையத்தைக் கொண்டுள்ளது. அத்துடன்*

உணவு பதப்படுத்துதல், தோல், மர பதப்படுத்துதல் மற்றும் இயந்திரங்கள் போன்ற தொழில்கள் உருவாகி வருகின்றன.

கருங்கடல் கடலோரப் பகுதியில், சிட்ரஸ் பழங்களான தேயிலை, மாண்டரின் ஆரஞ்சு மற்றும் எலுமிச்சை, பழங்கள் மற்றும் திராட்சை ஆகியவை அதன் துணை வெப்பமண்டல காலநிலையை பயன்படுத்தி தீவிரமாக பயிரிடப்படுகின்றன. மேலும் மலைப்பகுதிகளில் புகையிலை பயிரிடப்படுகிறது, மேலும் கால்நடை மேய்ச்சல் முக்கியமாக மேற்கொள்ளப்படுகிறது.

**கொசோவா சுதந்திர பிரகடனம் :**

கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்தைத் தொடர்ந்து, சுதந்திரத்தை மேற்குலகு அங்கீகரித்தபோது, அப்காசியா மற்றும் தெற்கு ஒசேத்தியாவை அங்கீகரிக்கலாம் என்று ரஷ்யா சுட்டிக் காட்டியது.

கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்தைத் தொடர்ந்து, ரஷ்ய நாடாளுமன்றம் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டது: “இப் போது கொசோவோவின் நிலைமை ஒரு சர்வதேச முன்னுதாரணமாகி விட்டது, ரஷ்யா கொசோவோ சூழ்நிலையை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால், நடந்து கொண்டிருக்கும் மற்றய பிராந்திய மோதல்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் இந்த இரண்டு குடியரசுகளையும் அங்கீகரிப்பதில் ரஷ்யா தொடர்ந்து தாமதம் செய்து வந்தது. இருப்பினும், 16 ஏப்ரல் 2008 அன்று, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், தெற்கு ஒசேத்தியா மற்றும் அப்காசியாவை அங்கீகரித்து உத்தியோகபூர்வ உறவுகளை ஏற்படுத்துமாறு தனது அரசாங்கத்திற்கு அறிவுறுத்தினார்.

இதனை உண்மையான ரஷ்ய இணைப்பு முயற்சி என்று ஜோர்ஜியாவின் கண்டனத்திற்கும் வழிவகுத்தது. அத்துடன் ஐரோப்பிய ஒன்றியம், நேட்டோ மற்றும் பல மேற்கத்திய அரசாங்கங்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

**நேட்டோ ஆதரவுடன் ஜோர்ஜியா ஆக்கிரமிப்பு :**

பின்னர் ஏப்ரல் 2008 இல், அப்காசியாவை வலுக்கட்டாயமாக கட்டுப்படுத்த நேட்டோ ஆதரவை ஜோர்ஜியா பயன்படுத்த முயற்சிப்பதாக ரஷ்யா குற்றம் சாட்டியது. ஜோர்ஜியாவின் ஆக்கிரமிப்பு முயற்சிகளுக்கு எதிராக இராணுவ ரீதியாக பதிலடி கொடுப்பதாக உறுதியளித்து, அப்பகுதியில் தனது இராணுவ இருப்பை அதிகரிப்பதாக ரஷ்யா அறிவித்தது. ஜோர்ஜிய பிரதம மந்திரி லாடோ

*குர்கெனிட்ஸே, அப்காசியா வில் உள்ள கூடுதல் ரஷ்ய துருப்புக்களை "ஆக்கிரமிப்பாளர்களாக" கருதும் என்றார்.*

**ரஷ்ய – ஜோர்ஜியன் போர் :**

*ரஷ்யா **25** ஆகஸ்ட் **2008** அன்று அப்காசியா மற்றும் தெற்கு ஒசேத்தியாவை அங்கீகரிப்பது பற்றி விவாதிக்க ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தது. பிரிந்த குடியரசுகளின் சுதந்திரத்தை அங்கீகரிக்க ரஷ்ய ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கும் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, அன்றைய ரஷ்ய அதிபர் டிமிட்ரி மெட்வெடேவ், **26** ஆகஸ்ட் **2008** அன்று இரண்டையும் அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தார். இதனை பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சர்வதேச சட்டத்தின் மீறல் காரணமாக நேட்டோ நாடுகள்,* OSCE *மற்றும் ஐரோப்பிய கவுன்சில் நாடுகள் கண்டனம் செய்தன.*

*ஆயினும் ஐநா பொதுச்செயலாளர் பான் கி-மூன், சர்ச்சைக் குரிய பகுதிகளின் சுதந்திரத்தை அங்கீகரிக்க வேண்டுமா என்பதை இறையாண்மை கொண்ட நாடுகள் தாங்களாகவே தீர்மானிக்க வேண்டும் என்று கூறினார்.*

*ரஷ்யா தனது பெரிய கடற்படைக் கப்பல்களை கடக்க அனுமதிக்கும் வகையில் அப்காசிய கடற்கரையை அகழ்வாராய்ச்சி செய்வதன் மூலம் ஓச்சம்சியரில் கடற்படை தளத்தை நிறுவும் பணியை தொடங்கியது. அப்காசிய கடல் முற்றுகையின் பிரதிபலிப்பாக, ஜோர்ஜிய கட லோரக் காவல்படையினர் அப்காசியாவிற்குச் செல்லும் மற்றும் அங்கிருந்து செல்லும் கப்பல்களைத் தடுத்து வைத்திருந்தனர். இதனால் ரஷ்யா ஜோர்ஜியாவின் கப்பல்களை பறிமுதல் குறித்து எச்சரித்தது. அதன்பின் அப்காசியாவுக்குச் செல்லும் கப்பல்களுக்கு ரஷ்ய பாதுகாப்புப் படகுகளின் ஒரு பிரிவு பாதுகாப்பை வழங்கும் என்றும் கூறியது.*

*அப்காசியாவில் ரஷ்ய செல்வாக்கின் அளவு அதிகரித் துள்ளதுடன், அப்காசியா தற்போது முழு ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ளது என்பதே உண்மை. அத்துடன் பொதுசன வாக்கெடுப்பில், அப்காசிய உள்ளூர்வாசிகள் ஜோர்ஜிய ஆதிக்கத்தை விட ரஷ்யாவுடன் இணைந்து வாழ விரும்புகிறார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.*

# 04

# தெற்கு ஓசேத்தியா – பிராந்திய பகை சூழ்ந்த மண்:

## தேசிய சுயநிர்ணயம் கோரும் தெற்கு ஓசேத்தியா...
## தன்னாட்சி உரிமையை மறுதலிக்கும் ஜோர்ஜியா...



*முழு உலகமே 2008 ஆகஸ்ட் மாதம் சீனாவில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கியதை பார்த்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், ஜோர்ஜியா தனது இழந்த நிலப்பகுதிகளான, தெற்கு ஒசேத்தியா (South Ossetia) மற்றும் அப்காசியா, ஆகிய தன்னாட்சி பிராந்தியங்கள் மீது தனது ஆதிக்கத்தை மீள நிலைநிறுத்த தந்திரோபயமான தருணம் பார்த்து இருந்தது. ஆகஸ்ட் 2008இல் ஜோர்ஜியா இராணுவம் தெற்கு ஒசேத்தியாவை நோக்கி படையெடுத்து தலைநகரம் திஸ்கின்வாலியை கைப்பற்ற முனைந்தது.*

**ஆகஸ்ட் 2008இல் ஜோர்ஜியா போர்:**

*தெற்கு ஒசேத்தியா சமாதானப்படையில் நிலை*

நிறுத்தப்பட்டிருந்த பத்து வீரர்கள் மரணமாதன் பின்,ஜோர்ஜிய இராணுவம் போரை தொடங்கி, விமானத்தாக்குதலை நடத்தியது. இதற்குப் பதிலாக ரஷ்ய இராணுவம் தெற்கு ஒசேத்தியாவில் களமிறங்கி ஜோர்ஜிய இராணுவத்துக்கு எதிராக தாக்குதலை நடாத்தியது.

ஜோர்ஜிய இராணுவம் ஒசேத்திய தலைநகர் திஸ்கின்வாலி மீதான படையெடுப்பு குறுகிய நாட்களுக்குள் முடிவுக்கு வந்தது. திஸ்கின்வாலி மீதான ஜோர்ஜிய இராணுவ ஷெல் வீச்சில் மற்றும் சண்டையில் அகப்பட்டு 14000 ஒசேத்திய பொதுமக்கள் மரண மடைந்தனர்.

குறிப்பிட்ட அளவு ஒசெத்தியர்களுக்கு ஏற்கனவே ரஷ்ய குடியுரிமை இருந்தமையால், தனது குடிமக்கள் பாதிக்கப்படு கிறார்கள், என்று ரஷ்யா கூறி ஜோர்ஜிய இராணுவத்துக்கு எதிராக தாக்குதலை நடாத்த காரணமானது.

**ஜோர்ஜியாவின் மேற்குலக நட்பு :**

ரஷ்ய இராணுவம் தெற்கு ஒசேத்தியாவில் 2008இல் ஜோர்ஜிய இராணுவத்துக்கு எதிராக தாக்குதலை நடாத்திய வேளை ஜோர்ஜிய அரசு தனது மேற்குலக அரசுகள் உதவிக்கு வருவார்கள், என்ற அதீத நம்பிக்கையுடன் இருந்தது. ஆயினும் ரஷ்யாவுடன் அநாவசியமற்ற மோதலுக்கு ஆயிரக்கணக்கான மக்களை காவு கொள்ளும் போர் என்பதால் அமெரிக்காவும், மேற்கு-ஐரோப்பாவும் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு போகுமாறு ஜோர்ஜியாவை கூறியது.

ஜோர்ஜியா எதிர்பார்த்தது போல, “ரஷ்ய ஆக்கிரமிப்பு” ஆபத்தில் உள்ள ஜோர்ஜிய நண்பனுக்கு உதவ, அமெரிக்க படைகள் வரப்போவதில்லை என்பதால் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு போகுமாறு வலியுறுத்தப்பட்டது.

**பழமையான ஒசேத்தியா மொழி**

ஒசேத்தியா மொழி கிட்டத்தட்ட 700,000 மக்களால் காக்கசஸ் மலைத்தொடரில் ஒசேத்தியா பகுதியில் பேசப்படுகிறது. இந்திய-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் ஈரானிய மொழிகளை சேர்ந்த இம்மொழி ரஷ்யாவின் வடக்கு ஒசேத்தியா பகுதியிலும் ஜோர்ஜியா வின் தெற்கு ஒசேத்தியா பகுதியிலும் ஆட்சி மொழியாகும்.

காகசஸ் மலைகளின் இருபுறமும் அமைந்துள்ள பகுதியில் பெரும்பாலும் ஒசேத்தியர்கள் வசிக்கின்றனர். ஒசேத்திய மொழி இந்தோ-ஐரோப்பிய மொழிகள் குடும்பத்தின் கிழக்கு ஈரானிய




*கிளையின் ஒரு பகுதியாகும்.*

*பிரதான காகசஸ் பாறைக்கு தெற்கே ஒசேஷியன் பேசும் பகுதி ஜோர்ஜியாவின் எல்லைக்குள் இருப்பதைப் போலவே பெரும்பாலான நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது*

**தெற்கு ஒசேத்தியா உருவாக்கம் :**

*1990களின் ஆரம்பத்தில் ஜோர்ஜியா-ஒசேத்திய பிரச்சினை ஆரம்பித்தபோது தெற்கு ஒசேத்தியா விடுதலையை சுயாதீனமாக அறிவித்தது. ஆனாலும் உலகில் எந்த ஒரு நாடும் தெற்கு ஒசேத்தியா வின் விடுதலையை அன்று ஏற்றுக்கொள்ளவில்லை.*

*தொடர்ந்து ஜோர்ஜியாவின் கீழேயே ஆதிக்கத்தில் இருக்க மேற்குலகு வேண்டியது. நீண்ட கால போரின் பின்னர ஜோர்ஜியா இப்பகுதியின் கிழக்கு, மற்றும் தெற்கு மாகாணங்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ஏப்ரல் 2007 இல் அங்கு "தெற்கு ஒசேத்தியாவின் தற்காலிக நிருவாகம்" ஒன்றை பிரிந்துபோன முன்னாள் ஒசேத்திய உறுப்பினர்களின் தலைமையில் பொம்மை அரசை அமைத்தது.*

*தென் ஒசேத்தியாவின் தன்னாட்சி உரிமையை ரஷ்யா, வெனிசுலா, நிகரகுவா, நாவூரு மற்றும் சிரியா ஆகிய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது ஜோர்ஜியாவிற்கு தெற்கு ஒசேத்தியா மீது கட்டுப்பாடு இல்லை என்றாலும், ஜார்ஜிய அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் சபையின் பெரும்பாலான உறுப்பினர் களும் ஜோர்ஜியாவின் ஆட்சிப்பிரதேசமாகவே கருதுகின்றனர்.*

*தெற்கு ஒசேத்தியா தன்னாட்சி பிராந்தியம் ஜோர்ஜியாவின்*

காகசஸ் மலைகளின் வடக்கு மற்றும் தெற்கில் அமைந்துள்ளது. 1922 இல் சோவியத் ஒன்றிய காலகட்டத்தில் ஜோர்ஜியாவின் தன்னாட்சி மாநிலமாகவும் பிரிக்கப்பட்டது. ஆனால் 1985களில் பெரெஸ்ட் ரோயிகாவின் கீழ் தெற்கு ஒசேத்தியா சுதந்திர இயக்கம் உருவாகியது.

**ஒசேத்தியா மீது போர் :**

1990இன் பிற்பகுதியில் ஜோர்ஜியா அவசரநிலையை அறிவித்து, தெற்கு ஒசேத்தியா மீது போரைத் தொடுத்தது, தெற்கு ஒசேத்தியாவில் 30% மக்கள் ஜோர்ஜியா மக்கள் என்பதால், அதனது ஆட்சியை தக்கவைக்க முயன்றது. ஆனால் அடுத்த ஆண்டுகளில் ரஷ்யா தலையிட்டு 1992ல் போர்நிறுத்த ஒப்பந்தத்தை இருதரப்பும் ஏற்றுக் பொண்டது.

1992 இல் தெற்கு ஒசேத்திய குடியரசானது ரஷ்ய ஆதரவுடைய நடைமுறை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இப்பகுதியின் வடக்கு பகுதி ரஷ்ய கூட்டமைப்பிற்குள் வடக்கு ஒசேத்தியா குடியரசைக் கொண்டுள்ளது.

சோவியத் சோசலிச ஒன்றியத்திலிருந்து 1991இல் ஜோர்ஜியா சுதந்திரம் அடைந்த பின் ஜார்ஜிய அரசாங்கம் தெற்கு ஒசேத்தியாவின் சுயாட்சியை ஒழிப்பதன் மூலமும், பிராந்தியத்தின் மீதான அதன் கட்டுப்பாட்டை பலத்தால் மீண்டும் நிலைநாட்ட பல முறை முயற்சித்தது.

2004 மற்றும் 2008 இல், இரண்டு சந்தர்ப்பங்களில் மோதல் தீவிரமாக சூழ்ந்த சமயத்தில் ரஷிய படைகள் தெற்கு ஒசெத்தியா தன்னாட்சி பிரதேச அரசுக்கு இராணுவ உதவிகளை வழங்கியது.

**ரஷ்ய அமைதி காக்கும் படை மீது தாக்குதல்**

2008 போரை அடுத்து தெற்கு ஒசேத்தியா பிரதேசம், ரஷ்ய இராணுவத்தால் ஆக்கிரமித்துள்ளதாக ஜார்ஜியாவும் மேற்குலக சர்வதேச சமூகத்தினரும் கருதுகின்றனர். அத்துடன் தெற்கு ஒசேத்தியா ரஷ்யாவின் இராணுவ, அரசியல் மற்றும் நிதி உதவிகளை பெரிதும் நம்பியுள்ளது. இன்றுவரை தெற்கு ஒசேத்தியா சர்வதேச அங்கீகாரத் தைப் பெற முடியவில்லை என்பதற்கு ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவுமே காரணமென அறியப்படுகிறது.

ஆகஸ்ட் 2008 இல், ஜோர்ஜியா இராணுவம் தெற்கு ஒசேத்தியா மீது படையெடுத்து ரஷ்ய அமைதி காக்கும் படையைத் தாக்கியதால், ரஷ்ய துருப்புக்களும் தங்கள் இராணுவ வலிமையை வலுப்படுத்திக்கொண்டு மீண்டும் போராடி தென் ஒசேத்தியாவை



விடுவித்தது. முழுப் போராக மாறிய வேளை ஐரோப்பிய ஒன்றிய மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொண்டு ஒரு அமைதித் திட்டம் 2008இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**அமெரிக்க இராணுவ ஆலோசகர்களும் பலி :**

ஜோர்ஜிய போரின் போது, "கோரி" நகரில் இருந்த ஜோர்ஜிய இராணுவ நிலைகள் மீது ரஷ்ய விமானங்கள் குண்டுவீசித் தாக்கிய போது, சில அமெரிக்க இராணுவ ஆலோசகர்களும் பலியாகியிருக்கலாம் என்று அக்காலத்தில் தெரிவிக்கப்பட்டது.

இப்போரானது தகுந்த தருணம் பார்த்து காத்திருந்த ரஷ்யாவிற்கு, அன்றைய ஜோர்ஜிய ஜனாதிபதி சகாஷ்விலியின் பின்விளைவுகளை உணராத, விவேகமற்ற இராணுவ சாகசம் வழிசமைத்துக் கொடுத்தது.

அமெரிக்க, இஸ்ரேலிய இராணுவ ஆலோசகர்களால் பயிற்சியளிக்கப்பட்ட ஜோர்ஜிய இராணுத்தின் திறமை மீது அதீத நம்பிக்கை வைத்த காரணமாகவோ, அல்லது அமெரிக்க படைகள் வரும் என்று நம்பியோ, சகாஷ்விலி "தெற்கு ஒசெத்திய" மீதான இராணுவ நடவடிக்கையை தொடங்கி படுதோல்வியை கண்டார்.

ஆனால் ரஷ்ய இராணுவத்தின் மின்னல் வேக பதிலடியை கடைசி வரை எதிர்பார்க்கவில்லை. அக்காலத்தில் ஜோர்ஜிய அரசு மட்டுமல்ல, மேற்குலக அரசுகளும் அதிர்ச்சியில் உறைந்து போயின. ஜோர்ஜிய படைகள் புறமுதுகு காட்டி ஓடவும், ரஷ்ய படைகள் ஜோர்ஜிய பகுதிகளை கைப்பற்றவும் ரஷ்யாவின் நிபந்தனைகளை

*ஏற்று சமாதானமாகப் போக வேண்டிய நிலை ஜோர்ஜியாவிற்கு ஏற்பட்டது.*

**மேற்குலக இரட்டை வேடம் :**

***15*** *வருடங்களுக்கு மேலாக, சர்வதேசத்தால் அங்கீகரிக்கப் படாத தெற்கு ஒசேத்தியா என்ற தன்னாட்சி அரசை ஜோர்ஜியாவால் கைப்பற்றி ஆக்கிரமிக்க முடியவில்லை. இருப்பினும் சேர்பியாவில் இருந்து கொசோவோ சுதந்திர நாடாக முடியுமானால், தெற்கு ஒசேத்தியாவால் ஏன் முடியாது என்பதற்கு மேற்குலகின் இரட்டை வேட அரசியலே காரணமாகும்.*

***1992*** *ஜனவரியில் ஜனநாயக ரீதியில் தெற்கு ஒசேத்தியா குடியரசின் சுதந்திரம் குறித்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால், சுயாட்சிக்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் இந்த சுதந்திர தீர்மானத்தை ஜோர்ஜியா ஏற்றுக்கொள்ள மறுத்தது.*

*நீண்ட காலமாக தேசிய சுயநிர்ணயம் கோரும் தெற்கு ஒசேத்தியாவிற்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு இன்றியும், தன்னாட்சி உரிமையை மறுதலிக்கும் ஜோர்ஜியாவை மேற்குலக நாடுகள் தட்டிக் கொடுத்து வளர்ப்பதும் பிராந்திய அரசியலின் ஆதிக்கத்தை காட்டுகிறது. ஆயினும் தெற்கு ஒசேத்திய அமைதி காக்கும் படைக்கு வல்லரசான ரஷ்யா பாதுகாப்பு வழங்குவதுடன், இரு நாடுகள் இடையே மத்தியஸ்தம் பேணி வருவதும் அறிந்ததே.*

05

# நாகோர்னா காராபாக் – வரலாற்றுப் பகை :

## அஜர்பைஜான் – ஆர்மேனியா முடிவிலா போர்... நூற்றாண்டு காலமாக தொடரும் எல்லை யுத்தம்...



*ஆர்மேனியா, அஜர்பைஜான் நாடுகள் இடையே 30 ஆண்டுகளுக்கு மேலாகச் சர்ச்சை மிகுந்த "நாகோர்னா -காராபாக்" பிராந்தியத்தில் போர் நீண்ட காலமாக நிகழ்ந்துள்ளது.*

*1991 இல் சோவியத் யூனியன் உடைந்தபோது தனிக் குடியரசு நாடுகளான ஆர்மேனியாவும், அஜர்பைஜானும் தீவிரமாக மோதிக் கொண்டன.*

**ஆர்மேனியா - அஜர்பைஜான் வரலாற்றுப் பகை :**

*ஆர்மேனியா-அஜர்பைஜான் எல்லையில் 4400 சதுர கிமீ பரப்பளவு கொண்ட நார்கோனா காராபாக் மலை பகுதி தான் இரு*

நாடுகளுக்குமான எல்லையாக உள்ளது. இந்த பகுதி யாருக்கு சொந்தம் என மோதல் நிலவுகிறது. 1988ம் ஆண்டு முதல் நடந்த எல்லை போரில் 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். 1994ம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தபோது, நார்கோனா காராபாக் மலை பகுதி அஜர்பைஜான் நாட்டின் பகுதியாக அங்கீகரிக்கப்பட்டது.

நாகோர்னோ-கராபக் (Nagorno-Karabakh) பெரும்பாலும் மலை மற்றும் காடுகள் நிறைந்ததாகும். ஆனால் அப்பகுதியில் ஆர்மேனியா நாட்டு மக்களே அதிகம் உள்ளனர்.

2016ம் ஆண்டு முதல் மீண்டும் இரு நாடுகளுக்கும் இடையே எல்லை விவகாரம் தொடர்பாக சண்டை மூண்டது. 2020ம் ஆண்டு அது பெரும் போராக மாறியது. அப்போது ரஷ்யா தலையிட்டு அமைதிக்கு வழிவகுத்தது. அந்த போரில் 6000 பேர் வரை பலியாகினர்.

இந்த நிலையில், அஜர்பைஜான் படைகள் ஆர்மீனியாவிற்குள் உள்ள குடியிருப்புகளைத் தாக்கி கைப்பற்றியதாக ஆர்மீனியா குற்றம் கூறியது.

**1988ல் தொடங்கிய எல்லை மோதல்**

சோவியத் யூனியன் நாடுகளாக இருந்தபோதே அஜர்பை ஜானும், ஆர்மேனியாவும் மோதிக்கொண்டுதான் இருந்தன. நார் கோனா - காராபாக் மலைப் பகுதி யாருக்குச் சொந்தம் என்பதுதான் மோதலுக்கு முக்கிய காரணம். இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் அஜர்பைஜானும், கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் ஆர்மேனியாவும் மதத்தை வைத்துக்கூடச் சிறு சிறு சண்டைகள் போட்டிருக்கின்றன. ஆனால், எல்லைப் பிரச்னைதான் இரு நாடுகளுக்குமிடையேயான பிரதான பிரச்னை.

வரலாற்று ரீதியாக நாகோர்னோ-கராபாக் நவீன தொல்பொருள் ஆய்வாளர்களால் “குரா-அராக்ஸ் கலாச்சாரம்” என்று அழைக்கப்படுகிறது. அங்கே மக்கள் குரா மற்றும் அராக்ஸ் ஆகிய இரு நதிகளுக்கு இடையில் வாழ்ந்தனர். இப்பகுதியின் பண்டைய மக்கள்தொகை பல்வேறு தன்னியக்க உள்ளூர் மற்றும் புலம்பெயர்ந்த பழங்குடியினரைக் கொண்டிருந்தது, அவர்கள் பெரும்பாலும் இந்தோ-ஐரோப்பியர்கள் அல்லாத இனமாவர்.

**ஜோசப் ஸ்டாலின் கால மோதல் :**

நாகோர்னோ-கராபாக் மீதான தொடரும் மோதல் ஜோசப் ஸ்டாலின் காலத்திலேயே எழுந்தது. 1917 ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சிக்குப் பின்னர், கராபாக் டிரான்ஸ்காகேசிய ஜனநாயக குடியர




சாக மாறியது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் (1918-1920), கராபாக் உட்பட பல பிராந்தியங்களில் ஆர்மேனியாவிற்கும் அஜர்பைஜானுக் கும் இடையே தொடர்ச்சியான குறுகிய போர்கள் நடந்தன. இதன் பின் ஜூலை 1918 இல், நாகோர்னோ-கராபக்கின் முதல் ஆர்மேனிய சட்டமன்றம் இப்பகுதியை சுயராஜ்யமாக அறிவித்து ஒரு தேசிய கவுன்சிலையும் அரசாங்கத்தையும் உருவாக்கியது. பின்னர் ஒட்டோமான் துருப்புக்கள் ஆதரவுடன் அஜர்பைஜான் படைகள் கராபாக்கிற்குள் நுழைந்தன. ஆர்மேனியர்களின் ஆயுத எதிர்ப்பை நீண்ட காலம் சந்தித்தன.

**கனிம நீரூற்று வளமுள்ள தேசம் :**

நாகோர்னோ-கராபாக்கில் ஏராளமான கனிம நீரூற்றுகள் மற்றும் துத்தநாகம், நிலக்கரி, ஈயம், தங்கம், பளிங்கு மற்றும் சுண்ணாம்பு ஆகியவை உள்ளன. இப் பிராந்தியத்தில் உள்ள முக்கிய நகரமான எசுடெபானெத் பள்ளத்தாக்குகளில் திராட்சைத் தோட்டங் கள், பழத்தோட்டங்கள் மற்றும் மல்பெரி தோப்புகள் உருவாக்கப்படு கின்றன. கராபாக்க்கின் ஒட்டுமொத்த மக்கள்தொகையில் 90.8% ஆர்மேனிய மொழி பேசுபவர்களாகவும், 9.2% டாடர் அல்லது குர்துகளாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**சண்டை நிறுத்த ஐநா வேண்டுதல் :**

அஜர்பைஜான் மற்றும் அர்மேனியா ஆகியவற்றின் படைகளுக்கு இடையே நடைபெற்ற தாக்குதலில் நூற்றுக்கணக்கான பேர் கொல்லப்பட்ட நிலையில், இருநாடுகளும் உடனடியாக சண்டை நிறுத்தம் செய்ய வேண்டும் என்று ஐநா அண்மையில் கோரியுள்ளது. இரு நாடுகள் இடையேயான போர் பதற்றத்தைத்

*தணிப்பதற்கு ரஷ்யாவும் முன்வருவதாக அறிவித்துள்ளது.*

**போர் பரவும் அச்சம் :**

*இரு நாடுகளுக்கு இடையேயான போர் பல நாடுகளுக்கும் பரவும் என அச்சமும் கவலையும் நிலவுகிறது. குறிப்பாக அண்டை நாடுகளான துருக்கி, ரஷ்யா மற்றும் இரான் ஆகிய நாடுகள் இந்த சிக்கலில் தலையிடலாம் என்ற கவலை நிலவுகிறது. குறிப்பாக எண்ணெய் குழாய்கள் இந்த பகுதியின் வழியே செல்கின்றன. பல நாடுகள் தலையிட்டதால் 1994ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கு இடையேயான சண்டை முடிவுக்கு வந்திருந்தாலும், 2016ஆம் ஆண்டு முதல் இருநாடுகளுக்கு இடையே மீண்டும் போர் எழுந்தது.*

**தொடரும் வரலாற்றுப் பகை :**

*அஜர்பைஜானுடன் துருக்கி நெருக்கமான உறவைப் பேணி வருகிறது. அதே போல் ஆர்மேனியாவுடன் ரஷ்யா நெருக்கமாக இருந்தாலும் அஜர்பைஜானுடனும் நல்லுறவை பேணி வருகிறது. ரஷ்யா இருநாடுகள் இடையே உடனடி போர் நிறுத்தத்தைக் கோரி உள்ளது. துருக்கி அதிபர் எர்துவான் ஆர்மீனியா தனது ஆக்கிரமிப்பை உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கோரி உள்ளார். இதன் மூலமாக மட்டுமே நீண்டகால போர் நிறுத்தத்தைக் கொண்டு வர முடியும் என அவர் கூறி உள்ளார்.*

**குற்றஞ்சாட்டும் அஜர்பைஜானும் - ஆர்மேனியாவும் :**

*ஆர்மேனியா வெளியுறவுத் துறை அமைச்சரின் கூற்றுப்படி அமைதி ஒப்பந்தத்தை நாசம் செய்தது அஜர்பைஜான்தான். நாங்கள் தற்காப்பு நடவடிக்கையில்தான் ஈடுபட்டுள்ளோம் என குற்றஞ்சாட்டி உள்ளார். ஆர்மேனியாதான் ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டது. நாங்கள் எதிர் நடவடிக்கையில்தான் ஈடுபட்டோம் என்கிறது அஜர்பைஜான் குற்றஞ்சாட்டி உள்ளது.*

*ஐ.நா செயலாளர் நிலைமை கவலை அளிப்பதாகக் கூறி உள்ளார். இருதரப்பும் சண்டையை நிறுத்த வலியுறுத்தி உள்ளார். அத்துடன் ரஷ்யா வெளியுறவுத் துறை அமைச்சர் இருநாட்டுத் தலைவர்களுடன் அவசர பேச்சுவார்த்தை நடத்தினார். ஆர்மேனிய மக்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் பிரான்ஸ் அரசும் போர் நிறுத்தத்தையும், பேச்சுவார்த்தையும் கோரி உள்ளது.இரு நாடு களுடனும் எல்லையைப் பகிர்ந்துகொள்ளும் ஈரான் அஜர்பைஜான்*



மற்றும் ஆர்மேனியா அமைதி பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் செய்வதாகவும் கூறி உள்ளது.

**ரஷ்யா கூட்டு பாதுகாப்பு :**

இந்த நிலையில் ரஷ்யா தலைமையிலான கூட்டு பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பை இந்த விவகாரத்தில் தலையிடுமாறு ஆர்மேனியா கேட்டுக் கொண்டுள்ளது. ரஷ்யா ஆர்மேனியாவின் ராணுவ கூட்டாளி ஆகும். ஆயினும் ரஷ்யா அஜர்பைஜானுடன் நட்புறவாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. ஆகவே உக்ரைன் போருக்கு மத்தியில் ரஷ்ய அதிபர் புட்டினுக்கு இன்னோர் தலையிடியாக ஆர்மேனியா - அஜர்பைஜானில் அமைதி முயற்சியை மேற்கொண்டு வருகின்றார். ஆர்மேனியாவிற்கும் அஜர்பைஜானுக்கும் இடையேயான முதலில் சமாதானம் ஏற்படுத்த ரஷ்யா போதுமான அழுத்தங்களை கொண்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

**ரஷ்யா எரிவாயுவை ஆயுதமாக பயன்படுத்துகிறதா ?**

எண்ணெய் வளம்மிக்க அஜர்பைஜானுடன் துருக்கி நீண்டகால நெருக்கமான உறவைக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆர்மேனியாவில் ரஷ்யாவின் ராணுவம் தளம் ஒன்று இருக்கிறது. அதனால், அந்த நாட்டுடன் ரஷ்யா நல்லுறவைப் பேணிவருகிறது. இந்த முறையும் ரஷ்யா தலையிட்டுத்தான் இரு நாடுகளுக்கிடையே யான மோதலையும் நிறுத்திவைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை ரஷ்யா - உக்ரைன் போர், ஐரோப்பா தாண்டி உலகம் முழுக்கவே பொருளாதாரீதியாக பல தாக்கங்களை ஏற்படுத்தி யிருக்கிறது. தற்போதய ஐரோப்பிய பொருளாதார நெருக்கடிக்கு, ரஷ்யா எரிவாயுவை ஆயுதமாக பயன்படுத்துகிறது என மேற்குலக நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இந்த நிலையில், அஜர்பைஜான் - ஆர்மேனியா நாடு களிடையே போர் மூண்டால், அது மேலும் பல சிக்கல்களை உண்டாக்கும். எனவே, ஐ.நா-வும், உலக நாடுகளும் தலையிட்டு இந்த மோதலை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே சர்வதேச அரசியல் ஆய்வாளர்களின் பார்வையாக இருக்கிறது.

## 06

# ஆர்மேனியா – கொடூரமான இனப்படுகொலை :

**துருக்கி ஓட்டோமான் பேரரசின் வலிந்த திட்டமிட்ட இன அழிப்பு..**
**இருபதாம் நூற்றாண்டின் கொடூரமான இனப்படுகொலை...**



ஆர்மேனிய இனப்படுகொலையை ஏப்ரல் 24 அன்று உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான ஆர்மேனியர்கள் இறந்த தங்கள் மூதாதையர்களின் இழப்பை நினைவு கூர்ந்து மதிக்கிறார்கள். ஆர்மேனிய இனப்படுகொலை இந்த நூற்றாண்டின் மிக கோரமான கொடூரங்களில் ஒன்றாகும். ஒரு நூற்றாண்டு கடந்தும் அட்டூழியங்களால் ஏற்பட்ட வடுக்கள் அழுத்தமாக பதிந்துள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் முதலாவது பெரும் இனப்படு கொலையாக துருக்கியில் ஒட்டோமான் ஆட்சியில் ஆர்மேனியர்கள் மீது படுகொலை செய்யப்பட்டமை தான் வரலாற்றில் பதியப்பட்ட கோர நிகழ்வாகும். இந்த கொடூர சம்பவத்தை உலகமே இனப்படு கொலை என்று கூறியபோது, துருக்கி அதனை கடுமையாக எதிர்த்து

வருகிறது. ஆர்மேனிய இனப்படுகொலை இந்த நூற்றாண்டின் மிக கோரமான கொடூரங்களில் ஒன்றாகும். ஒரு நூற்றாண்டு கடந்தும் அட்டூழியங்களால் ஏற்பட்ட வடுக்கள் அழுத்தமாக பதியப்படுத்தப் பட்டுள்ளது.

ஒட்டோமான் படைகளால், திட்டமிட்ட வகையில், 15 லட்சம் ஆர்மேனியர்கள் கொல்லப்பட்டதாக ஆர்மீனிய வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும், ஏப்ரல் 24 அன்று உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான ஆர்மீனியர்கள் ஆர்மேனிய இனப்படுகொலை என்று அழைக்கப்படும் பயங்கரமான நிகழ்வில் இறந்த தங்கள் மூதாதையர்களின் இழப்பை நினைவு கூர்ந்து மதிக்கிறார்கள்.

இந்த இரத்தக்களரி நிகழ்வின் பின்னர் ஆர்மேனிய இனப்படுகொலையை உலகின் பல நாடுகள் அங்கீகாரம் அளித்தாலும், ஆர்மேனிய இனப்படுகொலையை இன்னமும் பல நாடுகள் அங்கீகரிக்க தயங்குகின்றன.

**ஆர்மேனிய இன அழிப்பு:**

ஆர்மேனிய இனப்படுகொலை அல்லது ஆர்மேனிய பெரும் இனவழிப்பு (Armenian Genocide) என்பது ஒட்டோமான் பேரரசுக் காலத்தில் ஆர்மீனியர்களை வலிந்து திட்டமிடப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு ஆகும். இது முதலாம் உலகப் போருக்குப் பின்னர் நிகழ்ந்தது.

பெரும் படுகொலைகளாகவும், சாவுக்கு இட்டுச்சென்ற வெளியேற்றங்களாகவும் இது நிகழ்ந்தது. இதில் ஒன்றரை மில்லியன் ஆர்மேனியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இக்காலப் பகுதியில் ஆர்மேனியர்களைத் தவிர அசேரியர்கள், மற்றும் கிரேக்கர்களும் ஒட்டோமான் பேரரசினால் படுகொலை செய்யப் பட்டனர்.

இவ்வினப்படுகொலை 1915 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் நாள் ஆரம்பமாகியது. இந்நாளில் முதலாவதாக ஆர்மேனியக் கல்விமான் கள் மற்றும் சமூகத் தலைவர்கள் 250 பேரை ஒட்டோமான் இராணுவத்தினர் கொன்ஸ்டண்டீனப்போல் நகரில் கைது செய்தனர்.

அதன் பின்னர் ஒட்டோமான் இராணுவத்தினர் ஆர்மேனியப் பொதுமக்களை அவர்களின் இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றி பல நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள பாலைநிலத்துக்கு (தற் போதைய சிரியா) நடைப்பயணமாக அழைத்துச் சென்றனர். அவர்களுக்கு உணவோ, நீரோ வழங்கப்படவில்லை. வயது, மற்றும்



*பால் வேறுபாடின்றிப் பலர் படுகொலை செய்யப்பட்டனர்.*

*பெரும்பான்மையான ஆர்மேனியர்கள் புலம்பெயர்ந்து பல நாடுகளில் வசிப்பது இப்படுகொலைகளில் இருந்து தப்பியவர்களே.*

**இருபதாம் நூற்றாண்டில் முதல் இனப்படுகொலை.**

*ஒட்டோமான் பேரரசின் பின்னர் ஆட்சிக்கு வந்த துருக்கிக் குடியரசு இந்நிகழ்வை இனப்படுகொலை எனக் கூறுவதை மறுத்து வருகிறது. அண்மைக் காலத்தில், இந்த இனப்படுகொலைகளை அங்கீகரிக்கப் பல நாடுகளும் அமைப்புகளும் துருக்கியைக் கோரி வருகின்றன. இது வரையில் 20 நாடுகள் இக்காலப்பகுதியில் இடம் பெற்ற படுகொலைகள் இனப்படுகொலைகளே என அதிகாரபூர்வ மாக அறிவித்துள்ளன.*

*இருபதாம் நூற்றாண்டில் நடந்த இனப் படுகொலையை அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் 29 அக்டோபர் 2019 அன்று ஏற்றுக்கொண்டது.*

*20-ஆம் நூற்றாண்டில் தற்கால துருக்கியின் பேரரசு தன் படைபலத்தால் ஆர்மேனிய மக்களைக் கொன்றது இனப்படு கொலையே என்று தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் துருக்கி நாட்டு அதிபர் ஆர்மேனிய இனப்படுகொலைக்கு எச்சான்றும் இல்லை என மறுத்துள்ளார்.*

**ஆர்மேனிய இனப்படுகொலை பின்னணி:**

*பதினைந்தாம் நூற்றாண்டு முதல், ஒட்டோமான் சாம்ராஜ்யத்திற்குள்ளே, ஆர்மேனிய இனத்தவர்கள் ஒரு குறிப்பிடத்*

*தக்க சிறுபான்மை மக்கள் குழுவாக வாழ்ந்தனர். சுன்னி முஸ்லீம்கள் இருந்த ஒட்டோமான் துருக்கிய ஆட்சியாளர்களைப் போலன்றி, ஆர்மேனியர்கள் பழமைவாத கிறிஸ்தவர்கள் ஆவார்.*

*அக்காலத்தில் ஆர்மேனிய குடும்பங்கள் கடும் வரி விதிப்புக்கு உட்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒட்டோமான் ஆளும் சக்தி மற்றும் கலாச்சாரம் வீழ்ச்சியடைந்த நிலையில், வெவ்வேறு மதங்களின் உறுப்பினர்களுக்கிடையேயான உறவுகள் மோசமடையத் தொடங்கியது.*

*பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகியவற்றின் அழுத்தத்தை எதிர்கொண்ட ஒட்டோமான் அரசாங்கம் அதன் கிறிஸ்தவ பகுதிகளை கையாளுவதற்கு அழுத்தம் அதிகரித்தது. அத்துடன் இந்த விஷயங்களை மோசமாக்குவதற்கு, மற்ற கிறிஸ்தவப் பகுதிகள் முற்றிலுமாக பேரரசை விட்டு விலகிப்போயின.*

*குறிப்பாக கிரேக்கம், பல்கேரியா, அல்பேனியா, செர்பியா இனத்தவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி இருபதுகளில் ஒட்டோமான் கட்டுப்பாட்டிலிருந்து பிரிந்து சென்றனர்.*

*ஆயினும் ஆர்மேனிய மக்கள் 1870களில் பாரிய முறையில் கடுமையான ஓட்டோமான் ஆட்சியின் கீழ் அமைதியற்றவர்களாகி விட்டனர். ஆர்மேனியர்கள் ரஷ்யாவைப் நோக்கி செல்ல ஆரம்பித்தார்கள். இதன்பின்னர் அவர்கள் பல அரசியல் கட்சிகள் மற்றும் சுய பாதுகாப்புக் கழகங்களை உருவாக்கினர். ஒட்டோமான் சுல்தான் அப்துல் ஹமீத் கிழக்கு துருக்கியில் உள்ள ஆர்மேனிய பகுதிகளில் வேண்டுமென்றே வன்முறையை தூண்டியதுடன், வரிகளை உயர்த்தினான்.*

*1894-96 ஆம் ஆண்டில் ஹமிடான் படுகொலைகளில் உச்சக் கட்டத்தை அடைந்தன. அதில் 300,000 ஆர்மேனியர்கள் இறந்தனர்.*

**கலகத்தனமான 20 ஆம் நூற்றாண்டு:**

*ஜூலை 24, 1908 இல், இளம் துர்க் புரட்சி சுல்தான் அப்துல் ஹமீத் ஐஐ பதவியிலிருந்து நீக்கப்பட்டதோடு ஒரு அரசியலமைப்பு முடியாட்சி நிறுவப்பட்டது. ஒட்டோமான் அரசில் ஆர்மேனியர்கள் புதிய, நவீனமயமாக்கல் ஆட்சியின் கீழ் மிகவும் நியாயமான முறையில் நடத்தப்படுவார்கள் என்று நம்பினர்.*

*அடுத்த ஆண்டு வசந்த காலத்தில், இளம் துருக்கியர்களுக்கு எதிராக இஸ்லாமிய மாணவர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளால் உருவாக்கப்பட்ட ஒரு சதித்திட்டம் எழுந்தது.*




**பால்கன் போரில் ஓட்டோமான் பேரரசு தோல்வி:**

*1912 ஆம் ஆண்டில், ஓட்டோமான் பேரரசு பால்கன் போரில் தோல்வி அடைந்தது. அதன் விளைவாக ஐரோப்பாவில் அதன் நிலத்தை 85% இழந்தது. அதே சமயம், இத்தாலி பேரரசில் இருந்து கடலோர லிபியாவை கைப்பற்றியது. இழந்த பிரதேசங்களிலிருந்து வந்த முஸ்லீம் அகதிகள், அவர்களில் பெரும்பாலோர் பால்கன் நகரத்தில் வெளியேற்றப்பட்ட மற்றும் இனவழிச் சுத்திகரிப்புக்கு பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.*

*அசௌகரியத்திற்கு உள்ளான அகதிகளில் 850,000 வரை, பால்கன் கிறிஸ்துவர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு, அன டோலியாவின் ஆர்மேனிய மேலாதிக்க பகுதிகள் அனுப்பப்பட்டனர்.*

**முதலாம் உலகப் போர் :**

*முதலாம் உலகப் போரில் ஆர்மேனிய மக்களின் பாதுகாவலர்களான ஜெனரல் நிக்கோலை யூடியெனின் கீழ் இருந்த ரஷ்ய படையால் 1915 மே மாதம் பல நகரங்கள் விடுவிக்கப்பட்டது.*

*இந்த ரஷ்ய தலையீடு மீதமுள்ள ஒட்டோமான் நிலங்களில் ஆர்மேனியர்களுக்கு ஆதரவாக துருக்கியின் பார்வையில் இருந்து, ஆர்மேனியர்களை விடுவிக்க ஒத்துழைத்தனர்.*

**ரெட் சண்டே தூக்குமேடை :**

*கான்ஸ்டான்டிநோபில், ஓட்டோமான் அரசாங்கம் ஏறக்குறைய 250 ஆர்மேனிய தலைவர்களும் புத்திஜீவிகளும் ஏப்ரல் 23*

*மற்றும் **24, 1915** அன்று கைது செய்தது. அவர்கள் தலைநகரிலிருந்து நாடு கடத்தப்பட்டு, பின்னர் தூக்கிலிடப்பட்டனர். இது ரெட் சண்டே சம்பவம் என்று அழைக்கப்படுகிறது.*

*அத்துடன் அந்த நேரத்தில் காலபோலியில் படையெடுத்து வந்த நேச நாடுகளின் சக்திகளுடன் தொடர்புபடுத்து ஆர்மேனியர் களை குற்றம்சாட்டி பலர் தூக்கிலிடப்பட்டனர்.*

***1915** மே **27** ஆம் தேதி ஒட்டோமன் பாராளுமன்றம் தெஹ்ரிக்கர் சட்டத்தை நிறைவேற்றியது, நாடு தழுவிய முழு இன ஆர்மேனிய மக்களை கைது செய்தல் மற்றும் நாடுகடத்தலுக்கு அனுமதித்தது.*

***1915** ஆம் ஆண்டு ஜூன் **1** ஆம் தேதி இந்த சட்டம் நடை முறைக்கு வந்தது. இதன் பின் செப்டம்பர் **13, 1915** இல் "கைவிடப் பட்ட சொத்துகள் சட்டம்" இரண்டாவது சட்டமானது, ஒட்டோ மான் அரசாங்கத்திற்கு நிலம், வீடுகள், கால்நடைகள் நாடு கடத்தப் பட்ட ஆர்மேனியர்களுக்குச் சொந்தமான சொத்தை அபகரிக்க அங்கீகரித்தது. இந்த நடவடிக்கைகள் தொடர்ந்த இனப்படு கொலைக்கு மேடை அமைத்தன.*

**ஆர்மேனிய இனப்படுகொலை:**

*துருக்கிய படையால் நூறாயிரக்கணக்கான ஆர்மேனியர்கள் சிரிய பாலைவனத்தில் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றனர். உணவு அல்லது தண்ணீர் இல்லாமல் பலர் இறந்தும் விட்டனர்.*

*சிரியாவிற்கும் ஈராக்கிற்கும் இடையே துருக்கிய எல்லை களைச் சுற்றி, தொடர்ச்சியான **25** சித்திரவதை முகாம்களில் புல், மூலிகைகள், வெட்டுக்கிளிகளையே சாப்பிட்டனர். அங்கே மரண விகிதம் பட்டினி மற்றும் நோய் இருந்து மிகவும் அதிகமாக இருந்தது.*

*ஆர்மேனியர்கள் நாடு கடத்தப்பட்டு சுமார் **5,000** கிராமங்களைச் சேர்ந்த கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மக்களின் உடலங்கள் ஒரு கட்டிடத்திற்குள் அடுக்கி வைக்கப்பட்டன.*

*டிராப்சன் மாகாணத்தில், ஆர்மீனிய பெண்கள் மற்றும் சிறுவர்கள் படகுகளில் ஏற்றப்பட்டு, கருங்கடலுக்கு வெளியே கொண்டு செல்லப்பட்டு பின்னர் மூழ்கடிக்கப்பட்டனர்.*

*இறுதியில், **600,000** முதல் **1,500,000** வரையான ஆர்மேனியர்கள், பஞ்சம், பட்டினியால் இறந்தனர். ஆயினும் துருக்கி அரசாங்கம் இதனை பதிவு செய்யவில்லை. அதனால் பாதிக்கப் பட்டவர்களின் சரியான எண்ணிக்கை அறியப்படவில்லை. ஆயினும் ஜேர்மனிய தரவுப்படி துணை கான்ஸல் மேக்ஸ் எர்வின் வான்*

*ஸ்க்புப்னெர் ரிக்ட்டர் 1,000,000 ஆர்மீனியர்களை படுகொலை செய்ததாக மதிப்பிட்டுள்ளார்.*

**இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்ற விசாரணை :**

*ஒட்டோமான் சாம்ராஜிய படுகொலைகளுக்கு பொறுப்பாளர் களை ஒப்படைக்கும்படி செவ்ரெஸ் உடன்படிக்கையில் (1920) நேச நாடுகள் கோரின. பல ஒட்டோமான் அரசியல்வாதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் நேச நாட்டு சக்திகளிடம் சரணடைந்தனர். அவர்கள் மூன்று வருடங்களாக மால்டாவில் விசாரணை செய்யப்பட்டனர்.*

*போலந்தில் 1943 இல், சட்டப் பேராசிரியரான ரபேல் லெம்மிக், ஆர்மேனிய இனப்படுகொலை பற்றிய ஒரு விளக்கத்தினை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். ஆர்மேனிய இனப்படுகொலை இன்று 20 ஆம் நூற்றாண்டின் மிக கொடூரமான கொடூரங்களில் ஒன்றாகும், இந்த நூற்றாண்டின் கோர வடுக்கள் நிறைந்த அட்டூழியங்களால் பதியப் படுத்தப்பட்டுள்ளது.*

# 07

# செச்சினியா – நீறு பூத்த நெருப்பாக :

## குமுறும் கவ்காஷிய மலைகளும்...
## தொடரும் ரஷ்யாவின் ஆதிக்கமும்...



*செச்சினியா பிரச்சனை இன்று நேற்று வந்ததல்ல, அது சுமார் முன்னூறு ஆண்டு கால பிரச்சனையாக குமுறும் கவ்காஷிய மலைகளில் நீறு பூத்த நெருப்பாக இன்னமும் எரிந்து கொண்டே இருக்கிறது.*

**முன்னூறு ஆண்டு கால பிரச்சனை:**

*அன்று ரஷ்யாவின் ஜார் (Czar) ஆட்சியாளர்களின் படைகள் செச்சினியர்களின் நிலங்களை 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆக்கிரமைக்க ஆரம்பித்த பிரச்சனை இன்னமும் தொடர்கிறது. இன்று வரை பல ஆட்சியாளர்கள் மாறிவிட்டார்கள், ஆனால் செச்ன்னியர்களுக்கு அவர்கள் நிலப்பகுதி மட்டும் திரும்ப கிடைக்கவில்லை.*

*அன்றிலிருந்து இன்று வரை லட்சக்கணக்கான மக்களை இந்த விடுதலை போராட்டத்திற்கு அவர்கள் பறிகொடுத்து விட்டனர்.*

*1991 இல் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் செச்சினியா விடுதலையை நாடியது. ரஷ்யாவுடனான முதலாவது செச்சினியப் போரின் போது (1994-1996) செச்சினியரல்லாத சிறு பான்மையோர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். பின்னர் அது நிழல் அரசை அறிவித்தது. ஆனாலும் 1999 இல் இடம்பெற்ற இரண்டாம் போரின் பின்னர் ரஷ்யா தனது மத்திய அரசின் கட்டுப் பாட்டில் செச்சினியாவைக் கொண்டுவந்தது.*

*ரஷ்யாவோடு எல்லையைக் கொண்டுள்ள மத்திய ஆசியாவின் முஸ்லிம் பிராந்தியமான செச்னியா சுமார் 12300 சதுர கிலோமீற்றர் பரப்பளவு மட்டுமே கொண்டது. இங்கு வாழும் மக்கள் தொகை 1.5 மில்லியன்.*


*செச்சினியா கிட்டத்தட்ட எல்லா பக்கங்களிலும் ரஷ்ய பிரதேசத்தால் சூழப்பட்டுள்ளது, வடக்கு கவ்காசஸ் மலைத்தொடரில் வடமேற்கே ஸ்தாவ்ரபோல் பிரதேசம், வடகிழக்கு மற்றும் கிழக்கில் தாகெஸ்தான் குடியரசும், தெற்கில் ஜோர்ஜியா, மேற்கே இங்கு ஷேத்தியா மற்றும் வடக்கு அசேத்தியா ஆகிய ரஷ்யக் குடியரசுகளும் அமைந்துள்ளன.*

**நிரந்தர அமைதி மற்றும் பாதுகாப்பு:**

*நீண்ட கால போரின் பின்னர் நிரந்தர அமைதி மற்றும் பாதுகாப்பு தான் இப்போது செச்சினியா மக்களுக்கு தேவை என்றும் கூறுகின்றனர். பெரும்பாலான செசன்ய மக்களை பொறுத்தவரை இந்த நிரந்தர அமைதி மற்றும் பாதுகாப்பு என்பது செச்சினியா சுதந்திர நாடாவதால் மட்டுமே சாத்தியம் என்றும் கருதுகின்றனர்.*

*ஆயினும் ரஷ்ய சம்மேளனத்தின்* (Russian Federation) *முடிவோ, அவர்களது மண்ணில் இருந்து ஒரு பகுதி பிரிவதை அனுமதிக்க முடியாது என்பதில் திடமாக இருந்தனர்.*

*ரஷ்யா என்னதான் செச்சினியா தங்களது பகுதி என்று சொன்னாலும், செச்சினியா மக்களை பொறுத்தவரை அவர்கள் என்றுமே தங்களை ரஷ்யாவின் ஒரு பகுதியாக நினைத்ததில்லை, அத்துடன் விரும்பியதில்லை. மேலும் செச்சினியா ரஷ்யாவின் நிலப்பகுதியும் இல்லை என்றும் வாதிடுகின்றனர். செசன்னியர்களை பொறுத்தவரை, ரஷ்யா தன் இராணுவ பலத்தால் அவர்களை தன் கட்டுபாட்டுக்குள் வைத்திருக்கிறது எனக் கருதுகின்றனர்.*




**சோவியத் ஒன்றிய பிளவு :**

சோவியத் ஒன்றிய பிளவின் பின்னர் 1991 ஆம் ஆண்டு கால கட்டத்தில் தாங்கள் ஒரு சுதந்திர நாடு என்று செச்னியர்கள் அறிவித்து கொண்டார்கள். அதன் பின் ரஷ்ய கூட்டரசிற்கும், செச்னியாவிற்கும் இடையே இரு யுத்தங்கள் தொடர்ந்து மறுபடியும் செச்சினியா, ரஷ்ய கூட்டரசு ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

ரஷ்ய தேசம் ஐரோப்பாவின் கிழக்கிலிருந்து ஆசியாவின் கிழக்கு வரை பரந்து விரிந்த பகுதி. ரஷ்ய அரசியல் சாசனத்தின்படி, ரஷ்யா, 83 பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. (83 federal members of Federation). அவற்றில் 21 குடியரசுகள் (Republics) உள்ளன.

1991 இல் ரஷ்ய சம்மேளனம் உருவான போது, ரஷ்யாவில் இருந்த வெவ்வேறு இனத்தவருக்கு (உதாரணத்திற்கு செச்னியர்கள்) அவர்கள் சார்ந்த இனம், மொழி வாரியாக குடியரசுகள் உருவாக்கப் பட்டன.

இந்த குடியரசுகள் சுதந்திர நாடுகள் கிடையாது. இவை ரஷ்யாவின் கட்டுபாட்டுக்குள்லேயே இருந்தன. ரஷ்யாவின் ஒரு பகுதியாகவே அறியப்படும்.

**ரஷ்ய சம்மேளனமும் குடியரசுகளும் :**

ஆனால் ரஷ்ய சம்மேளனத்தின் மற்ற பகுதிகளை விட இவற்றுக்கு அதிகாரம் அதிகம். இந்த குடியரசுகளுக்கு தன்னாட்சி அதி காரமும் (Autonomous) உண்டு. ஒவ்வொரு குடியரசும் தங்களுடைய அரசியல் சாசனத்தை (Constitution) உருவாக்கி கொண்டது. பாராளு

*மன்றம், குடியரசு அதிபர் என்று ஒரு நாட்டிற்கு இருக்கக்கூடிய எல்லா பதவிகளும் உள்ளன. குடியரசின் உள்விவகாரங்களை (Internal Affairs) எல்லாம் அவர்களே பார்த்துக் கொள்வார்கள்.*

*ஆனால் வெளியுறவு மற்றும் ராணுவ அதிகாரங்கள் (External Affairs and Military) எல்லாம் ரஷ்யாவிடம் இருக்கும்.*

*அதுமட்டுமல்லாமல், இந்த குடியரசுகளின் அதிபரை, ரஷ்ய அதிபர் தான் தேர்ந்தெடுப்பார். ஆனாலும் இன்றைய அதிபர் புடின் அவர்கள் ரஷ்யாவின் தலைமை பொறுப்புக்கு வந்த பிறகு குடியரசுகளின் அதிகாரங்களை பெருமளவு குறைத்து விட்டார்.*

**ரஷ்யாவின் அச்சம்:**

*வரலாற்றில் சோவியத் யூனியனில் (USSR) இருந்து பிரிந்து சென்ற **14** நாடுகளும் **(1991)**, சோவியத் யூனியனின் குடியரசுகளாக இருந்தவைதான். இதுதான் இன்றைய ரஷ்யாவின் மற்றுமொரு அச்சம். தற்போது ரஷ்ய கூட்டரசின் பகுதிகளாக உள்ள குடியரசுகளும் சுதந்திரம் கேட்க ஆரம்பித்து விட்டால் ரஷ்யாவின் நிலை என்ன ஆகலாம் என அச்சமடைந்துள்ளனர்.*

*பிரிவினை ஆரம்பித்துவிட்ட சமிக்ஞையாக, ஏற்கனவே சுதந்திர கோஷமும் துவங்கிவிட்டது. செசன்யாவில் தான் இது மிக அதிகம் என்றாலும் மற்றய குடியரசுகளிலும் (குறிப்பாக செச்னியாவை சுற்றியுள்ள குடியரசுகளான இங்குஷேடியா (Ingushetia) மற்றும் டகெஸ்டான் (Dagestan)) ஆங்காங்கே கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.*

*முதலில் **1785 - 1791**ல் ரஷ்யர்களுடனான செச்ன்யர்களின் மோதல் ஆரம்பித்தது. அப்போது ரஷ்யா தன் நிலப்பகுதிகளை விரிவுப் படுத்த ஆரம்பிக்க, அதன் ஒரு பகுதியாக காகசஸ்சை ஆக்கிர மிக்க தொடங்கியது. ஆனால் ஆக்கிரமிப்பு என்பது சுலபத்தில் முடிந்துவிடவில்லை. ரஷ்ய படைகள் மிகப்பெரிய விலையை கொடுக்க வேண்டி வந்தது. ஏனென்றால் அந்த பகுதியில் இருந்த மக்களின் போர்த் திறமையும், கொரில்லா யுத்த முறைகளுக்கு பேர் போனவர்களாக இருந்தனர். இன்று வரை மலைப்பகுதியில் செச்னியர்களை தோற் கடிப்பது என்பது ரஷ்ய படைகளுக்கு முடியாத காரியமாகவே உள்ளது.*

**ரஷ்ய அரசின் ஆட்சி :**

*இதன் பிறகு **1834** முதல் **1859** வரை, ஷேக் மன்சூர் விட்டுச்சென்ற பணியை இமாம் ஷமீல் (Imam Shameel) தொடர்ந்தார்.*



*கடுமையான யுத்தத்திற்கு பிறகு **1859** ல், ரஷ்ய படை காகசஸ் பகுதியை முழுமையாக ஆக்கிரமைத்து ரஷ்ய அரசின் ஆட்சி தொடங்கியது. தங்கள் நிலப்பகதிகளை மீட்க போராட ஆரம்பித்த செச்னியர்கள், இன்றளவும் தங்கள் நிலத்தை மீட்க போராடிக் கொண்டிருக்கிறார்கள்.*

*இதன் பின் **1917** ஆம் ஆண்டு, ரஷ்ய புரட்சிக்கு பிறகு தங்களை சுதந்திர நாடாக செசன்னியர்கள் பிரகடனப்படுத்திக் கொண்டார்கள்.*

*ஆனால் அது நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. ரஷ்ய படைகள் மறுபடியும் (சோவியத் படைகள்) **1923**-இல் செச்ன்யாவையும் இங்கு ஷேடியாவையும் சேர்த்து செச்சினியா - இங்குஷேடிய தன்னாட்சி பகுதி* (Chechen-Ingush Autonomous Region) *உருவாக்கப்பட்டது.*

*பிறகு இதுவே **1930**-இல், செச்சினியா - இங்குஷேடிய தன்னாட்சி குடியரசு* (Chechen-Ingush Autonomous Republic) *என்று மாறியது.*

***1917**ல் சோவியத் உருவாக்கத்தின் பிறகு தம்மை விடுவிததுக் கொள்வதற்காக செச்சினிய மக்கள் அவ்வப் போது நடத்திய போராட்டங்களும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. அதன் தொடராக **1922**ல் செச்னியா சோவியத்தின் ஒர் அங்கமாக குடியரசானது.*

**இரண்டாம் உலகப்போர் :**

***1944**-ஆம் ஆண்டு, தங்கள் விடுதலைக்காக, ஹிட்லரின் நாஜி படைகளுக்கு செசன்யர்கள் உதவுவதாக ஸ்டாலின் குற்றஞ் சாட்டினார். அதற்கு தண்டனை என்று, செச்சினியா மக்களை கஜகஸ்தானுக்கும், சைபீரியாவிற்கும் நாடு கடத்த உத்தரவிட்டார்.*

*1944ல் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட செச்னியர்கள் இங்குஷ் மற்றும் வட கோகாஷிய மக்கள் இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்டு சைபீரியா மற்றும் மத்திய ஆசியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.*

*1991ல் சோவியத் யூனியன் சரிவடைந்த பிறகு ரஷ்ய கூட்டமைப்பில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட சுதந்திரப் போராட்டத்தை செச்சினியா மக்கள் மீள மீண்டும் தொடங்கினர்.*

*1991 ஆகஸ்ட்டில் செச்சினியா அரசியல் வாதியும் முன்னாள் சோவியத்தின் விமாப் படை ஜெனரலுமான ஜகார் டுடாயேவ் என்பவர் உள்ளூர் கம்யூனிஸ அரசுக்கு எதிராக ஒரு சதிப் புரட்சியை மேற்கொண்டார்.*

*1991 அக்டோபரில் ஜகார் டுடாயேவ் செச்னியாவின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். நவம்பர் மாதத்தில் அவர் செச்னியா ரஷ்யாவிடம் இருந்து சுதந்திரம் பெற்று விட்டதாக ஒரு தலைப்பட்சமாகப் பிரகடனம் செய்தார்.*

**1994 முதல் யுத்தம் :**

*1994 டிசம்பர் 11ல் ரஷ்யா செச்னியாவை மீண்டும் ஆக்கிர மித்தது. விரைவாக 1995 மார்ச்சில் ரஷ்யப் படைகள் செச்னியாவின் தலைநகரான குரொஸ்னியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். அதன் பிறகு 1996 ஏப்பிரல் 21ல் ஜகார் டுடாயேவ் ரஷ்யாவின் இலக்கு வைக்கப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.*

*அதன் பிறகு முன்னாள் கெரில்லாத் தலைவர் அஸ்லன் மஷ்கடோவ் செச்னிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். 1997 மே இல் அன்றைய ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ஸ்டின் மற்றும் அஸ்லான் மஷ்கடோவ் ஆகியோர் ஒரு இடைக்கால சமாதான உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர். ரஷ்யாவுக்கு எதிராக செச்னியா வில் இரண்டு ஆயுதப் போராட்டங்கள் நடந்துள்ளன. ஒன்று 1994 டிசம்பர் முதல் 1996 ஆகஸ்ட் வரை நீடித்தது.*

*1996 நவம்பர் நடுப்பகுதியில் யெல்ட்ஸின் மற்றும் மஷ்கடோவ் ஆகியோர் பொருளாதார உறவுகள் மற்றும் 1994 முதல் 96 வரையான யுத்தக் காலத்தில் பாதிக்கப்பட்ட செச்னிய மக்களுக்கான இழப்பீடுகள் என்பன தொடர்பான ஒரு உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர்.*

*1997 மே 12ல் செச்னியாவின் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அஸ்லான் மஷ்கடோவ் மொஸ்கோவுக்கு விஜயம் மேற்கொண்டார். அங்கு அவர் ரஷ்ய ஜனாதிபதியுடன் ரஷ்யா செச்னியா உறவுகள் பற்றிய*

*கொள்கைகளும் சமாதானமும் என்ற உடன்படிக்கையில் முறைப்படி ஒப்பமிட்டார்*

**1999இல் இரண்டாவது போர்**

*இரண்டாவது போர் 1999 ஆகஸ்ட் ஆரம்பித்தது. இவ்விரு போராட்டங்களின் போதும் சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான செச்னிய மக்கள் கொல்லப்பட்டனர் நான்கு லட்சத்துக்கும் அதிக மானவர்கள் தங்களது சொந்த இருப்பிடங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இருந்தாலும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகம் என்றே கருதப்படுகின்றது.*

**அதிக சுயாட்சி :**

*நீண்ட போர்களின் பின்னர் 2003 புதிய ரஷ்ய அரசியலமைப்பு செச்சினியாவுக்கு அதிக சுயாட்சியை அளித்தது. ரஷ்ய கூட்டமைப் பிற்குள் அதன் அந்தஸ்தை உள்ளடக்கியதாக, அக்மத் கதிரோவ் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2004 ஜனாதிபதி கதிரோவ் வெடிகுண்டு மூலம் கொல்லப்பட்டார்.*

*2005 மார்ச் பிரிவினைவாதத் தலைவர் அஸ்லான் மஸ்கடோவ் ரஷ்யப் படைகளால் கொல்லப்பட்டார். இதன் பின் 2006 மார்ச் படு கொலை செய்யப்பட்ட ஜனாதிபதி அக்மத் கதிரோவின் மகன் ரம்ஜான் கதிரோவ் பிரதமரானார். 2006 ஜூலை ரஷ்யாவின் பரம வைரி ஷமில் பசாயேவ், அண்டை நாடான இங்குஷெட்டியாவில் நடந்த வெடி விபத்தில் இறந்தார். நீண்ட கால இரண்டு மோசமான போர் அழிவை ஏற்படுத்திய மோதல்களில் குரொஸ்னி நகரம் உலகின் மிகவும் உருக்குலைக்கப் பட்ட நகரமாக மாற்றப்பட்டுள்ளது. தலைநகர் குரொஸ்னி தான் இந்த மோதல்களின் மத்தியப் புள்ளியாக என்றும் இருந்துள்ளது. 2003ம் ஆண்டளவில் இந்த நகரில் சேதமடையாத கட்டிடங்களே இல்லை என்று கூறும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருந்தது.*

**புட்டினின் புனரமைப்பு :**

*அதன் பிறகு, போர் முடிவில் குரொஸ்னி நகரம் ரஷ்ய நிதி உதவித் திட்டத்தின் கீழ் புதுத் தோற்றம் பெறும் வகையில் மீள் கட்டமைப்புக்கும் உற்படுத்தப்பட்டுள்ளது.*

*ஒரு காலத்தில் யுதத்தால் பாதிக்கப்பட்ட இந்த நகரில் இன்று வானை முட்டும் அளவுக்கு உயரமான நவீன கட்டிடங்களைக் காண முடிகின்றது. இங்கு தான் ரஷ்யாவின் மிக உயரமான மினாரத் கோபுரத் தைக் கொண்ட மிகப் பெரிய பள்ளிவாசலும் அமைந்துள்ளது.*

புட்டினின் அரசால் புனரமைப்பு என கட்டப்பட்ட இப்பள்ளிவாசல் செச்னியாவின் இதயமாக இதுவே கருதப்படுகின்றது.

கடந்த 20 ஆண்டுகளாக நடந்த போரில் மட்டும் ஐந்தில் ஒரு செச்சினியர் உயிரிழந்திருக்கின்றனர். எண்ணற்றவர்கள் அகதிகளாய் வெளியேற்றப்பட்டிருக்கின்றனர். ஆயுனும் ரஷ்யா தன் முடிவில் உறுதியாய், தனக்கு ஆதரவான அரசாங்கத்தை செசன்யாவில் நிறுவி யுள்ளது. 2004 இருந்து இன்றுவரை ரஷ்யா அமைத்துள்ள பொம்மை அரசாங்கம் (Puppet Government) தான் செசன்யாவில் செயற்பட்டு வரு கிறது. 2009 ஆம் ஆண்டு ஏப்ரலில் ரஷ்யா தன் படைகளை செச்னியாவி லிருந்து திரும்பப்பெற்றது. அதேபோல் செச்சினிய போராட்டகாரர் களும் ஆகஸ்ட் 2009இல் சண்டையை நிறுத்தி உள்ளதாக அறிவித் துள்ளனர்.

ரஸ்யாவின் வரலாற்றில் நடந்த நீண்ட கால உள்நாட்டு போரின் பின் செச்னியாவை தன்னுள் வைத்திருக்க முழு முதற்காரணம் அந்த பகுதியின் இயற்கை வளம் மற்றும் கஸ்பியன் கடலில் கண்டெடுக் கப்பட்டுள்ள எண்ணெய் வளம் ஆகும். அத்துடன் செச்னியா பிரிந்து சுதந்திரம் அடைந்து விட்டால் அது ரஷ்யாவிற்கு தர்ம சங்கடமான நிலையைத் தரும்.

செச்னியா பிரிந்து விடுதலை பெற்றால் மற்றய குடியரசுகளை பிரிவினைக்கு தூண்டிவிட்டதாய் அமையும் என ரஷ்யா அஞ்சுகிறது. மற்றும் அடிப்படைவாத இஸ்லாமிய ஆட்சி கவ்காஸ் பிராந்தியத்தில் அமைந்து விடும் என்றும் ரஷ்யா அச்சமடைகிறது.

இன்றைய உக்ரேனிய போர் சூழ்நிலையில் மட்டுமன்றி, அன்றைய காலத்திலும் ரஷ்யா செச்ன்னியர்களுடன் போராடுவதை விரும்பவில்லை. அவர்களால் செச்ன்னியர்களை முழுமையாக வெற்றிக்கொள்ளவும் முடியாது. நிலப்பகுதிகளில் வேண்டுமானால் அவர்கள் ஆதிக்கம் செய்யலாம். ஆனால் காவ்கஷ் மலைப்பகுதிகலெ அவர்களால் என்றும் வெற்றி பெறமுடியாது.

தற்போது செச்சினியாவில் அமைதி நிலவினாலும் எப்போதா வது செச்னியர்கள் மலைகளிலிருந்து படையோடு வருவார்கள் என்ற அச்சம் இருந்து கொண்டேதானிருக்கும் (ஏனென்றால் 1996 ஆம் ஆண்டு இப்படித்தான் நடந்தது). ரஷ்யா, இதையெல்லாம் நன்கு உணர்ந்தேயிருக்கிறது என்பதும் உண்மை.

ஒருவேளை, ரஷ்யா எதிர்பார்ப்பது போல, செச்னியர்கள் இன்று சமாதானமாக அமைதிக்கு திரும்பியிருந்தாலும், செச்சினியர் கள் கடந்த காலத்தை மறப்பார்களா என்பதுதான் இப்போது ரஷ்யாவிற்கு இருக்கும் மாபெரும் சவாலான கேள்வியாகும்.

# 08

# திரான்ஸ்னிஸ்ட்ரியா – சிக்கித் தவிக்கும் மக்கள் :

## மால்டோவா – உக்ரேனுக்கும் நடுவில்...
## வல்லரசுகளின் போர்சூழ் பகைமையில்...




*பலரும் அறியாத, ஐ.நாவால் அங்கீகரிக்கப்படாத பிரதேசமான திரான்ஸ்னிஸ்ட்ரியா - "Transnistria" கிழக்கு ஐரோப்பாவின் இன்னோர் உலைக்களமாக மாறும் அபாயமும் உள்ளது. உக்ரேனியப் போரின் எதிர் விளைவுகள் இங்கேயும் பிரதிபலிக்கும் சாத்தியங்கள் உள்ளன.*

**திரான்ஸ்னிஸ்ட்ரியா :**

*மால்டோவா நாட்டின் கிழக்கு பகுதியில் நீண்டகால இனச் சிக்கலும், தொடர்ந்த மனித உரிமை மீறல்களினலும் **1992**ஆம் ஆண்டில், ரஷ்ய மொழி பேசும் மக்கள் மால்டோவாவிலிருந்து பிரிந்து, திரான்ஸ்னிஸ்ட்ரியா* - Transnistria - *என்ற ஒரு பிராந்தியத்தை*

உருவாக்கினர். 1990 முன்னரே மக்கள் தொகையின் பெரும் பகுதியினர் ரோமானிய மால்டோவிய மொழி பேசாததால் புதிய மொழிச் சட்டங்கள் குறிப்பாக கொந்தளிப்பான சிக்கலை உருவாக்கின. இதை யடுத்து அதிகாரப்பூர்வ மொழியின் பிரச்சனை காரணமாக செப்டம்பர் 2, 1990 இல், ரஷ்ய மொழி பேசும் மக்களை பாதுகாக்கும் வண்ணம் திரான்ஸ்னிஸ்ட்ரியா என்ற தன்னாட்சி பிராந்திய அரசு உருவாக்க அறிவிக்கப்பட்டது.

திரான்ஸ்னிஸ்ட்ரியா அல்லது திரான்ஸ்-டினீஸ்டர் என்பது டினீஸ்டர் ஆற்றின் கிழக்குக் கரைக்கும் உக்ரைனுடனான மால்டோவாவின் எல்லைக்கும் இடையே உள்ள ஒரு குறுகிய நிலப் பரப்பாகும், இதில் சுமார் 500,000 ரஷ்யர்கள் மற்றும் உக்ரேனியர்கள் வசிக்கின்றனர்.

திரான்ஸ்னிஸ்ட்ரியா 1992 ஆம் ஆண்டு முதல் ரஷ்யாவின் ஆதரவு பெற்ற அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகிறது, சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, புதிதாக சுதந்திரம் பெற்ற மால்டோவா குடியரசு மற்றும் சோவியத் உறவுகளை பராமரிக்க விரும்பும் மக்களிடையே மோதல் ஏற்பட்டது.

திரான்ஸ்னிஸ்ட்ரியாவில் நிலையான பாதுகாப்பு இல்லாமையால் 1500 ரஷ்ய அமைதி காக்கும் துருப்புக்கள் நிலையெடுத்துள்ளனர். மால்டோவா கிழக்கு ஐரோப்பாவின் உக்ரேனியாவிற்கும் ருமேனியாவிற்கும் நடுவில் உள்ள தேசம். இம் மக்களில் பெரும்பான்மையானவர்கள் ருமேனிய இனக் குழுக்களை சேர்ந்தவர்களாவர். மால்டோவாவில் உக்ரேனிய மற்றும் ரஷ்ய வம்சாவளியைச் சேர்ந்த மக்களும் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

ரஷ்ய ஆதரவு கண்காணிப்பாளர்களால் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் படி திரான்ஸ்னிஸ்ட்ரியாவில் ரஷ்யா பேசும் மக்கள் மால்டோவன் அதிகாரிகளின் அடக்குமுறையை எதிர்கொள்கின்றனர்.

**திரான்ஸ்னிஸ்ட்ரியாவின் இருப்பிடம் :**

மால்டோவாவின் மற்ற பகுதிகளுடன் தொடர்புடைய திரான்ஸ்னிஸ்ட்ரியன் பிரதேசம், உக்ரைனின் எல்லையில் நிலத்தால் சூழப்பட்டுள்ளது. அனைத்து ஐநா உறுப்பு நாடுகளும் திரான் ஸ்னிஸ்ட்ரியாவை மால்டோவா குடியரசின் சட்டப்பூர்வ பகுதி யாகவே இன்றும் கருதுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையால் இன்னமும் அங்கீகரிக்கப்படாத பிராந்தியமாகவே உள்ளது.

ஜோர்ஜியாவில் இருந்து பிரிந்துள்ள தெற்கு ஒசேத்தியா,




*அப்காசியா ஆகிய அங்கீகரிக்கப்படாத மாநிலங்கள் மட்டுமே திரான்ஸ்னிஸ்ட்ரியாவை ஒரு இறையாண்மை பிராந்தியமாக அங்கீகரித்து உள்ளன.*

*1992 இல் மால்டோவாவிலிருந்து பிரிந்த இப்பிரதேசத்தில், டிராஸ்போல் அதன் அறிவிக்கப்பட்ட தலைநகராக உள்ளது. 2009 ஆம் ஆண்டு நிலவரப்படி, திரான்ஸ்னிஸ்ட்ரியாவின் மக்கள் தொகை சுமார் 555,000 மக்களைக் கொண்டுள்ளது.*

**நேட்டோவின் பின்தளமாக மால்டோவா:**

*உக்ரேனிய போரின் பின்னர் நேட்டோ இப்போது மால் டோவாவையும் ரஷ்யாவிற்கு எதிராக ஆயுதங்களை உயர்த்துமாறு கேட்டுக்கொள்கிறது என ரஷ்யத் தரப்பு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.*

*நேட்டோ மத்திய கிழக்கிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைக் காண விரும்பவில்லை என்றும், முதலில் அவர்கள் உக்ரைனை ரஷ்யாவுடன் போருக்குத் தூண்டினர், இப்போது அவர்கள் மால்டோவாவைத் தூண்டுகிறார்கள் என ரஷ்யத் தரப்பு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.*

**மால்டோவா நடுநிலமை :**

*ஆனாலோ மால்டோவா உக்ரைனில் நடக்கும் ரஷ்யாவின் போரில் இருந்து விலகி இருக்க ஒரு தெளிவான விருப்பத்தை காட்டியுள்ளது. மால்டோவா ஜனாதிபதி ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஆதரவானவர். ஆனால் நடந்துகொண்டிருக்கும் போரில் நடு நிலைமையை கடைப்பிடிப்பதை ஆணித்தரமாக வெளிப்படுத்தி யுள்ளார். மால்டோவாவை ரஷ்யாவுடனான மோதலுக்கு தள்ளும் முயற்சியில் நேட்டோ நாடுகள் முயல்வதாக ரஷ்யா தொடர்ந்தும் குற்றஞ்சாட்டியுள்ளது.*

*அத்துடன் ரஷ்ய சார்பு அரசால் நிர்வகிக்கப்படும் பிரதேச மான திரான்ஸ்னிஸ்ட்ரியாவில் சமீபத்திய குண்டு வெடிப்புகளை ரஷ்யா கண்டித்துள்ளது. இந்த மர்மமான தாக்குதல்களுக்கு திரான்ஸ்னிஸ்ட்ரியன் அதிகாரிகள் உக்ரைனைக் குற்றம் சாட்டி யுள்ளனர்.*

*ரஷ்யாவை போருக்கு இழுக்கும் முயற்சி என்று அழைத்தாலும், இக்குண்டு வெடிப்புகளுக்கு மால்டோவா அரசு யாரையும் குற்றம் கூறவில்லை. எவ்வாறாயினும், மால்டோவாவில் ரஷ்ய எதிர்ப்பு உணர்வை எப்படியாவது தூண்டுவதற்கு உக்ரைனும் மேற்கு நாடுகளும் இத்தகைய குண்டு வெடிப்புகளைப் பயன்படுத்துகின்றன என ரஷ்ய ஊடகங்கள் ஊகங்களை தெரிவிக்கின்றன.*

*இந்த சம்பவங்கள் அனைத்தும் "ரஷ்யாவால் தெளிவாக தயாரிக்கப்பட்டவை" என்றும் உள்வீட்டு வேலை என ஒரு மூத்த ஐரோப்பிய ஒன்றிய தூதர் குற்றம் சாட்டினார்.*

*உக்ரைன் படைகளால் ஆத்திரமூட்டும் வகையில் திரான்ஸ்னிஸ்ட்ரியாவை தாக்கி வருகிறது. ரஷ்யாவின் கட்டுப் பாட்டில் உள்ள பிரதேசத்தில் தொடர்ச்சியான வெடிப்புகள், போர் முழக்கமானது, இப்போது நேட்டோ அல்லாத தேசத்திற்கு பரவக் கூடும் என்ற அச்சத்தையும் எழுப்பியுள்ளது.*

**திரான்ஸ்னிஸ்ட்ரியா உருவாக்கம்:**

***1990** முதல் **1992** வரை திரான்ஸ்னிஸ்ட்ரியா மக்களுடன் ஒரு குறுகிய போரில் ஈடுபட்ட மோல்டோவா அரசு, பிரிவினைவாத இயக்கத்தை அடக்கி, திரான்ஸ்னிஸ்ட்ரியா மாநிலத்தை தங்கள் கட்டுப்பாட்டில் மீண்டும் ஒருங்கிணைக்க முயன்றனர்.*

*இரண்டாம் உலகப் போரின்போது, சோவியத் இராணுவம் அரசியல் கருத்து வேறுபாட்டிற்காக மால்டோவான்களை அதிகளவில் கட்டாயப்படுத்தி, அவர்களில் பலரை சைபீரியா மற்றும்*




*கஜகஸ்தானுக்கு நாடு கடத்தியது.*

*சோவியத் ஆட்சியின் கீழ், மால்டேவியன் பிராந்தியத்தில் ருமேனிய கலாச்சாரம் மிக்கதாக தனிமைப்படுத்தப்பட்டது. ரோமானிய மொழிக்கு பதிலாக சிரிலிக் (ரஷ்ய) எழுத்துக்களைத் திணித்தது. புதிய போக்குகள் மற்றும் சாத்தியமான எதிர்காலக் கொள்கைகளுக்கான இந்த எதிர்ப்பு திரான்ஸ்னிஸ்ட்ரியாவில் மிகவும் புலப்படும் விதத்தில் வெளிப்பட்டது.*

*இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, சோவியத் மால்டோவாவை உருவாக்கி அதை ருமேனிய மொழியிலிருந்து வேறுபடுத்தி, சிரிலிக் எழுத்துக்களை பயனபாட்டுக்கு கொண்டு வந்தது.*

**சோவியத் மால்டோவா உருவாக்கம் :**

*மால்டோவன் தலைநகரான சிசினாவை உருவாக்க பல மில்லியன் கணக்கான ரூபிளை சோவியத் அரசு அக்காலத்தில் முதலீடு செய்தது. **1990** களில் ரஷ்யாவிற்கு எதிரான கிளர்ச்சியின் பின்னர், மால்டோவா தனது முதல் ஜனநாயக தேர்தலை நடத்தியது, அதன் பின் பாராளுமன்றத்தையும் நிறுவியது.*

***1991** ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சோவியத் வீழ்ச்சியின் பின்னர் மால்டோவா அதிகாரப்பூர்வமாக சுதந்திரத்தை அறிவித்தது. அதே ஆண்டு ஆகஸ்டில் அவர்களின் முதல் அரசியலமைப்பையும் அங்கீகரித்தது.*

**மொழிப் போர் :**

*31 ஆகஸ்ட் 1989 அன்று, மால்டேவிய அரசு புதிய சட்டங்களை இயற்றியது. அவற்றில் ஒன்று சோவியத் யூனியனின் அதிகாரப்பூர்வ மொழியான ரஷ்ய மொழிக்குப் பதிலாக மால்டோவனை அதிகாரப்பூர்வ மொழியாக மாற்றியது. இது ஒரு மொழியியல் மால்டோ-ருமேனிய அடையாளத்தையும் குறிப்பிடுவதாக உணர்த்தப்பட்டது, இரண்டாவது சட்டம் லத்தீன் ருமேனிய எழுத்துக்களுக்குத் திரும்புவதை உறுதி செய்தது.*

*மால்டோவன் அல்லாத மக்கள் தொகையின் பெரும் பகுதியினர் ரோமானிய மால்டோவிய மொழி பேசாததால் புதிய மொழிச் சட்டங்கள் குறிப்பாக கொந்தளிப்பான சிக்கலை திரான்ஸ்னிஸ்ட்ரியாவில் உருவாக்கின.*

*இதையடுத்து அதிகாரப்பூர்வ மொழியின் பிரச்சனை காரணமாக செப்டம்பர் 2, 1990 இல், ரஷ்ய மொழி பேசும் மக்களை பாதுகாக்கும் வண்ணம் திரான்ஸ்னிஸ்ட்ரியா உருவாக்கப்பட்டது. இதனை டிசம்பர் 22, 1990 அன்று அன்றைய சோவியத் அதிபர் கோர்பச்சேவ் உத்தியோகபூர்வமாக பிரகடனப் படுத்தினார். இதனையடுத்து மால்டோவன் அதிகாரிகள் இந்த அறிவிப்புக்கு எதிராக திவிர நடவடிக்கை எடுத்தனர்.*

**சோவியத் வீழ்ச்சி:**

*1991 ஆம் ஆண்டு சோவியத் ஆட்சி வீழ்ச்சியின் பின்னர் மால்டோவா நாடாளுமன்றம் திரான்ஸ்னிஸ்ட்ரியா சுதந்திரப் பிரகடனத்தை நிராகரித்தது. மால்டோவா அரசு தன் இறையாண்மையை உறுதிப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுத்தது. அக்காலத்தில் மால்டோவா குடியரசிற்கு அதன் சொந்த இராணுவம் இருக்க வில்லை.*

*நீண்ட மோதலின் பின்னர் 1992 ஆம் ஆண்டின் முற்பகுதியில் சமரசம் காண தீர்வு ஒன்றை உருவாக்குவதற்கான முதல் முயற்சிகள் நடந்தன. புதிதாக சுதந்திரம் கோரிய திரான்ஸ்னிஸ்ட்ரியாவின் தலைவர் இகோர் ஸ்மிர்னோவ் மற்றும் மூன்று பிரதிநிதிகள் உக்ரைனின் தலைநகரான கீவ்வில் வந்து, உக்ரேனிய தலைவர் லியோனிட் சந்தித்தனர்.*

*ஆனால் இவர்களை மால்டோவாவின் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு உடனடியாக மால்டோவாவில் உள்ள சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், பெரும் போராட்டங்களை மக்கள் தொடுத்தனர்,*

**2006 சுதந்திர வாக்கெடுப்பு :**

*நீண்டகால இனச் சிக்கலும், தொடர்ந்த மனித உரிமை மீறல்களின் பின்னர் 2006 இல் திரான்ஸ்னிஸ்ட்ரியன் சுதந்திர வாக்கெடுப்பு நடந்தது.*

*செப்டம்பர் 17, 2006 அன்று, திரான்ஸ்னிஸ்ட்ரியாவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது, சுதந்திர நாடாவதா அல்லது மால்டோவாவின் ஒரு பகுதியாக மாறுவதா அல்லது எதிர்காலத்தில் ரஷ்ய கூட்டமைப்பின் ஒரு பகுதியாக மாறுவதா ஆகியவற்றுக்கு இடையே வாக்காளர்கள் தங்கள் விருப்பை தேர்வு செய்தனர்.*

*இந்த வாக்கெடுப்பு முடிவுகளின் படி திரான்ஸ்னிஸ்ட்ரியா மக்கள் 98.07 முதல் 96.61 சதவிகிதம் வரை ரஷ்யவுடன் ஒருங்கிணைப்புக்கு ஆதரவாக வாக்களித்து இருந்தனர்.*

*ஆயினும் திரான்ஸ்னிஸ்ட்ரியா மக்களின் வாக்கேடுப்பை* OSCE, *ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் ருமேனியா, பல்கேரியா மற்றும் துருக்கி உள்ளிட்ட பல நாடுகள் இந்த வாக்கெடுப்பின் முடிவுகளை அங்கீகரிக்கவில்லை.*

*ரஷ்ய செய்தி நிறுவனமான* RIA *கூற்றுப்படி, 130 க்கும் மேற்பட்ட சர்வதேச பார்வையாளர்கள் வாக்கெடுப்பை கண் காணித்தனர் என்றும், இந்த வாக்கெடுப்பின் போது அவர்கள் எந்த நடைமுறை மீறல்களையும் பதிவு செய்யவில்லை என்றும் தெரிவித்தது.*

*மால்டோவாவிய காங்கிரஸ் பிரதிநிதி அறிவிப்பின் படி, சர்வதேச தரத்தின்படி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது என்றும், சர்வ தேச அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு நிறுவனங்களில் பார்வை யாளர்கள் கண்காணித்தனர் என்றும் கூறியுள்ளார்.*

*திரான்ஸ்னிஸ்ட்ரியாவில் மற்றோர் வாக்கெடுப்பு ஜீன்2010 இல் நடாத்தப்பட்டது. சட்டம் மற்றும் ஜனநாயகத் தரங்களை மீறாமல் நடத்தப்பட்டது என்றும் திரான்ஸ்னிஸ்ட்ரியன் பிராந்திய மறுசீரமைப்பு தொடங்கும் தளமாக இத்தேர்தல் அமைந்ததாக அறியப்படுகிறது.*

*ஜூன் 2010 தேர்தல் கணக்கெடுப்புகளின் படி திரான் ஸ்னிஸ்ட்ரியாவின் மக்கள்தொகையில் 46% வீத மக்கள் ரஷ்ய கூட்டமைப்புடன் இணைந்து இருக்க விரும்புவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.*

*அதேவேளை 13% வீத மக்கள் பிராந்திய சுயாட்சியின் நிலையில் அப்பகுதியை மால்டோவாவுடன் மீண்டும் ஒருங்கிணைக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.*

**ரஷ்யாவுடன் இணைவு :**

*ரஷ்ய கூட்டமைப்பின் மாநில அவையில் (DUMA), ஐ.நாவால் அங்கீகரிக்கப்படாத திரான்ஸ்னிஸ்ட்ரியா ரஷ்யாவின் ஒரு பகுதியாக மாறுவதற்கான விருப்பத்தை தீவிரமாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.*

*இப்பிராந்தியம் மால்டோவாவுடன் இணைந்து இருக்க விரும்பாமையால், அதே நேரத்தில் ரஷ்ய அமைதி காக்கும் படையை 1990 இல் மகிழ்ச்சியுடன் வரவேற்றதும் அறிந்ததே. ரஷ்யாவின் சர்வதேச விவகாரங்களுக்கான மாநில அவைக் குழுவின் உறுப்பினர் டிமிட்ரி பெலிக் கூறுகையில் "எங்களுக்கு நெருக்கமான ரஷ்ய மொழி பேசும் மக்கள் அங்கு வசிப்பதால், இந்த திட்டத்தை நாங்கள் தீவிரமாக பரிசீலிக்க வேண்டும், "என்று மாநில உறுப்பினர் மேலும் கூறியுள்ளார்.*

*மால்டோவா - உக்ரேனுக்கும் நடுவிலும், வல்லரசுகளின் போர்சூழ் பகைமையில் சிக்கித் தவிக்கும் பிராந்தியமாக திரான் ஸ்னிஸ்ட்ரியா விளங்குகிறது. வெளிப்படையாகவே ரஷ்யா திரான்ஸ்னிஸ்ட்ரியா பிராந்தியத்தை திறந்த கரங்களுடன் ஏற்றுக் கொள்ள தயாராக உள்ளது.*

*இது ஐரோப்பிய ஒன்றியத்தின் முகத்தில் மற்றொரு இறுக்கமான அழுத்தமாகவே இருக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.*

09

# கொசோவாவில் – செர்பியர் – ஒடுக்கப்படும் சிறுபான்மையினர்

## அல்பேனிய அடிப்படைவாதிகளின் அரச பயங்கரவாதம்...
## பால்கன் பிராந்தியத்தில் நேட்டோ ஆதிக்கம்...



*கொசோவோ இனப்படுகொலை என்பது கொசோவோ போரின் போது அல்பேனியர்களை செர்பியப் படைகள் படுகொலை மற்றும் இன அழிப்பு செய்தனர் என்றே உலகம் அறியும். ஆனால் கொசோவோவில் ஒடுக்கப்படும் சிறுபான்மை செர்பியரை அல்பேனிய அடிப்படைவாதிகளின் அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்படுவதை உலகம் கண்மூடி பார்த்துக் கொண்டுள்ளது கவலைக்குரியதே.*

*கொசோவோ சுதந்திரம் அறிவித்து பதினைந்து ஆண்டு களுக்குப் பிறகு, கொசோவோவின் வடக்கு எல்லையில் உள்ள **90,000** சிறுபான்மை செர்பியர்கள் கொசோவோ அரச கட்டுமானங்களை அங்கீகரிக்க மறுக்கின்றனர். இன்னமும் செர்பியாவின் பட்ஜெட்டில்*

இருந்து மட்டுமே ஊதியம் மற்றும் சலுகைகளைப் பெறுகின்றனர்.

இந்த வருட ஏப்ரல் தேர்தலுக்குப் பிறகு வடக்கு கொசோவோவின் செர்பியப் பெரும்பான்மை பகுதியில் அல்பேனிய இன மேயர்கள் பதவியேற்றதில் இருந்து அப்பகுதியில் அமைதியின்மை தீவிரமடைந்துள்ளது. இதன் போது செர்பியர்கள் புறக்கணிக்கப் பட்டது மட்டுமின்றி, அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் கண்டிக்க வழிவகுத்தது.

மேற்கு பால்கனில் (West Balkan) உறுதியற்ற தன்மையைத் தூண்டும் நீடித்த நிலைப்பாடு இன்னமும் தொடர்கிறது. பெப். 17, 2008 இல், அல்பேனிய-பெரும்பான்மை கொண்ட கொசோவோவிற்கு சுதந்திரம் கிடைத்தது. அதனை 100க்கும் மேற்பட்ட அமெரிக்க சார்பு நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டது.

இருப்பினும், செர்பியா, கொசோவோவை அதன் பிரதேசத்தின் ஒரு பகுதியாக இன்னும் முறையாகக் கருதுகிறது. அதேவேளை கோசோவோவில் வாழும் சிறுபான்மை செர்பியர்களின் உரிமைகளை நசுக்குவதாக செர்பிய அரசு நீண்ட காலமாக குற்றம் சாட்டியுள்ளது.

கொசோவோவின் 1.8 மில்லியன் மக்களில் 5௴ இனத்தவர் செர்பியர்கள் மற்றும் 90௴ இன அல்பேனியர்கள். வடக்கு கொசோவோவில் உள்ள செர்பியர்கள் தங்கள் சுயநிர்ணயத்தை தொடர்ந்தும் வெளிப்படுத்துகிறார்கள்.

**நேட்டோ ஆதரவில் கொசோவோ :**

கொசோவோ (Kosovo) பிரிந்தபோது அதை பல நேட்டோ நாடுகள் ஆதரித்திருந்தன. அதன் பிரிவினையானது எதிர்காலத்தில் உலகின் மற்ற பகுதிகளுக்கான முன்னுதாரணமாக ஆகாது என்று அந்த நாடுகள் அப்போது கூறின.

அதிலும் குறிப்பாக, பிரிவினை இயக்கங்களை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு இது ஒரு கடினமான பிரச்சினையாக எழுந்தது. அந்த காரணத்தால்தான் ஸ்பெயின் நாடானது, மற்ற ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ நாடுகளின் நிலையிலிருந்து விலகி கொசோவோவின் சுதந்திர பிரகடனத்தை ஏற்க முடியாது என்று அறிவித்தது.

**ஒசெட்டியா -அப்காசியா நாடுகள் உருவாக்கம் :**

ஆனால் கொசோவோவின் பிரிவினை நிலைப்பாட்டை ரஷ்யா ஒருபோதும் ஏற்கவில்லை. இக்காலத்திலேயே 2008 ஆம்




ஆண்டு ரஷ்ய படைகள் ஜியார்ஜியாவுக்குள் சென்றன. இதன் விளைவாக, தென் ஒசெட்டியா மற்றும் அப்காசியா(South Ossetia & Abkhazia ) ஆகிய இரண்டு குட்டி நாடுகள் உருவாக வழிபிறந்தது. ஆனால் இந்த இரு நாடுகளையும் இதுவரை வெகுசில நாடுகள் தான் அங்கீகரித்துள்ளன.

செர்பியாவைப் பொறுத்தவரை கொசோவோ மீதான தனது அழுத்தத்தை வலியுறுத்துவதைவிட, ஐரோப்பிய ஒன்றியத்துடனான தனது உறவுகளை மேம்படுத்துவது எப்படி என்பது தான் அதன் முக்கிய கவலையாக தற்போது இருக்கின்றது.

### கொசோவோ போரில் போர்க்குற்றங்கள்

கொசோவோ போரின் போது, 90,000க்கும் மேற்பட்ட செர்பிய மற்றும் அல்பேனியரல்லாத பிற அகதிகள் போரினால் பாதிக்கப்பட்டு மாகாணத்தை விட்டு வெளியேறினர். யூகோஸ்லாவிய இராணுவம் பின்வாங்கிய நாட்களில், 164,000 க்கும் மேற்பட்ட செர்பியர்கள் (சுமார் 75%) மற்றும் 24,000 ரோமாக்கள் (சுமார் 85%) கொசோவோவை விட்டு வெளியேறினர் மற்றும் மீதமுள்ள பொதுமக்கள் பலர் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகினர் என்பதும்

*உண்மையே.*

**அல்பேனிய - செர்பிய பின்னணி:**

*அல்பேனிய-செர்பிய மோதலின் ஆரம்பம் **1877-1878** இல் உருவாகியது. கொசோவோவில் குடியேறிய செர்பியர்களின் மீது **1876** மற்றும் **1878** க்கு இடையில் பல படுகொலைகள் தாக்குதல்கள் நடந்தன.*

***1998-99** இல் கொசோவோவில் அல்பேனியர்கள் செர்பியர்களின் யூகோஸ்லாவியா அரசாங்கத்துடன் போரிட்டபோது கொசோவோ மோதல் பாரிய அளவில் ஏற்பட்டது. இந்த மோதல் பரவலான சர்வதேச கவனத்தைப் பெற்றது. பின்னர் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் (நேட்டோ) தலையீட்டால் தீர்க்கப்பட்டது.*

**கொசோவோவில் செர்பியர்கள் படுகொலை**

*உண்மையான இறப்பு எண்ணிக்கை ஒருபோதும் அறியப்படாவிட்டாலும், **1998** மற்றும் **2000** க்கு இடையில் கொசோவோ போரில் குறைந்தது **2,197** செர்பியர்கள் கொல்லப் பட்டனர். அவர்களில் **400** பேரைத் தவிர மற்ற அனைவரும் பொதுமக்கள். மோதலின் உத்தியோகபூர்வ இறப்பு எண்ணிக்கை **11,000** முதல் **13,500** வரை இருந்ததாக அறியப்படுகிறது.*

*போரின் கொடுமையால் அதேசமயம், கொசோவோவில் இருக்கும் செர்பியர்கள் அதிகம் வாழும்பகுதிகளை கொசோவோவி லிருந்து பிரித்து செர்பியவுடன் இணைக்கவேண்டும் என்கிற கோரிக்கைகளும் எழுந்தது.*

*பரந்துபட்ட அளவில் பால்கன் பகுதியிலும், குறிப்பாக போஸ்னியாவிலும், தற்போதைய எல்லைகள் மாற்றப்பட வேண்டிய ஏற்பாடுகளின் எதிர்கால நிலைத்த தன்மை குறித்த கேள்விகளும் எழுந்துள்ளன. ஆனால் அதைபற்றி விவாதிப்பதற்கு மேற்குலக ராஜாங்க அதிகாரிகள் யாரும் தயாராக இல்லை என்பதையும் அவதானிக்க வேண்டும்.*

**செர்பியர்கள் கொசோவோவை ஏன் வெறுத்தார்கள்?**

*செர்பிய தேசியவாதிகள் **1389** இல் ஒட்டோமான் துருக்கியர்களுக்கு எதிரான போரை அதன் தேசியப் போராட்டத்தின் அடையாளமாகக் கருதுகின்றனர். கொசோவோவின் பெரும்பான்மை இன அல்பேனியர்கள், அவர்களில் பெரும்பாலோர் முஸ்லீம்கள்.*



கொசோவோவை தங்கள் நாடாகக் கருதுகின்றனர் மற்றும் செர்பியா ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறையைக் குற்றம் சாட்டுகின்றனர்.

கொசோவோ என்பது செர்பியாவின் தெற்கு மாகாணம், கத்தார் அளவில் உள்ளது. முதன்முதலில் இலிரியன் மற்றும் திரேசியன் பழங்குடியினர் வசித்து வந்தனர். பின்னர் ரோமானியர்களால் ஆளப்பட்டது. பின்னர் 6 ஆம் நூற்றாண்டில் ஸ்லாவ்களால் (Slavic) ஆழப்பட்டது.

**கொசோவோ எப்போது அல்பேனிய இனமாக மாறியது?**

1910 ஆம் ஆண்டில், அல்பேனிய எழுச்சி தலைநகர் பிரிஸ்டினாவிலிருந்து எல்லா இடங்களுக்கும் பரவியது. மற்றும் ஒட்டோமான் சுல்தானின் கொசோவோவில் ஜூன் 1911 இல் ஆதிக்கம் செய்யும் வரை நீடித்தது. கொசோவோவில் செர்பியர்கள் இரண்டா வது பெரிய சமூகம். சனத்தொகையின் படி 37,000 ரோமானி, 15,000 பால்கன் முஸ்லீம்கள் (அஷ்கலி, போஸ்னியாக்கள் மற்றும் கோரானி உட்பட) மற்றும் 7,000 அல்பேனியரல்லாத குடிமக்கள் வாழ்கின்றனர்.

1999-க்கு முந்தைய கொசோவோவின் செர்பிய மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் (226,000) மத்திய செர்பியா மற்றும் மொண்டெனேகுரோவுக்குத் கட்டாயப்படுத்தி தொடர்ந்து வெளியேற்றப்பட்டனர்.

**கொசோவோ சுதந்திரம்-ரஷ்யா எதிர்ப்பு!**

வரலாற்று ரீதியாக 2008 கொசோவோ சுதந்திரப் பிரகடனத்தைத் தொடர்ந்து, ரஷ்யா உடனடியாக செர்பிய சார்பு நிலைப்பாட்டை எடுத்தது. மேலும் கொசோவோவின் சுதந்திரத்தை கடுமையாக எதிர்த்தது. ரஷ்ய அதிபராக விளாடிமிர் புட்டின்

*கொசோவோவின் சுதந்திரத்திற்கு எதிரான எதிர்ப்பு இருந்து வருகிறது.*

*ஆயினும் பின்னர் மார்ச் 2014 இல், கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்தை ரஷ்யா கிரிமியாவின் சுதந்திரத்தை அங்கீகரிப்பதற்கான ஒரு நியாயமாகப் பயன்படுத்தியது.*

**செர்பியா – கொசோவோ முறுகல்:**

*செர்பியா - கொசோவோ முறுகலால் எல்லைக்கு இராணுவத்தை அனுப்பியது செர்பியா. வடக்கு கொசோவோவில் உள்ள பெரும்பான்மையான செர்பிய நகரத்தில் ஒரு சிறிய குழு எதிர்ப்பாளர்களும் காவல்துறையினரும் மோதிக்கொண்டதை அடுத்து, செர்பியா தனது இராணுவத்தை அதிக எச்சரிக்கையுடன் நிறுத்தி, கொசோவோவின் எல்லைக்கு அருகில் செல்ல சில பிரிவுகளுக்கு உத்தரவிட்டது.*

*கொசோவோ எல்லைக்கு துருப்புக்களை அவசரமாக நகர்த்த உத்தரவிடப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சர் மிலோஸ் வுசெவிக் நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பில் தெரிவித்தார். கொசோவோவில் செர்பிய சமூகத்திற்கு எதிரான பயங்கரவாதம் நடக்கிறது என்பது தெளிவாகிறது என கூறினார்.*

**கொசோவோவில் செர்பியருக்கு எதிரான பயங்கரவாதம்:**

*புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அல்பேனிய இன மேயரை அவரது அலுவலகத்திற்குள் நுழைவதைத் தடுக்கும் முயற்சியில், கொசோவன் நகரமான Zvecan இல் உள்ள முனிசிபல் கட்டிடங்களுக்கு முன்னால் திரண்டிருந்த செர்பியர்களைக் கலைக்க காவல்துறையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பயன்படுத்தியதாக செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.*

*இந்த மோதலில் சுமார் 10 பேர் சிறிய காயமடைந்ததாக மருத்துவமனை அதிகாரி டானிகா ராடோமிரோவிக் உள்ளூர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.*

*போராட்டக்காரர்கள் வீசிய கையெறி குண்டுகள் மற்றும் பிற கடினமான பொருட்களால் ஐந்து அதிகாரிகள் காயமடைந்ததாக போலீசார் தெரிவித்தனர்.*

*நேட்டோ அமைதி காக்கும் பணியில் இருந்து கொசோவோவிற்கு பல வாகனங்கள் ஸ்வெக்கனின் மையத்திற்கு வந்ததாக தன்ஜெக் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. கொசோவோ காவல்துறையினர் இந்த சம்பவங்கள் குறித்து எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.*

**சர்வதேச நீதிமன்றமத்தில் கொசோவோ விவகாரம்:**

*செர்பியாவில் இருந்து கொசோவா சுதந்திரம் பெற்றதாக பிரகடனம் செய்தமை சர்வதேச சட்டத்தை மீறும் செயல் அல்ல என்று தி ஹேக்கில் இருக்கின்ற சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மொத்தமான 14 நீதிபதிகளில் 10 பேர் இந்தத் தீர்ப்புக்கு ஆதரவளித்துள்ளனர். உலகெங்கும் உள்ள பிரிவினைவாத இயக்கங் களில் இந்த தீர்ப்பு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தத் தீர்ப்பு சட்ட ரீதியில் கட்டுப்படுத்தாதது. ஆனால், மேலதிக சர்வதேச அங்கீகாரத்துக்கு இது கொசோவோவை ஊக்குவிக்கும்.*

*செர்பியப் படைகளுக்கும், அல்பேனிய பிரிவினை வாதிகளுக்கும் இடையிலான போரை அடுத்து 9 வருடங்களின் பின்னர் கொசோவோவின் அல்பேனிய இன பெரும்பான்மையினர் 2008 இல் சுதந்திர பிரகடனம் செய்தனர்.*

*பெரும்பாலான மேற்கத்தைய நாடுகள் கொசோவோவை அங்கீகரித்தன. ஆனால், செர்பியாவும் அதன் கூட்டாளியான ரஷ்யாவும் அதனை நிராகரித்தன.*

**தீர்ப்பின் தாக்கங்கள் என்ன?**

*சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பானது, சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இரண்டு முக்கிய கேள்விகளுக்கு விடையளித் திருக்கிறது. ஏற்கெனவே நிறுவப்பட்டு நிலைபெற்றிருக்கும் ஒரு நாட்டில் இருக்கும் ஒரு தொகுதிமக்கள், மொழியின் அடிப்படை யிலோ, தேசியஇன அடையாளத்தின் அடிப்படையிலோ தாங்கள் தனித்துவ மானவர்கள் என்று கூறி தாங்கள் வாழ்ந்த ஒரு நாட்டிலிருந்து தாமாகவே பிரிந்து செல்வது சரியா என்பது முதல் கேள்வி.*

*அது சரியென்றால், தற்போதைய நாடுகள் தங்களின் இறையாண்மையையும், தமது ஆட்புல ஒருமைப்பாட்டையும் எப்படி பாதுகாத்துக்கொள்வது. இந்த இரண்டு கேள்விகளுக்கான பதில் களைத் தான் இத் தீர்ப்பு தெளிவுபடுத்துகிறது.*

*ஆயினும் கொசோவோ இனப்படுகொலை என்பது கொசோவோ போரின் போது கொசோவோ அல்பேனியர்களை செர்பியப் படைகள்படுகொலை மற்றும் இன அழிப்பு செய்தனர் என்றே உலகம் அறியும். ஆனால் கொசோவோவில் ஒடுக்கப்படும் சிறுபான்மை செர்பியரை அல்பேனிய அடிப்படைவாதிகளின் அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்படுவதை உலகம் கண்மூடி பார்த்துக் கொண்டுள்ளது கவலைக்குரியதே.*

# 10

## சைப்ரஸ் – பிரிவினையும் சுதந்திரமும் :

**ஒரு நாடு இரு தேசமாக...**
**கிரேக்க – துருக்கியாக பிளவுண்ட தீவு...**




*பிரிக்கப்பட்ட சைப்ரஸ் நாட்டின் இரண்டு-அரசுத் தீர்வு(*Two-State Solution*) என்ற தீர்வானது தமிழ் மக்களது அரசியல் பெருவெளியில் முனைப்புப் பெற்ற விடயமாகும்.*

ஒரு நாடு இரு தேசங்கள் (One County two Nations*) என்கின்ற கருத்தியல் பற்றி பரவலாக உலகில் பிரிந்து போகும் நாடுகளிடையே பேசப்பட்டு வருகின்ற அரசியலாகும்.*

*சைப்ரஸ் பிரிவினை **1974** ஆண்டு துருக்கிப் படைகளின் ஆக்கிரமிப்பிற்கு முன்னரே ஆரம்பமாகியது. மக்களில் மூன்றில் ஒரு பகுதியினரான கிரேக்கர்களும், துருக்கியர்களும் தங்களது சொந்த வீடுகளிலிருந்து வெளியேறிச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் அக்காலத்தில் ஏற்பட்டது.*

**சைப்ரஸ் பிரிவினை வரலாறு:**

*சைப்ரஸ் தீவில் (Cyprus) வாழ்ந்து வந்த கிரேக்கப் பெரும்பான்மையினரும் துருக்கிய சிறுபான்மையினரும் இரண்டு "இனச்சுத்திகரிப்பு" செய்யப்பட்ட பகுதிகளில் பிரிக்கப்பட்டனர். 1974 யூலை 22 இல் ஐக்கிய நாடுகள் அவை இரு தரப்பினருக்கும் இடையில் ஒரு போர் நிறுத்தத்தை கொண்டு வந்தது. துருக்கிப் படை சைப்பிரசில் நிலைகொள்ள அனுமதிக்கப்பட்டது. அதே ஆண்டு டிசெம்பர் மாதத்தில் கிரேக்க ஆயர் மாகாறியோஸ் மீண்டும் ஆட்சித் தலைவராகப் பதவி ஏற்றார். அடுத்த ஆண்டு சைப்ரஸ் தீவு கிரேக்கர் பகுதி துருக்கியர் பகுதி என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இடையில் ஐக்கிய நாட்டு அவையின் அமைதிப் படை நிறுத்தப்பட்டது.*

*அதன்பின்னர் 1983 நவெம்பர் 15 இல் துருக்கி சைப்ரஸ் "வட துருக்கி குடியரசு" எனத் தன்னை ஒரு தலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்தியது. ஆனால் ஐநா பாதுகாப்பு அவை அதனை அங்கீகரிக்க மறுத்தது. துருக்கி மட்டும் அதனை அங்கீகரித்தது.*

*இரண்டு சைப்பிரசையும் இணைப்பதற்கு ஐநா நடத்திய பேச்சு வார்த்தை வெற்றிபெறவில்லை. 2002 இல் கிரேக்க சைப்ரஸ் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்ந்து கொண்டது குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும்.*


**ஐரோப்பிய ஒன்றிய நாடாக:**

*2003இல் பல்லாயிரக்கணக்கான வட சைப்ரஸில் வாழும் துருக்கி இனமக்கள், சைப்ரஸ் தீவின் கிரேக்கப் பகுதியுடன் தம்மை இணைக்க வேண்டும் என்றும், ஐரோப்பிய யூனியனில் சேர்க்கப் படவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.*

*வடக்கு சைப்ரஸ் துருக்கிய குடியரசு (TRWC) தலைமைக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. சைப்ரஸ் பிரிவினை முடிவிற்கு கொண்டுவர ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்த யோசனையை துருக்கி மட்டுமே TRNC இனை அங்கீகரித்துள்ளது. அப்போது நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் 50,000 முதல் 70,000 வரை பொதுமக்கள் கலந்துகொண்டனர். இது தீவின் துருக்கிய பகுதிகளில் வாழும் மக்களில் இதில் மூன்றில் ஒரு பகுதியாகும்.*

*இவ் எண்ணிக்கையானது சைப்ரஸின் வடக்குப் பகுதியில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த துருக்கி தேசிய உணர்வு தனது ஆதரவு முழுவதையும் இழந்துவிட்டது என்பதை காட்டியது.*

*இதன் பின்னர் சைப்ரசு குடியரசு மே 1, 2004-ல் இருந்து இது ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடாக இருந்து வருகிறது. இதன் அதிகாரபூர்வ பெயர் சைப்ரசு குடியரசு என்பதாகும்.*




**கிரேக்க காலனி நாடாக:**

*மத்திய தரைக்கடலில் காணப்படும் மூன்றாவது பெரிய தீவு சைப்ரஸ். சைப்ரஸ் என்றால் கிரேக்க மொழியில் செப்பு என்று பொருள். சைப்ரஸ் துருக்கியின் தென்திசை கடலோரமாகவும் சிரியாவின் மேற்குக் கரையோரமாகவும் இருக்கிறது.*

*சைப்ரஸ் பலநூற்றாண்டு காலமாக சைப்ரஸ் தீவு பினீசியன்ஸ் மற்றும் கிரேக்கர்கள் ஆகியோரது காலனி நாடாக இருந்து வந்தது. 1571 ஆம் ஆண்டு துருக்கி அதனைத் தாக்கிக் கைப்பற்றியது. அங்கு பெருவாரியான துருக்கியரைக் குடியேற்றி தனது காலனி நாடாக வைத்துக் கொண்டது.*

*முதலாவது உலகப் போர் வெடித்தபோது பிரித்தானியா சைப்ரஸ் தீவைக் கைப்பற்றியது. 1925 இல் சைப்ரஸ் பிரித்தானியாவின் காலனி நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.*

*கிரேக்கத்தைத் தாய்நாடாகக் கருதும் சைபிரசில் வாழ்ந்த கிரேக்க மக்கள் சுதந்திரம் கேட்டுப் போராடினார்கள்.*

*சைப்ரஸ் தீவு கிரேக்கத்தோடு இணைக்க வேண்டும் என்றும் போராடினார்கள். 1955 இல் சைப்ரஸ் போராளிகளின் தேசிய அமைப்பு (EOKA) பிரித்தானியாவுக்கு எதிராக ஒரு கெரில்லா போரைத் தொடங்கியது. 1958 இல் ஆயர் மாகாறியோஸ் (Archbiship Makarios) கிரேக்கத்தோடு இணைவதற்குப் பதில் சைப்ரஸ் ஒரு சுதந்திரநாடாக மலர வேண்டும் என்றார்.*

*இதே சமயம் சைப்ரஸ் துருக்கியர்கள் சைப்ரஸ் தீவு கிரேக்கர் துருக்கியர் மக்களிடை பிரிக்கப்பட வேண்டும் எனக் கோரினார்கள். சைப்ரஸ் தீவு **1960**, ஒகஸ்ட் **16** இல் சுதந்திரம் அடைந்தது. கிரேக்கர் களும் துருக்கியர்களும் இணைந்து ஒரு அரசியல் யாப்பை எழுதிக் கொண்டார்கள். ஆயர் மாகாறியோஸ் சைப்ரஸ் தீவின் முதல் ஆட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் வெகுவிரைவில் கிரேக்கர்கள் - துருக்கியர் மத்தியில் சண்டை பலமாக தொடங்கியது.*

**துருக்கி படை ஆக்கிரமிப்பு:**

*கிழக்கு மத்தியதரைக் கடலில் ஒரு மூலோபாய இருப்பிடமாக, பின்னர் அது அசீரியர்கள், எகிப்தியர்கள் மற்றும் பெர்சியர்களின் பேரரசுகள் உட்பட பல முக்கிய சக்திகளால் ஆக்கிரமிக்கப்பட்டது.*

*இவர்களிடமிருந்து கிமு **333** இல் தீவை அலெக்சாண்டர் தி கிரேட் அலெக்சாண்டர் கைப்பற்றினார். டோலமிக் எகிப்து, கிளாசிக்கல் மற்றும் கிழக்கு ரோமானியப் பேரரசு, ஒரு குறுகிய காலத்திற்கு அரபு கலிபாக்கள், பிரெஞ்சு லுசிக்னன் வம்சம் மற்றும் வெனிசியர்கள் ஆகியோரால் **1571** மற்றும் **1878** க்கு இடையில் மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலான ஒட்டோமான் ஆட்சி பின்பற்றப் பட்டது.*

***1965** இல் ஐக்கிய நாடுகளின் அவையின் அமைதிப்படை இங்கு அனுப்பப்பட்டது. **1974** ஆம் ஆண்டு யூலை **15** ஆம் நாள் ஆயர் மார்க்கோஸ் சைப்ரஸ் தேசிய பாதுகாப்புப் படை நடத்திய புரட்சியில் பதவி கவிழ்க்கப்பட்டார். யூலை **20** இல் துருக்கி சைப்ரஸ் தீவில் வாழும் துருக்கியரைக் காப்பாற்றும் தார்மீக உரிமை தனக்கு இருக்கிறது எனக் கூறிக் கொண்டு அதன் மீது படையெடுத்து சைப்பிரசின் வடபகுதியை அண்டிய **37** விழுக்காடு நிலப்பரப்பைக் கைப்பற்றியது. இதனால் **180,000** கிரேக்கர்கள் வடக்கில் இருந்து தெற்குக்கு ஏதிலிகளாக இடம் பெயர்ந்தார்கள்.*

**வடக்கு - தெற்கு சைப்பிரசாக பிளவு**

*துருக்கி சைப்ரசு குடியரசின் தோற்றத்தை ஒப்புக்கொண்டது. சைப்ரசு தீவு பிரிக்கவேண்டும் என்ற தனது கொள்கையில் இருந்து பின்வாங்கியது. துருக்கியதும் துருக்கிய சைப்ரசு தலைவர்களின் நோக்கமும் விடுதலை பெற்ற துருக்கிய நாட்டை சைப்ரசின் வட பகுதியில் அமைப்பது என்பதாகும்.*

*வடக்கு சைப்பிரசு* (Northern Cyprus) *முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படாத ஆனால் நடைமுறையில் ஒரு சுதந்திர நாடு. இது*



தனது சுதந்திரத்தை 1983 ஆண்டு அறிவித்தது. இந்த அறிவிப்பை துருக்கி மட்டுமே ஏற்றுக்கொண்டது. ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா உட்பட பல நாடுகள் ஏற்கவில்லை. இந்த பகுதி படைத் துறை, பொருளாதார, அரசியல் வழிகளில் துருக்கியைச் சார்ந்து இருக்கிறது சைப்ரஸின் துருக்கிப் பகுதி, மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியாகும். விளைச்சல் நிலப்பரப்பு என்று எடுத்துக் கொண்டால் நாட்டின் மொத்த விளைச்சல் பரப்பில் இது மூன்றில் இரண்டு பங்காகும். ஆனால் வாழ்க்கைத் தரத்தில் இரண்டு பகுதி களுக்கும் இடையில் மிகப்பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்றுள்ள கிரேக்க தென்பகுதிக்கும் சர்வதேச அளவில் விலக்கி வைக்கப்பட்டுள்ள துருக்கி வடக்கிற்கும் இடையில் பொருளாதார நிலை இடைவெளி விரிவாகிக்கொண்டே போகிறது. இந்த இடைவெளி வடக்கின் துருக்கியின மக்களை வெகுவாகப் பாதிக்கிறது. தெற்கில் தனிநபர் வருமானம் வடக்கைவிட மூன்று மடங்கு அதிகமாகும்.

1970கள் முதல் வடக்கு துருக்கி பகுதியில் வாழும் மக்களில் 10,000 இற்கு மேற்பட்டவர்கள் வெளியேறி சென்றுவிட்டார்கள். கடந்த காலத்தில் துருக்கி வலதுசாரி குடியேற்றவாசிகள் அந்த மக்கள் வெளியேறிய இடங்களில் குடியேறினர்.

தெற்கு சைப்பிரசில் தமது உழைப்பிற்காக பல துருக்கி தொழிலாளர்கள் தினசரி கிரேக்க எல்லையைத் தாண்டி தெற்கு சைபிரஸிற்கு வருகின்றனர். சர்வதேச மானியங்கள் மற்றும் சுற்றுலா வளர்ச்சி காரணமாக தெற்குப் பகுதி பொருளாதாரம் மகத்தான வளர்ச்சி கண்டது. ஆனால், வடக்குப் பகுதியில் பண வீக்கமும், பண மோசடிகளும் அதிகரித்தன. துருக்கி மக்கள் வறுமையில் மூழ்கினர்.

2004 அண்மையில் ஐரோப்பிய யூனியன் தெற்கு சைபிரசை புதிய உறுப்பினராக ஏற்றுக்கொள்ள முடிவு செய்தது. இந்த முடிவின் மூலம் சைபிரஸ் தீவின் இரண்டு பகுதிகளுக்கும் இடையில் நிலவுகின்ற சமூக பாகுபாடுகள் ஆழமாகிவிடும் என்ற அச்சம் தற்போது நிலவுகிறது.

## II

# வட அயர்லாந்து – உள்நாட்டுப் போரின் முடிவு :

## உயிர்த்தெழுந்த ஈஸ்டர் எழுச்சியும்...
## புனித வெள்ளி பெல்பாஸ்ட் உடன்பாடும்...




*புனித வெள்ளி ஒப்பந்தமான பெல்பாஸ்ட் உடன்பாடு (*Belfast Agreement*) ஏற்பட்டு 25வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் இந்த வருடத்தில், வட அயர்லாந்தின் உள்நாட்டுப் போரினை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு ஏற்பட்ட கடுமையான சவால்களை அந்நாட்டு மக்கள் நீண்ட காலமாக எதிர்கொண்டனர்.*

**"புனித வெள்ளி உடன்பாடு"**

*"புனித வெள்ளி உடன்பாடு" என பரவலாக அழைக்கப்படும் இவ்வுடன்பாடு பெல்பாஸ்ட் நகரில் ஏப்ரல் **10, 1998,** புனித வெள்ளி தினத்தன்று ஐக்கிய இராச்சிய அரசுக்கும் அயர்லாந்துக் குடியரசுக்கும் இடையில் வட அயர்லாந்தின் முக்கிய அரசியல் கட்சிகளின்*

முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த உடன்படிக்கை சுயநிர்ணய கோட்பாட்டின் அடிப் படையில் வட அயர்லாந்தின் உள்நாட்டுப் போரினை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு ஏற்பட்ட மிக முக்கியமான அரசியல் உடன்பாட்டாக அமைந்திருந்தது.

**உயிர்த்தெழுந்த ஈஸ்டர் எழுச்சி :**

அந்நிய ஆக்கிரமிப்புக்குள்ளும் அடக்குமுறைக்குள்ளும் தொடர்ந்தும் வாழமுடியாது, தம்மை எதிர்த்து நிற்பது நம்மைவிட பலம்வாய்ந்த படைகள் என்றாலும் தமது தேசத்தின் சுதந்திரத்திற்காக தாம் போராடியே ஆகவேண்டும் என்ற முடிவு அயர்லாந்தின் புரட்சியாளர்களால் எடுக்கப்பட்டது. இவ்வாறு எடுக்கப்பட்ட முடிவை அமுல்படுத்துவதற்காக இயேசுபிரான் மரித்து அவர் மீண்டும் உயிர்த்தெழுந்த காலப்பகுதி நிர்ணயிக்கப்படுகிறது. அதன் நிமிர்த்தம் இந்த எழுச்சி Easter Rising (ஈஸ்டர் எழுச்சி) என பெயரிடப்பட்டு 24 ஏப்ரல் 1916 வெடித்தது.

பிரித்தானியப் படைகளின் காரணமற்ற கைதுகளும் தடுத்து வைப்புகளும் ஆத்திர அலையை அயர்லாந்து மக்களிடம் ஏற்படுத்தியது. ஈற்றில் மக்கள் மயப்படுத்தப்படாத போராட்டம், தலைமைத்துவங்களுக்கு இடையில் நிலவிய முரண்பாடுகள், திட்டமிடல், தொடர்பாடல், ஒருங்கிணைப்பு மற்றும் கட்டளை வழங்கலில் காணப்பட்ட பலவீனங்கள் போன்றவற்றால் ஈஸ்டர் எழுச்சி தோல்வியில் முடிந்தது.

ஐரிஷ் குடியரசுக் கட்சியின் துணை ராணுவ அமைப்பு நீண்ட தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி, வடக்கு அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆட்சியைத் தடுத்து நிறுத்துவதற்கும், அயர்லாந்து முழு வதிலும் ஒரு சுயாதீன குடியரசை கொண்டுவருவதற்கும் பிற வழிமுறை களில் போராடியது. ஐ.ஆர்.ஏ மற்றும் பிற ராணுவ குழுக்கள் பிரிட்டிஷ் பாதுகாப்புப் படைகளுக்கு இடையே வன்முறை மோதல்களைக் கண்ட முப்பது ஆண்டு காலம் கொடூரமானதாகும்.

**ஐ.ஆர்.ஏ – IRA ஆயுதப் போராட்டம் :**

அயர்லாந்தின் சுதந்திரத்துக்கான ஆயுதப் போராட்டத்தை நடாத்திய அயர்லாந்து குடியரசு இராணுவம் ஐ.ஆர்.ஏ (Irish Republican Army -IRA) பின்னர் ஐக்கிய அயர்லாந்தையும் வலியுறுத்தி தனது தாக்குதல்களை முன்னெடுத்தது. அதேபோன்று, சின் பையின் என்ற அயர்லாந்தின் முதன்மையான அரசியல் அமைப்பு அரசியல்




போராட்டத்தை சுமார் நூறு வருடங்களாக தொடர்ந்தும் மேற்கொண்டுவருகிறது.

ஆயினும் பிரித்தானியாவின் வட அயர்லாந்து மீதான சட்ட அதிகார எல்லையை முடிவுக்குக் கொண்டுவர முயன்று கொண்டிருந்த சின் பெயின் (Sinn Fein), ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்கு ஆதரவாக பிரித்தானிய வாக்களிப்பு முடிவுகள் வெளிவந்ததையடுத்து, ஐக்கிய அயர்லாந்து உருவாக்கத்துக்கு மீண்டும் முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

இதன் அங்கமாகவே, குறித்த வாக்களிப்பு முடிவு தொடர்பான செய்திகள் வெளிவந்து குறுகிய நேரத்துக்குள்ளேயே, வட அயர்லாந்தின் ஜனநாயக திடசங்கற்பத்தை ஆங்கில வாக்குகள் தடம்புரள வைத்துள்ளன. இது, ஐக்கிய அயர்லாந்தின் தேவையை மீளவும் கோடிட்டு காட்டுகிறது என சின் பையினின் தலைமைத்துவம் தெரியப்படுத்தியுள்ளது.

வட அயர்லாந்தின் 56% மக்கள் ஐக்கிய இராச்சியம் ஐரோப்பிய ஒன்றித்திற்குள் தொடர்ந்தும் அங்கம் வகிக்கவே வாக்களித்திருந்தனர்.

**சிதையாத சித்தாந்தம்**

பிரித்தானியாவின் பிரித்தாளும் தந்திரத்துக்குள் சிக்கிய அயர்லாந்துக்கே உரித்தான வட அயர்லாந்து, மீண்டும் அயர்லாந்து

*குடியரசுடன் இணைக்கப்பட்டு ஐக்கிய அயர்லாந்து உருவாகும் என்ற போராட்டம் நீண்டது.*

*சின் பையினின் ஆயுத அமைப்பே ஐ.ஆர்.ஏ என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்தாலும் சின் பையினின் அயர்லாந்தின் சுதந்திரத்துக்கான போராட்டம் தடைகளை தகர்த்து முன்னகர்த்தது.*

**எண்ணூறு வருட போராட்ட வரலாறு :**

*ஆங்கில அதிகாரத்தை அயர்லாந்தில் நிலைநிறுத்த முயற்சித்த பிரித்தானியர்களுக்கும், தனித்துவத்தையும் தன்னாட்சியையும் நிலைநிறுத்த போராடிய அயர்லாந்து குடியரசுக்குமிடையிலான மோதுகை சுமார் எண்ணூறு வருட வரலாற்றைக் கொண்டது. ஆயினும், கத்தோலிக்கர்களை பெரும்பான்மையாகக் கொண்ட அயர்லாந்தை புரொட்டஸ்தாந்தை பெரும்பான்மையாகக் கொண்ட ஐக்கிய இராச்சியத்துடன் 1801இல் இணைத்த போது தீவிர ஆயுத மோதல்களுக்கான அடித்தளமிடப்பட்டது.*

**அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆட்சி :**

*1919 இல் வடக்கு அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆட்சி ஆயுதப்படைகளைப் பயன்படுத்தி நிறுவப்பட்டது. அதன்பின் ஐரிஷ் குடியரசு இராணுவமான ஐ.ஆர்.ஏ, சுதந்திரத்துக்காகவும் மீண்டும் ஒன்றிணைந்த குடியரசாகவும் போராடியது. பெரும்பாலும் ஐரிஷ் தேசியவாத அரசியல் கட்சியான சின் ஃபைனுடன் இணைந்து போராடியது.*

*1969 ஆம் ஆண்டில், வடக்கு அயர்லாந்தில் இருந்து பிரிட்டிஷ் விலக வேண்டும் என்று கோரி ஐஆர்ஏ அமைப்பு வன்முறை போராட்டங்களை பயன்படுத்தினர். இதன் விளைவாக 600 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உட்பட 1,800 பேர் இறந்தனர்.*

**இரத்தக்களரி ஞாயிறு :**

*இரத்தக்களரி ஞாயிறு என அறியப்படும் ஜனவரி 30, 1972 அன்று , நிராயுதபாணியான பதின்மூன்று கத்தோலிக்க சிவில் உரிமை ஆர்ப்பாட்டக்காரர்கள் வடக்கு அயர்லாந்தில் டெர்ரியில் நடந்த ஒரு சிவில் உரிமைகள் அணிவகுப்பின் போது பிரிட்டிஷ் படைகளால் கொல்லப்பட்டும், 15 பேர் காயமுற்றனர்.*

*பாதிக்கப்பட்டவர்களை துப்பாக்கி ஏந்தியவர்கள் மற்றும் குண்டுவீச்சுக்காரர்கள் என்று பிரிட்டிஷ் இராணுவம் பொய்யாக பரப்புரை ஆற்றியது.*




**பாபி சாண்ட்ஸ் உண்ணாவிரதம்:**

*அயர்லாந்தின் நீண்ட கால ஆயுதப் போராட்டத்தில், பாபி சாண்ட்ஸ் போன்ற அகிம்சை வழிப் போராளிகளும் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளனர்.*

*அவர் **66** நாள் உண்ணாவிரதம் இருந்து **1981** மே **5** அன்று இறந்தார். இதன்பின் பெல்ஃபாஸ்டில் பாரிய கலவரம் ஏற்பட்டு **100,000** பேர் அவரது இறுதி சடங்கில் கலந்து கொண்டனர்.*

*வன்முறைகளால் தீவிரம் பெற்ற அயர்லாந்தில் மார்ச் **6, 1988** ஜிப்ரால்டரில் மூன்று நிராயுதபாணியான ஐஆர்ஏ உறுப்பினர்கள் பிரிட்டிஷ் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இறுதிச் சடங்கு நாட்களில், இரண்டு பிரிட்டிஷ் வீரர்கள் தற்செயலாக ஊர்வலத்தில் சென்று தங்கள் வாகனத்திலிருந்து இழுத்துச் செல்லப்பட்டு, அடித்து சுட்டுக் கொல்லப்பட்ட கொடூர அந்த காட்சியை உலகெங்கும் டிவி கேமராக்கள் பதிவு செய்தன.*

*இதன்பின் ஆகஸ்ட் **31, 1994** பல மாதங்கள் இரகசிய பேச்சு வார்த்தைகள், நீண்ட கால குண்டுவெடிப்பு - துப்பாக்கிச் சூடுகளுக்குப் பிறகு, ஐஆர்ஏ ஒரு வரலாற்று யுத்த நிறுத்தத்தை "இராணுவ நடவடிக்கைகளை முழுமையாக நிறுத்துவதாக" அறிவித்தது.*

**புனித வெள்ளி ஒப்பந்தம் :**

*அயர்லாந்தில் செப்டம்பர் **15, 1997**இல் முதல் முறையாக,*

*முறையான சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த பிரிட்டன் சின் ஃபைனுடன் சம்மதித்தன. பின்னர் ஏப்ரல் 10, 1998 இல் பெல்ஃபாஸ்ட் ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படும் புனித வெள்ளி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.*

*மே 23இல் ஐரிஷ் குடியரசின் வடக்கு அயர்லாந்தில் வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்டது. 2005 ஜூலை 28 இல் ஐஆர்ஏ தனது 36 ஆண்டுகால ஆயுத போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதாக முறையாக அறிவித்தது.*

**புலம்பெயர் அயர்லாந்து மக்கள்:**

*சுதந்திரத்துக்கான போர் பல மில்லியன் அயர்லாந்து மக்களை உலகெங்கும் புலம்பெயர வைத்தது. அயர்லாந்து குடியரசில் வாழும் அயர்லாந்து மக்களின் எண்ணிக்கையோ சுமார் 4.6 மில்லியன்.*

*ஆனால், அயர்லாந்தை அடியாகக் கொண்ட சுமார் 70 மில்லியனுக்கு மேற்பட்ட அயர்லாந்து மக்கள் உலகெங்கும் பரந்து வாழ்கிறார்கள். புலம்பெயர்ந்த அயர்லாந்து மக்கள், உலகில் பலம் வாய்ந்த புலம்பெயர்ந்த சமூகக் கட்டமைப்புகளில் முக்கியமான தரப்பாகும். அவர்கள் தனித்து உணர்வுரீதியான செயற்பாடுகளுடன் மட்டும் தமது நடவடிக்கைகளை மட்டுப்படுத்தவில்லை. மாறாக, ஐக்கிய அயர்லாந்தின் சுதந்திரம் தொடங்கி ஐக்கிய அயர்லாந்தின் உருவாக்கம் வரை சொந்த நிகழ்ச்சி நிரலில் நேர்த்தியான நிர்வாக முகாமைத்துவத்தோடு தமக்குரிய செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.*

**தொடரும் அரசியல் போராட்டம்:**

*அரசியல் போராட்டம், ஆயுதப் போராட்டம், போர் நிறுத்த உடன்பாடுகள், சமாதானப் பேச்சுவார்த்தைகள், புரிந்துணர்வு ஒப் பந்தங்கள் என்று நீடித்த போதும் பிரித்தானியாவின் கட்டுப் பாட்டுக்குள் இருக்கும் வட அயர்லாந்து, அயர்லாந்து குடியரசுடன் இணைக்கப்பட்டு ஐக்கிய அயர்லாந்து உருவாக வேண்டும் என்ற இலட்சியத்தில் சின் பையின் தொடர்ந்தும் உறுதியாக இன்னமும் இருந்து வருகிறது.*

12

# ஸ்கொட்லாந்து – தனித்துவமான தேசம் :

## ஸ்கொட்லாந்தின் சுயாட்சிக்கான பேரவா நனவாகுமா... தனிநாடு கோரிக்கை 2014 வாக்கெடுப்பில் தோல்வி!...




*அத்லாந்திக் சமுத்திரத்தின் உள்ளே தலையை நுளைத்து பிரித்தானியாவை உதைத்துக்கொண்டிருக்கும் அழகிய குடாநாடு தான் ஸ்கொட்லாந்து (Scotland). அவர்களது வாழ்க்கை முறை பிரித்தானிய மக்களிடமிருந்து வித்தியாசமானது. ஸ்கொட் மக்கள் தனித்துவமானவர்கள் என்பதில் ஐயமில்லை.*

*நாம் ஏன் இன்னொரு நாட்டுக்குள் வாழவேண்டும்? நாம் பழையபடி ஸ்கொட்லாந்து தேச மக்களாக இருக்கலாமே என்ற பேரவா அந்த நிலப்பரப்பை சேர்ந்த மக்களுக்கு இன்னமும் உண்டு.*

*ஸ்கொட்லாந்து தேசம் ஏறக்குறைய 790 தீவுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் அழகானதாகும். பிரித்தானியாவின் இன்னொரு அங்கமான ஸ்கொட்லாந்திலிருந்து பயணித்தால் அழகிய*

*நீண்ட மலைகளும் அருவிகளையும் அங்கே கண்குளிர காணலாம்.*

**தனிநாடு கோரிக்கையின் பின்னணி :**

*17ம் நூற்றாண்டில் ஸ்கொட்லாந்து பெரும் பொருளாதார நெருக்கடியில் இருந்தது. இங்கிலாந்திடம் இருந்து நிதி உதவிகள் பெறுவதற்காக ஸ்கொட்லாந்து தனி நாடு என்கிற நிலையை விட்டுக்கொடுத்து இங்கிலாந்துடன் இணைய வேண்டி வந்ததென்கிற ஒரு பார்வையும் உண்டு.*

*அந்தக் காலத்திலேயே ஸ்கொட்லாந்து இணைக்கப்பட்டதை பலர் எதிர்த்து வந்துள்ளனர். ஸ்கொட்லாந்து தனி நாடாக வேண்டும் என்ற கோரிக்கை மேலெழுவதும் பின்னர் அமுங்கிப்போவதும் என்பதும் கடந்த முந்நூறு ஆண்டுகளில் பல தடவைகளில் நடந்துள்ளது.*

*ஸ்கொட்லாந்து இங்கிலாந்திற்கான பொருளாதார வலுவினையும் அரசியல் பலத்தையும் எப்போதும் கொடுத்திருந்திருக்கின்றது. அங்கு இருக்கும் எண்ணெய் வளம் மற்றும் அங்கு நிலை கொண்டிருக்கும் அணுவுந்தி நீர்மூழ்கிக் கப்பற்படையும் இதற்கான முக்கிய காரணங்களாகும்.*

**இங்கிலாந்தின் பொருளாதார வலு :**

*1690 களில் ஸ்காட்லாந்து தன்னை தலைசிறந்த வணிக நாடாக்கும் பொருட்டு பனாமா காலனியாக்கம் (டேரியன் திட்டம்,* Darien Scheme*) என்ற திட்டத்தினை செயல்படுத்தியதை உலகறியும்.*

**வேறு வேறு நாடுகளா இங்கிலாந்தும் ஸ்கொட்லாந்தும் ?**

*வரலாற்று ரீதியாக 1603 ஆம் ஆண்டில் இரு நாடுகளும் ஒரே ராணியின் கீழ்* (Union of Crowns*) இணைக்கப்பட்டதிலிருந்தே அரசியல் ரீதியாக இரு நாடுகளையும் இணைப்பதற்கான முயற்சிகள் 1606,1667 மற்றும் 1689 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன.*

*ஆயினும் இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் 1707 வரை தனித்தனி நாடுகளாகவே இருந்தன. 1707 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இணைப்பு ஒப்பந்தத்தின்* (Treaty of Union*) வழியாக இரு நாடுகளும்* (United Kingdom*) ஐக்கிய இராஜ்ஜியம் என்ற ஒன்றாக இணைந்தன. இது மே 1, 1707இல் நடைமுறைக்கு வந்த தினமாகும்.*

*இதன்பின்னர் இங்கிலாந்தும் ஸ்கொட்லாந்தும் வேறு வேறு நாடுகளாக இருந்து 1707ஆம் ஆண்டின் பின்னர் தான் ஸ்கொட்லாந்தின் நாடாளுமன்றம் இங்கிலாந்தின் நாடாளுமன்றத்துடன்*




ஒன்று சேர்க்கப்பட்டது.

அப்போது இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தில் ஸ்கொட்லாந்துக்கான 71 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன.

**ஸ்காட்லாந்தை பிரான்சு கைப்பற்றிவிடும் ?**

ஸ்காட்லாந்துடனான இணைப்பிற்கு இங்கிலாந்து முயன்றதற்கு முக்கிய காரணம் ஸ்காட்லாந்தும் பிரான்சும் இணைந்துவிடும் அல்லது ஸ்காட்லாந்தை பிரான்சு கைப்பற்றிவிடும் என்பதே. அவ்வாறு கைப்பற்றினால் அது இங்கிலாந்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமையும் என இங்கிலாந்து எண்ணியது.

அதனால் ஸ்காட்லாந்திற்கு பொருளாதார உதவி செய்ய மறுத்து இணைப்பிற்கு மறைமுக அழுத்தம் அளித்தது.

அதனைத் தொடர்ந்து 1705 ஆம் ஆண்டில் இரு நாடுகள் சார்பிலும் நிர்வாகக்குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில் இருநாடுகளிலும் இருந்து தலா 31 உறுப்பினர்கள் இருந்தனர். பல கட்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு 1706 ஜூலை 22 ல் ஒரு முடிவு எட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இங்கிலாந்து மற்றும் ஸ்காட்லாந்தின்

*நாடளுமன்றங்களில் சட்டம் இயற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து **1707** மே **1** முதல் ஐக்கிய ராஜ்ஜியம் என அறிவிக்கப்பட்டது.*

*இவ்வொப்பந்தத்தின்படி இரு நாட்டு நாடாளுமன்றங்களும் ஒன்றாக வெஸ்ட்மினிஸ்டரில் ஒரே நாடாளுமன்றமாக இணைக்கப் பட்டது. அதில் **45** மக்களவை உறுப்பினர்களும், **16** பேராயர் அவை உறுப்பினர்களும் ஸ்காட்லாந்தில் இருந்து தேர்வு செய்யப்பட்டனர்.*

**ஸ்கொட்டிஸ் அடையாளம் பேணப்பட்டது.**

*ஸ்கொட்லாந்து தனக்கேயுரிய நாணயப் பெறுமதி, திருச்சபை, சட்டங்களும் நீதித்துறையும், உள்ளூராட்சி மன்ற முறைமைகள், கல்விக் கட்டமைப்புகள் போன்றவற்றைத் தொடர்ந்து பேணி வந்தது. இதனால், ஸ்கொட்டிஸ் என்னும் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர் என் கின்ற சுய அடையாளம் இக்காலந்தோறும் பேணப்பட்டு வந்தது எனலாம்.*

*18ஆம் நூற்றாண்டிற்குப் பின்னான காலகட்டத்தில் பிரித் தானியாவுடன் இணைந்திருந்தது ஸ்கொட்லாந்திற்கு சாதகமாகத்தான் இருந்தது.*

*உலகத்தையே ஆண்டது பிரித்தானியா. பிரித்தானிய காலனித்துவ நாடுகளிலெல்லாம் அரச நிர்வாகிகளாகவும், அங்குள்ள தொழில் துறைகளை நடத்துபவர்களாகவும் ஸ்கொட்லாந்தியர்களே இருந்தனர்.*

*ஆங்கிலேயர் உலகை ஆண்டனர், ஸ்கொட்லாந்தியர்கள் அதனை நடத்தினர் என்றும் சொல்லுவர். உலகிலேயே இரண்டாவது கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட நாடாக ஸ்கொட்லாந்து அன்று திகழ்ந்தது. இவ்வாறு உலகின் ஆட்சியாளர்களாக இருந்த பெருமையும் தொழில் வளர்ச்சியும் ஒருங்குசேர ஸ்கொட்லாந்தின் தேசிய உணர்வு அடங்கியிருந்தது.*

**ஸ்கொட்லாந்தின் பொருளாதார வீழ்ச்சி:**

*இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர், காலனித்துவ நாடுகள் ஒவ்வொன்றாக சுதந்திரம் பெற்றன. அமெரிக்கா மற்றும் ஜப்பான் பாரிய பொருளாதார சக்திகளாக உயர்நதன. இச்சூழலில் ஸ்கொட்லாந்தின் பொருளாதாரம் வீழ்ச்சி காணத் தொடங்கியது.*

***1970**களில் வடகடலில் (North Sea) எண்ணெய் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டபோது, இது ஸ்கொட்லாந்தின் எண்ணெய் என்றே அங்குள்ள அரசியல் கட்சிகள், ஸ்கொட்லாந்துத் தேசியக் கட்சி (SNP), அதனைப் பற்றிப் பெருமையாகப் பேசின.*




ஜேம்ஸ் கலகன், தொழிற்கட்சியின் அரசில் பிரதம மந்திரியாகவிருந்த காலத்தில், 1979ஆம் ஆண்டு ஸ்கொட் மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களடங்கிய சட்டவாக்க சபையினை அளிப்பதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இவ்வாக்கெடுப்பில் 52.9 விதமானோர் அதிகாரப்பகிர்வுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தும் 40 வீதமான மக்கள் மட்டுமே வாக்கெடுப்பில் கலந்துகொண்டார்கள் என்பதனால் சட்டப்படி அது செயலற்றதாகியது.

**மார்கரெட் தச்சரின் இரும்பு ஆட்சியில் :**

மார்கரெட் தச்சரின் கன்சர்வேடிவ் கட்சியின் ஆட்சியே ஸ்கொட்லாந்தின் தேசிய உணர்வுகளை முதன் முதலாகக் கிளாந்து விட்டது எனலாம். ஸ்கொட்லாந்து கைத்தொழில் மயப்பட்ட நாடாகையால், தொழிலாளர்களின் நலன் பேணும் பண்பாடு கொண்டிருந்தது. ஆனால், இரும்புப் பெண் மார்கரெட் தச்சரோ தொழிற் சங்கங்களை உடைத்து, தொழிலாளர்களுக்கு அதுவரை கிடைத்து வந்த சமூகப் பாதகாப்பு நலன்புரித் திட்டங்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக இல்லாதொழிக்க ஆரம்பித்தார். அக்காலத்தில் கல்விக்கும் சுகாதாரத்துக்கும் ஒதுக்கப்பட்ட நிதிகள் அரைவாசியாகக் குறைந்தன. இவருடைய ஆட்சிக்கு எதிரான குரல்கள் ஸ்கொட் லாந்தில் ஒலிக்க ஆரம்பித்தன. குறிப்பாக, தொழிலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் அமைக்கப்படுவதிலேயே பெரும் முரண்பாடுகள் எழலாயின.

**ஸ்கொட் தேசிய இயக்கத்தின் வளர்ச்சி :**

ஸ்கொட் சட்டங்களின் படியன்றி பிரித்தானியாவின் சட்டங் களின்படி இத்திட்டங்கள் செயற்படுத்தப்படவே ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்தன. அப்போதைய கன்சர்வேடிவ் அரசு இவற்றை எல்லாம்

கவனிக்கவே செய்யவேயில்லை. தமக்கு ஏற்புடையதல்லாத சட்டங்களுக்கும் கொள்கைத் திட்டங்களுக்கும் தாம் ஏன் தலை சாய்க்க வேண்டும் என்கின்ற கேள்விகளுடன் ஸ்கொட்லாந்தின் தேசிய இயக்கம் வீறுகொண்டெழ ஆரம்பித்தது.

வரலாற்றிலேயே முதன் முதலாக SNP மக்கள் ஆதரவைத் திரட்ட ஆரம்பித்தது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்கூட இதற்கு உந்து சக்தியாக இருந்தது எனலாம்.

அப்பொழுது இங்கிலாந்துடன் இணைந்திருப்பது அவ்வளவு முக்கியமான காரணியாகத் தென்படவில்லை. மேலும், 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் ஏற்பட்ட தொழில்துறை மாற்றங்களில் உருவான மென்தொழில்களின் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திகள் யாவும் இங்கிலாந்திலேயே நிகழ, அவற்றின் கிளை ஸ்தாபனங்களே ஸ்கொட்லாந்தில் தாபிக்கப்படுகின்றன என்கின்ற குறையும் ஸ்கொட் தேசிய இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தூபம்போட்டது.

**ஸ்கொட்டிஷ் தேசியக் கட்சி:**

1934ல் ஆரம்பிக்கப்பட்ட ஸ்கொட்டிஷ் தேசியக் கட்சி, தனி நாடு கோரிக்கையை முன்னிறுத்தியே அரசியல் செய்து வருகிறது. ஐக்கிய ராஜ்ஜியத்துக்குள்தான் ஸ்கொட்லாந்து இருந்தாலும் 1999ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்துக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதிலிருந்து, அது நிறைய சுயாட்சி அதிகாரங்களைக் பெற்றுள்ளது. தற்போது ஸ்கொட்லாந்துக்கென தனி நாடாளுமன்றம் உள்ளது. சில பொதுவான விஷயங்கள் தவிர மற்ற தங்களுக்கான சட்டங்களை அவர்களே இயற்றிக்கொள்கின்றனர்.

**1997ஆம் ஆண்டு வாக்கெடுப்பு :**

1997ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வாக்கெடுப்பைத் தொடர்ந்து ஸ்காட்லாந்தின் மீண்டும் நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது. இந்நிலையில் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தனி நாடு கோரிக்கையை வலியுறுத்திய ஸ்காட்லாந்து தேசியக் கட்சி ஆட்சியைப் பிடித்தது. இதையடுத்து பிரிட்டனிலிருநது முற்றிலும் சுதந்திரம் பெற்ற தனி நாடாக வேண்டுமா என்பதற்கான வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது.

**ஸ்கொட்லாந்தின் சுயாட்சிக்கான பேரவா ?**

ஸ்கொட்லாந்தின் சுயாட்சிக்கான பேரவா அரசியல் இயக்கங்களுக்கு வித்திட்டது இன்று நேற்றல்ல. ஆரம்பத்தில்

*அதிகாரத்தை பரவலாக்கிக்கொள்ளும் கோரிக்கைகளும் கருத்துக் கணிப்புக்கள் ஊடாக அங்கீகரிக்கப்பட 1999இல் ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்துக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.*

*ஐக்கிய இராச்சியம் என்ற கட்டமைப்புக்குள் இருந்து விடுபட வேண்டும் என்று ஸ்கொட்லாந்து மக்கள் கொண்டிருந்த அவாவுக்கு அதிகாரப் பரவலாக்கல் நிரந்தர பரிகாரமாக அமையவில்லை என்பது உண்மையே.*

*பிரித்தானியாவில் அங்கம் வகிக்கின்ற 50 இலட்சம் மக்களைக் கொண்ட ஸ்கொட்லாந்து, 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், நாட்டினை சுதந்திரமான நாடாகப் பிரகடனம் செய்வதா இல்லையா என்கின்ற கேள்வியுடன் ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடாத்தியது.*

*பிரித்தானியாவுடன் ஸ்கொட்லாந்து இணைந்து கொண்ட முன்னூறுக்கும் மேலான ஆண்டுகள் கடந்த பின்னர் ஸ்கொட்லாந்து பிரிந்து தனியரசு அமைப்பதற்கான இந்த வாக்கெடுப்பு நடத்தப் பட்டது. மூன்று நூற்றாண்டுகளாக தொடர்ந்து வந்த அரசியல் இணைப்பு ஒரு முடிவுக்கு வரும் வாய்ப்பு எழுந்தது.*

*ஆம் என்று அம்மக்கள் 2014 கருத்துக் கணிப்பில் வாக்களித்து இருந்தால் அது பிரித்தானியாவின் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர உறுப்புரிமையையும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அதன் அந்தஸ்தையும் பாதிக்கும் அளவிற்குப் போயிருக்கும் என எதிர்வு கூறப்பட்டது.*

*அதேவேளை இன்றும்கூட சுதந்திர ஸ்கொட்லாந்துக்கு ஆதரவான வாக்குகள் 29 வீதத்திலிருந்து 37 வீதம் வரைதான் இருக் கலாம் என கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஆனால் பிரித்தனியா வுடன் தொடர்ந்து இணைந்திருக்க ஆதரவான வாக்குகளோ 44 வீதமாக இருக்கின்றன. அப்படியிருந்தும்கூட அம்மக்களுக்கு தமது விருப்பைச் சொல்வதற்கான அடிப்படை உரிமை வழங்கப்பட்டிருக் கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.*

**2014 ஸ்காட்லாந்து தனி நாடு வாக்கெடுப்பு :**

*2014இல் பிரிட்டனிலிருந்து பிரிந்து ஸ்காட்லாந்து முற்றிலும் சுதந்திர நாடாகச் செயல்படுவது தொடர்பான வாக்கெடுப்பு நடை பெற்றது. ஆயினும் தனி நாடாகச் சுதந்திரம் பெறுவது தொடர்பாக ஸ்காட்லாந்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் பிரிட்டனிலிருந்து பிரிய வேண்டாம் என்று பெரும்பான்மை வாக்காளர்கள் வாக்களித் துள்ளனர்.*

*ஸ்காட்லாந்தின் 32 பிராந்திய பகுதிகளில் 28 பகுதிகள் சுதந்திரம் வேண்டாம் என வாக்களித்தனர். பெரும்பான்மை*

வாக்காளர்கள் தனி நாடு கோரிக்கையை நிராகரித்துள்ளதை ஏற்றுக் கொள்வதாக அன்றைய ஸ்காட்லாந்து முதல் அமைச்சர் அலெக்ஸ் ஸால்மண்ட் அறிவித்தார்.

2014 பொது வாக்கெடுப்பால் சுதந்திரத்தை நிராகரித்து 20,01,926 வாக்குள் பெறப்பட்டுள்ளன. மொத்த வாக்கு எண்ணிக்கையில் இது 55 சதவிகிதமகும். சுத்நதிரத்துக்கு ஆதரவாக 16,17,989 வாக்குகள் பெறப்பட்டுள்ளன. சுதந்திரம் வேண்டும் என வாக்களித்தவர்களின் அளவு சுமார் 45 சதவிகிதமாகும்.

அடுத்ததாக இந்த வாக்கெடுப்பினால் பிரிவினை ஏற்பட்டால் நாணய மதிப்பு வீழ்ச்சி, ராணுவம் துண்டாடப்படுவது போன்ற விபரீதங்களுக்கு வழி வகுக்கும் என்று அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கேமஷரூன் எச்சரித்தார்.

தனி நாடாக மாற வேண்டும் என்பது ஸ்கொட்லாந்துடைய தற்போதைய ஆட்சியாளர்களின் எண்ணமாக இருக்கிறது என்றாலும் அப்பகுதி மக்கள் அதனை அந்த அளவுக்கு விரும்புகிறார்கள் என்று நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. தனி நாடு கோரிக்கையைவிட ஐக்கிய ராஜிஜியத்துக்குள் இருப்பதையே ஸ்கொட்லாந்து மக்களில் பெரும்பான்மையானோர் ஆதரிப்பதாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகள் காட்டின.

பிரித்தானியாவின் இன்னொரு அங்கமாக இருக்கும் ஸ்கொட்லாந்து பல தீவுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் அழகான தேசமாகும். நாம் ஏன் இன்னொரு நாட்டுக்குள் வாழவேண்டும்? நாம் பழையபடி ஸ்கொட்லாந்து தேச மக்களாக இருக்கலாமே என்ற பேரவா அந்த நிலப்பரப்பை சேர்ந்த மக்களுக்கு இன்னமும் உண்டு.

# 13

# கொசோவோ – ஐரோப்பாவில் புதிய தனிநாடு:

## எண்ணெய் வள ஆதிக்க அரசியலும்...
## பால்க்கன் பிராந்திய செயற்கை தேசமும்...




*கொசோவோ தனிநாடு உருவாக்கமானது எண்ணெய் வள ஆதிக்க அவசியத்தின் அடிப்படையில் தனிநாடாக உருவானதாகும். பால்க்கன் (Balkan Region) பிராந்தியத்தில் பொருளாதார காரணங்களுக்காக செர்பியாவின் உள்ளே நுழைந்து ஒரு செயற்கை யான தேசமாக "கொசோவோ" (Kosovo) அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் கூட்டாக உருவாக்கியுள்ளன என்பதே உண்மை.*

*கிழக்கு ஐரோப்பாவிலிருந்து எண்ணெய் வளத்துக்கும், எரிபொருட்கள் பரவலான வினியோகத்திற்காக மேற்கு ஐரோப்பா விற்கு வருகையில் ஜெர்மனியும் பிரான்சும் பெரிதும் பயனடையும் என்பதால் இந்நாடுகள் கோசொவோ விடுதலையையும் அங்கே தங்களின் ராணுவ இருப்பையும் முன்னிலைப் படுத்தினர்.*

*உண்மையில் அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, டென்மார்க், பிரான்ஸ் ஆகியவற்றின் கோசொவோ விடுதலையின் பின் வலுவான பொருளாதாரக் காரணிகளே உள்ளன. கொசோவோ சுதந்திரத்தின் பின்னர், எண்ணெய் வள ஆதிக்கத்திற்காக செயற்கையாக உருவாக்கப் பட்ட தேசத்தின் இன்றைய நிலமை உலகறியும்.*

**1991 செர்பியாவில் பிரிந்த தனி நாடு:**

*முன்னாள் யூகோஸ்லாவியவில் 1974-இல் மார்ஷல் டிட்டோ வின் ஆட்சியில் சுயநிர்ணய அதிகாரம் பெற்றிருந்த கொசோவோ 1991-இல் செர்பியாவிலிருந்து பிரிந்து தனி நாடாக அறிவித்தது. செர்பியா அப்போதும், ஏன் இப்போதும் இதனை ஏற்றுக்கொள்ள வில்லை. அல்பேனியா தவிர உலக நாடுகள் எதுவும் இந்த அறிவிப்பை ஏற்காத நிலையில் மிலோசெவிக் கொசோவோவை செர்பியாவின் நேரடி அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தார்.*

*1990 களின் பின் பிரிவினை கோரும் அல்பேனிய கொசோ வோக்களின் மீது கடுமையான அடக்குமுறையும் வன்முறையும் கட்ட விழ்த்து விடப்பட்டது. ஏறக்குறைய 10 லட்சம் கோசவொ அல்பேனியர்கள் அங்கிருந்து வெளியேறினர். தொடர்ந்த கலவரங் களில் பல்லாயிரக்கணக்கான அல்பேனியர்களும் செர்பியர்களும் உயிரிழந்தனர். ஐநாவும் நேட்டோவும் தலையிடத்தொடங்கின.*

**செர்பியாவில் நேட்டோ குண்டு மழை:**

*நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர நேட்டோ விமானங்கள் செர்பிய தரப்பு மீது, 72 நாட்கள் தொடர்ந்து குண்டு மழை பொழிந்ததில் செர்பியா சின்னாபின்னமாக்கப்பட்டது. அப்போது பொறிஷ் யெல்ட்சின் தலைமையிலான ரஷ்ய அரசு நேட்டோ தாக்குதலை தடுக்காமல், கண்ணை மூடி - மௌனம் சாதித்தது. இதன் பின் செர்பியப்படைகள் கொசோவோவிலிருந்து பின்வாங்க, கொசோவோ ஐநாவின் பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதியாக மாறியது.*

**ரஷ்யாவின் வீட்டோ அதிகாரம் :**

*2007-இல் ஐநாவின் மேற்பார்வையில் கொசோவோவுக்கு தனிநாடு தருவது என்ற தீர்மானம் ரஷ்ய எதிர்ப்பினால் கைவிடப் பட்டது. ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் ரஷ்யாவிற்கு “வீட்டோ” (veto) அதிகாரம் உள்ளமையால் இந்த தீர்மானம் கைவிடப்பட்டது. ஆயினும் ரஷ்ய ஒப்புதல் இல்லாமல் ஐநா பாதுகாப்பு கவுன்சிலிலால்*




அங்கீகரிக்கப்படாமலேயே செர்பியாவிலிருந்து விடுதலை பெற்று பிரிவதாக கொசோவோ தன்னிச்சையாக அறிவித்தது.

கொசோவோவின் சுதந்திரம் சட்டவிரோதமானது என்றும் ரஷ்யா அறிவித்தது. இருப்பினும், கொசோவோவின் சுதந்திரம் அறிவிக்கப்பட்ட நான்கு நாட்களுக்குள், பதினைந்து நாடுகள் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஆஸ்திரேலியா உடனடியாக கொசோவோ சுதந்திரத்தை அங்கீகரித்தன. இந்நிலையில், உலகத்தின் பல பகுதிகளில் உள்ள செர்பியர்கள் கொசோவோ விடுதலைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

2009 இன் நடுப்பகுதியில், ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 உறுப்பினர்களில் 22 பேரும், உலகெங்கிலும் உள்ள 63 நாடுகளும் கொசோவோவை சுதந்திரமாக அங்கீகரித்தனர். தற்போது பல நாடுகள் கொசோவோவில் தூதரகங்கள் அல்லது தூதுவர்களை நிறுவியுள்ளன.

கொசோவோ முழு சர்வதேச அங்கீகாரத்தை பெறவும், காலப் போக்கில், கொசோவாவின் சுதந்திர நிலைப்பாடு சுதந்திரமாகவும் இருக்கும், அதனால் உலகின் அனைத்து நாடுகளும் கொசோவோவை சுயாதீனமாக அங்கீகரிக்க வேண்டும் என்று கோருகின்றன. இருப்பினும், கொசோவாவிற்கு சீனா மற்றும் ரஷ்யா ஆகியவை

கொசோவோவின் சுதந்திர இருப்பை அங்கீகரிக்காத வரை ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ மற்றய நாடுகள் கொசோவோவிற்கு ஆதரவாக செயற்படுகின்றன.

பெப்ரவரி 17, 2008 இல், கொசோவோ சட்டமன்றம் ஒருமனதாக செர்பியாவிலிருந்து சுதந்திரம் பெற்ற நாடாக அறிவித்தது.

**துருக்கிய ஆதிக்கம்:**

பல நூற்றாண்டுகளாக ஐரோப்பிய, ஆசிய பகுதிகளை தரை வழியாக இணைப்பதாலும், மத்தியதரைக்கடலுக்கும் கருங் கடலுக்கும் இடையேயான நிலப்பரப்பை கொண்டிருந்ததாலும், வாணிப முக்கியத்துவம் மிகுந்தாகவும் பல கலாசாரங்களையும் பேரரசு மாற்றங்களையும் கண்ட பிரதேசமாகவும் பால்கன் பிரதேசம் விளங்கியது.

ரஷ்யாவின் பெரும்பான்மை இனமான ஸ்லாவியர்கள் (Slavic) பல நூற்றாண்டுகள் முன்பே இங்கு குடிபெயர்ந்து வாழ்ந்து வந்தனர். செர்பியாவில் ஸ்லாவிய பழமைவாத கிறித்தவரும், செர்பியப் பகுதியாக இருந்த கொசோவோவிலும் அதன் அண்டை நாடான அல்பேனியாவிலும் முஸ்லீம்களும், குரோவேஷியாவில் கத்தோலிக்க மதத்தவரும் பெரும்பான்மையாக உள்ளனர்.

இந்நிலப்பகுதியில் செர்பியர்களும் அல்பேனியர்களும் பல நூற்றாண்டுகளாக அருகருகே வாழ்ந்து வந்தனர். முதலில் ரோமப்பேரரசின் கீழும், இருந்த செர்பியர்கள் மற்றும் அல்பேனியர் கள் கலாசாரத்தில் பெருத்த வேறுபாடுகள் இல்லை. பிசாண்டிய பேரரசின் கீழ் இவ்விரு இனத்தவரிடத்தும் கிறித்துவ கலாசாரமே பெரிதும் பரவியிருந்தது.

செர்பியா, பால்கன் நாடுகள் என்றழைக்கப்படும் தீபகற்பப் பகுதியில் உள்ள பிரதேசம். குரோயேஷியா, போஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினா, மாசடோனியா, செர்பியா, மாண்டிநெக்ரோ, அல்பேனியா, க்ரீஸ், பல்கேரியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய நிலப்பரப்பு இது.

14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை செர்பியர்களின் கையில் இருந்த இந்த நிலப்பிரதேசம், 1389-இல் ஓட்டோமான் அரசுடனான போரில் தோல்வியடைந்து அடிமையுற்றது. அடுத்த நூறு வருடங்களில் பால்கன் பகுதிகள் முழுமையாக துருக்கியின் ஆதிக்கத்தின் கீழ் வந்தன.



**வேளாண்மை வளமான நிலம்:**

*வேளாண்மைக்கு ஏற்ற வளமான பகுதிகளாக இருந்த அல்பேனியா மற்றும் கோசொவோ பகுதிகளில் அல்பேனிய இனத்தவர் அதிக அளவில் இடம் பெயர்ந்து வாழத் தொடங்கினர்.*

*ஒட்டோமான் பேரரசின் கீழ் படிப்படியாக இந்த அல்பேனியர்கள் இஸ்லாமுக்கு மாற, ஆர்த்தடாக்ஸ் கிறித்துவம் எனப்படும் பழைய கிறித்துவத்தை சார்ந்திருந்த பல செர்பியர்கள் அல்பேனியா மற்றும் கோசொவோவை விட்டு வெளியேறி வடக்கே பெல்க்ரேடை நோக்கி நகரத் தொடங்கினர்.*

*15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்பேனியாவிலும் கோசோவோவிலும் கிறித்துவம் சிறுபான்மையாக்கப்பட்டு விட்டது. ஆதிக்க இனமாக இருந்த செர்பிய இனம் ஒட்டோமான் பேரரசில் இரண்டாம் தர குடிகளாக்கப்பட்டனர். அதே சமயம் அல்பேனியர்கள் முதல் தர குடிகளாக பல சலுகைகளுடன் அல்பேனியா, கோசொவோ போன்ற வளமான நிலப்பரப்புகளில் பல்கிப்பெருகத் தொடங்கினர். 1990-களில் இந்த நிலப்பரப்புகளில் நடந்த ரத்த நிகழ்வுகளின் ஆரம்பமாக செர்பியர்களுக்கும் அல்பேனிய கோசொவர்களுக்கும் இடையே பகைமை புகையத் தொடங்கியது.*

**ஒட்டோமான் பேரரசு தோல்வி**

*19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா பலம் பெறத் தொடங்கியதனால் துருக்கியை மையமாகக் கொண்ட ஒட்டோமான் பேரரசு பலம் இழக்கத் தொடங்கியது.*

1878-இல் நடந்த ஓட்டோமான் ரஷ்யப்போரில் ஓட்டோமான் பேரரசு தோல்வியடைய, ஸ்லாவிய ரஷ்யாவின் நட்பு இனமான செர்பியர்கள் மீண்டும் பலம் பெறத்தொடங்கினர்.

ஓட்டோமான் பேரரசில் மேலாண்மையை இழந்த செர்பியர்கள் அதனை மீண்டும் பெறும் நாள் ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்குப்பின் வந்தது.

செர்பிய தேசியவாதம் பல மடங்கு பலமடைந்தது. ஆனால் இதன் எதிர்விளைவாக கொசோவோநிலப்பரப்பில் சிறுபான்மையாய் இருந்த செர்பியர்கள் அல்பேனியர்களால் வடக்கு நோக்கி தள்ளப் பட்டனர்.

கொசோவோ நிலப்பகுதி இஸ்லாமிய அல்பேனியர்கள் ஆதரவு பகுதியாகவும், செர்பியா ஆர்த்தடாக்ஸ் கிறித்துவத்தைச் சார்ந்தவர்கள் பகுதியாகவும் உருவெடுத்தது. 19-ஆம் நூற்றாண்டின் முடிவில் செர்பியர்கள் கையில் மீண்டும் செர்பிய ஆதிக்கம் முழுமையாக வந்தடைந்தது.

1912-இல் செர்பியா உள்ளிட்ட நான்கு பால்கன் நாடுகள் ஒன்றிணைந்து துருக்கியின் நட்பு நாடான அல்பேனியா மீது போர் தொடுத்தன. இப்போரில் அல்பேனியா தோல்வியைத் தழுவ, அதைத்தொடர்ந்து கொசோவோ வில் செர்பியப்படைகள் நிகழ்த்திய வன்முறையில் பல கொசோவோ மக்கள் உயிரையும் உடைமையயும் இழந்தனர்.

இந்தப்போரின் விளைவாக கொசோவோ செர்பியாவின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. கொசோவோவில் பெரும்பான்மையாக இருந்த அல்பேனியர்கள் செர்பியாவின் மேலாண்மையை எதிர்க்கத் தொடங்கினர்.

**முதல் உலகப்போரின் மூல காரணம்:**

முதல் உலகப்போர் மூண்டதற்கே போஸ்னிய செர்பிய மாணவன் ஒருவன் ஆஸ்திரியா-ஹங்கேரி இளவரசரக் கொன்றதுதான் காரணமாக அமைந்தது. அத்துடன் ஸ்லாவிய மக்கள் வாழும் செர்பியாவுக்கு ஸ்லாவிய பெரும்பான்மை ரஷ்யா எப்போதுமே ஆதரவு தந்துள்ளது.

இதைத் தொடர்ந்து ஆஸ்திரியா-ஹங்கேரி செர்பியா மீது போர் தொடுக்க, ரஷ்யா செர்பியாவுக்கு ஆதரவாகவும், ஜெர்மனி ஆஸ்திரியா-ஹங்கேரிக்கு ஆதரவாகவும் போர்க்களத்தில் இறங்கியது தான் ஐரோப்பாவை முதல் உலகப்போருக்கு இட்டுச்சென்றது.

முதல் உலகப்போரில் ஜெர்மனியின் தோல்வி செர்பியர்கள்



தரப்பை வலுப்படுத்தியது. கிறித்துவம் தோய்ந்த செர்பிய தேசிய வாதம் மீண்டும் வலுப்பெறத் தொடங்கியது.

**இரண்டாம் உலகப்போரில் செர்பியர்கள்**

இந்நிலையில் இரண்டாம் உலகப்போர் மூண்டபோது, செர்பியர்கள் நாசிகளுக்கு எதிராக கொரில்லா (Gorilla warfare- Partisans) படைகளாகப் போரிடத்துவங்கினர். இது முஸ்லீம்கள் மீதான வன் முறையாக உருவெடுத்தது. அல்பேனியர்களோ நாசிகளோடு ஒத்துழைத்து செர்பியர்களுக்கும், யூதர்களுக்கும் எதிரான வன்முறை களில் ஈடுபட்டனர்.

இரண்டு உலகப்போர்களிலும் இரு தரப்புகளிலும் நிகழ்ந்த பாஸ்பர வன்முறைகள் பால்கன் பகுதியில் கிறித்துவ முஸ்லீம் உறவை கடுமையாக சீர்குலைத்து விட்டது. பார்ட்டிசன்களின் தலைமை யேற்றுப் போரிட்ட கம்யுனிசத் தலைவர் மார்ஷல் டிட்டோ இரண் டாம் உலகப்போரின் முடிவில் ஒருங்கிணைந்த யுகொஸ்லாவியாவின் அதிபரானார்.

**மார்ஷல் டிட்டோ கம்யூனிச ஆட்சி :**

கம்யூனிச டிட்டோவின் ஆட்சி, பிரிவினைவாதத்தை ஒடுக்கும் பொருட்டு முதலில் கொசோவோவை கடுமையான அடக்குமுறை யால் ஆண்டது. பின்னாளில் டிட்டோ அராபிய நாடுகளுக்கு ஆதரவாளரானார். **1967-** அராபிய இஸ்ரேல் போரில் இஸ்ரேல்

எதிர்ப்பு நிலையை எடுத்தார்.

இந்நிலையில் யுகோஸ்லாவியாவில் வலுவடைந்து வந்த செர்பிய தேசியவாதத்தை எதிர்க்கும் முகமாக போஸ்னிய முஸ்லீம் களை மத அடிப்படையில் “தனி தேசிய அடையாளம் உடையவர்கள்” என டிட்டோ அறிவித்தார்.

இது பால்கன் பகுதியில் மத அடிப்படையில் நாடு பிரிவினை செய்யப்படுவதற்கு அரசியல் அங்கீகாரத்தைத் தந்து விட்டது. தேசியவாதத்திற்கு எதிராக சிறுபான்மை மதவாதத்தை வளர்க்கும் பிரிவினைவாதப் போக்குக்கு பாதை போட்டுத்தந்தது டிட்டோவின் இந்த செயல்.

செர்பிய தேசிய வாதம் கடுமையாக ஒடுக்கப்பட்ட டிட்டோவின் ஆட்சியில் கொசோவோவின் அல்பேனிய முஸ்லீம் களைத் திருப்தி செய்யும் வகையில் பல சிறப்பு சலுகைகள் வழங்கப் பட்டன. இது “கிறித்துவ செர்பியர்க”ளுக்கும் “இஸ்லாமிய அல்பேனியர்களு”க்கும் இடையே நிரந்தரமான பிளவையும் வெறுப்பையும் ஏற்படுத்தி விட்டது.

**மிலோசெவிக் கால ஆட்சி :**

*1980*-இல் டிட்டோ மறைவுக்குப்பின் முஸ்லீம்களுக்கு எதிரான கிறித்துவ செர்பிய நடவ்டிக்கைகளாக பீறிட்டு வெளிக் கிளம்பின. கொசோவோக்கள் தனிநாடு கேட்பதை செர்பியர்கள் நாட்டைப் பிளவுபடுத்துவதாக கடுமையாக எதிர்க்கத் தொடங்கினர்.

இந்நிலையில் பல ஆண்டுகள் அடக்கப்பட்ட தேசிய வாதத்தின் தீவிர உருவமாக செர்பிய அதிபர் மிலோசெவிக் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். இவரும் டிட்டோவின் கம்யுனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்தான்.

*90* வீதமான முஸ்லீம் மக்கள் வாழும் கொசோவோவின் விடுதலைப்பிரகடனத்தை இஸ்லாமிய ம்க்கள் பேரவை (Organization of the Islamic Conference) வரவேற்றிருப்பதில் வியப்பில்லை.

மேற்கு ஐரோப்பாவினை நோக்கிய போதை மருந்து கடத்தலின் மூலம் கொசோவோ விடுதலைப்படைக்கு செர்பியர்களை எதிர்த்த போருக்கான தளவாடங்கள் வாங்க பெருமளவு பணம் கிடைத்தது எனவும் அமெரிக்காவால் குற்றஞ்சாட்டப்பட்டது. மேலும் ஜெர்மனி மற்றும் ஸ்விஸ் நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்ந்த அல்பேனியர்கள் தங்கள் வருமானத்தில் *3* சதவீதத்தை கொசோவோ விடுதலைப் போருக்காக அளித்தனர்.

*1990*-இன் பிற்பகுதிகளில் கொசோவோ விடுதலைப்படைக்கு

இஸ்லாமிய நாடுகளின் பண உதவி கிடைக்கவும் தொடங்கியது. அல்-குவைதா அமைப்பின் தொடர்பும் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

**எண்ணெய் அரசியல் :**

அமெரிக்காவைப் பொறுத்தவரை அல்பேனிய கொசோவோ தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அதன் தொலைநோக்குத் திட்டத்தின் முக்கியப்பகுதியாகும். காஸ்பியன் கச்சா எண்ணெயை மேற்கு ஐரோப்பாவிற்கு எடுத்துச்செல்லும் இந்த முக்கிய குழாய்ப் பாதையை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் முக்கியமான ஒன்று.

காக்கஸஸ் பகுதி, குறிப்பாக- காஸ்பியன் கடல் நில படுகை, ஏராளமான எண்ணெய் மற்றும் எரிவாயு வளத்தை உள்ளடக்கிய பகுதி. உலகிலேயே சவுதி அரேபியா, சைபீரியா, ஈரான் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக எண்ணெய் வளம் நிறைந்த பகுதி காஸ்பியன் படுகையாகும்.

இந்த எண்ணெய் வளத்தை மேற்கு ஐரோப்பாவிற்கு கருங் கடல் வழியாக இணைக்கும் முக்கியமான குழாய்ப்பாதை கொசோவோவின் அண்டை நாடான அல்பேனியா வழியாகச் செல்கிறது.

அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆம்போ (Ambo-Albanian Macedonian Bulgrian Oil Corporation) இந்தப்பகுதியில் அதிநீள குழாய்ப்பாதை அமைப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்தப் பாதை அல்பேனியாவில் முடிவடைகிறது.

கச்சா எண்ணெய் அல்பேனியாவிலிருந்து அமெரிக்க எண்ணெய்க்கப்பல்களில் ஏற்றப்பட்டு ராட்டர்டாம் வழியாக் நியூயார்க்/ நியுஜெர்சி துறைமுகத்தை வந்தடையும். “மத்திய கிழக்கு நாடுகளின் மீதான எண்ணெய்ச் சார்பை வெகுவாகக் குறைக்க வேண்டும்” என்ற எண்ணம் அமெரிக்காவில் வலுவடைந்து வரும் இந்நாளில், இந்த மாற்று திட்டம் அமெரிக்காவிற்கு மிகவும் அவசியமான ஒன்று.

பல நூற்றாண்டு வரலாற்றுச்சிக்கல்களில் உருவாகிக்கிடக்கும் இந்தப்பிரச்சனை கொசோவோவின் விடுதலையுடன் முடிந்து விடாது என்பது மட்டும் நிச்சயம்.வரலாறு நிலையாக ஓரிடத்தில் நின்று விடுவதில்லை. நியாயம் கிடைக்காத வரலாற்று அநீதிகள் வடுவாகிப் போனாலும் வலியை இழப்பதில்லை.



# தலைநிமிர் கழக யாழ் இந்துவின் மாற்றுக் குறையாத மன்னவன் !

(சோமசுந்தரம் சுரேஷ் முதலாவது ஆண்டு நினைவஞ்சலி)

"மாபெரும் சபை தனில்
நீ நடந்தால் உனக்கு
மாலைகள் விழ வேண்டும் - ஒரு
மாற்றுக் குறையாத மன்னவன் இவனென்று
போற்றிப் புகழ வேண்டும்"

திரைப்படப் பாடல் ஒன்றின் வரிகள் இவை. 2023 ஆம் ஆண்டு மே மாதம் பிற்பகுதி, ஒரு பெரிய சபையில், சுரேஷ் நடப்பதற்குப் பதில் நீண்ட துயிலில் கிடக்கிறான். மாலைகள் வந்து விழுகின்றன. அங்கிருப்போர் அவனைப் போற்றிப் புகழ்கிறார்கள். சொற்பூக்கள் சொரிகிறார்கள். மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று மனம் உருகுகிறார்கள்.

சிறு வயதிலிருந்து சுரேஷ் கால் வைத்த சபைகள் தான் வித்தியாசமே தவிர அவனுக்குக் கிடைத்த வரவேற்பு எப்போதும் ஒன்றே. ஏனென்றால், பாடசாலை விளையாட்டு மைதானம், அவன், மேற்கொண்ட படிப்பு, தேடிய வேலை, கற்றுக் கொண்ட ஏனைய கலைகள் போன்றவற்றை சபை என்று கருதினால், அங்கெல்லாம் முடி சூடா மன்னன் அவன். முக்கியமாக எதிரி இல்லா மன்னாதி மன்னன்.

சுரேஷ் பலவகையான விளயாட்டுகளுக்காக பல தடவை, பல மைதானங்களில், பல மட்டங்களில் நுழைந்திருக்கிறான். எப்போதும் வெற்றி வாகை சூடியே திரும்பி வந்திருக்கிறான். இங்கே என்ன சிறப்பு என்றால், சுரேஷ்டன் விளையாடியவர்கள், எதிரணியைச் சேர்ந்தவர்கள், பார்வை யாளர்கள் என்று எவருக்கும் சுரேஷ் மேல் எரிச்சல், பொறாமை,கோபம், பகை எதுவுமே வந்ததில்லை.

அதற்கு மாறாக, அவர்கள் மனதில் இருந்ததெல்லாம் "எப்படி சுரேஷ் போல தாமும் விளையாடலாம்" என்ற கேள்வியே. தன்னைச் சூழ்ந்தவர்களை

எல்லாம் தன் ரசிகர்களாக மாற்றியது அவனுடைய சிறப்பியல்பு. அவனே அறியாமல் நடந்த ஆளுமைத் தொடுகையது.

பாடசாலை நாட்களில் வகுப்பறையை விட விளையாட்டு மைதானத்தில் அதிக நேரம் செலவிட்டவன். ஏன், நேரத்தை முதலிட்டவன் என்றும் சொல்லலாம். ஏனென்றால், அதற்கான பலனை தனக்காகவும், தனது அணி, பாடசாலை அல்லது கழகத்துக்காக நேர்த்தியாகக் கொண்டு வந்தவன். திறமைகளை கூர்மைப்படுத்தி செய்ததால் எல்லாவற்றிலும் பலன் கிடைத்தது.

பின்னர், ஒரு கட்டத்தில், எல்லா விளையாட்டுகளையும் தற்காலிகமாக நிறுத்தி கொழும்பில் மேற்படிப்பு படித்தான். அங்கும் பலர் அனுபவித்த உலகாயத இன்பங்களை உதறி தனக்கு எது மிக முக்கியம் என்பதில் தன் கவனத்தை நேர்நோக்கி செய்து தன் திறமையை நிரூபித்து பெருமைப்படக் கூடிய தொழில் பெற்று அமெரிக்கா சென்றான்.


புகைப்படம் எடுத்தல், ஓவியம் வரைதல், சமையல், சைக்கிள் ஓட்டுதல், மலையேற்றம் (Photography, Drawing and Painting, Cooking, Cycling, Trekking) என்று தன் மனதையும் உடலையும் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருந்தவன். குடும்பத்துக்காகவும் தரமான நேரம் ஒதுக்கி வாழ்க்கையை சமநிலையாகக் கொண்டு போனவன்.

எப்போதும் ஒரே மாதிரியான சிரிப்பு, பல்வேறுபட்ட திறமைகளும் பொழுது போக்குகளும், எடுத்த வேலையில் கவனக் குவிப்பு, எவருடனும் பகைமை பாராட்டாமை என சுரேஷ் பழகிய அனைவரும் ஒரே கருத்தைக் கொண்டிருந்தமை தான் வியப்பும் சிறப்பும்.

ஒவ்வொரு வயது காலப் பகுதிகளிலும் அந்த நேரத்துக்கு மிகமுக்கியமான விஷயங்களில் தன் திறமையையும், கவனத்தையும் செலுத்தி தன் கடமையைச் சரிவரச் செய்தவன்.

2014 ஆம் ஆண்டிலிருந்து தன் பாடசாலை நண்பர்களை சந்திப்பதற் கான வாய்ப்புகளையும் தவற விடாதவன். அந்தச் சந்திப்புகளில் அவனது பண்பையும் முதிர்ச்சியையும் நாங்கள் சிலாகித்துக் கொண்டு வரும் போது ஓரிரவு, பிள்ளைகளுக்குக் கதைசொல்லி உறங்க வைத்துவிட்டு தானும் உறங்க என்று போனவன் மேலுலகத்திலுள்ள சபைக்கு வீறு நடை போட்டு போய்விட்டான். அவனது வாழ்க்கையை எங்களுக்குக் கதையாக விட்டுச் சென்றுவிட்டான்.

**- சிவப்பிரகாஷ் வயித்தீஸ்வரன்**



## The Brighten Legend from Jaffna Hindu College Soma Suresh:

Soma Suresh, Born in Jaffna, Sri Lanka, he always reminisced about his early years with a grin, fondly recounting a simple, carefree childhood.

Leaving home as a young man to escape a civil war and to pursue an education, he lived in India and Colombo before immigrating to the United States. There he completed a Master of Science in Computer Systems Engineering at Northeastern University in Boston, and then embarked upon an accomplished career in software engineering.

Suresh built a life from scratch in Shrewsbury, seeking to give their children the kind of opportunity that they didn't have back home. Suresh was a person of wide-ranging interests and many exceptional talents.

He painted and photographed, he was a master in the kitchen and at the grill, he was handy with tools and resourceful with his hands, he was an avid outdoorsman who enjoyed both the mountains and the ocean, he played cricket in Sri Lanka and skied in New England, he built computers and loved all the latest gadgets and electronics, he played the Mridhangam as a boy and jammed to the Beatles as a man, and generally approached life with an affinity for expanding his horizons by exploring the novel and unknown.

More importantly, Suresh was effortlessly kind, youthful, fun, grounded, and genuine. His intelligence, professional success, and personal achievements never changed him, as he carried a fresh authenticity throughout his life making him welcoming and relatable to anyone.

He cherished his Tamil roots without ever prescribing to any cultural norms or expectations that didn't align with his values. He was an uninhibited thinker, brave enough to march to the beat of his own drum, while encouraging others to embrace their unique life journey. He was a loving husband, father, and friend, and also knew how to throw a great party. He will be missed by all who were lucky enough to know him.

Suresh is predeceased by his father Capt. Nagalingam Somasundaram (Vice Principal, Jaffna Hindu College), mother Kanagambikai Somasundaram (Vice Principal, Vembadi Girls School).

Soma Suresh, 52, passed away peacefully at his Shrewsbury, MA home on May 24, 2023. While his departure is unexpected for his loved ones, he lived a life filled with adventure and happiness.



இந்தப் பூமிப்பந்தில் ஈழத்தமிழர்களாகிய நாங்கள் மட்டுமே சுதந்திரத்திற்காகப் போராடுபவர்கள் அல்ல, உலகில் மிக வளர்ச்சியடைந்து, மனித உரிமைகளில் முன்னிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள நாடுகளிலும் தமது சுயநிர்ணய உரிமைக்காக மக்கள் தொடர்ந்து போராடுகின்றார்கள் என்ற செய்தியைச் சொல்லியிருக்கும் இந்தப் புத்தகம் தமிழர்களுக்குத் தரும் மன உறுதியும் உந்து சக்தியும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது.

தமது சுயநிர்ணய உரிமைக்காக, சுதந்திரத்திற்காகப் போராடும் ஐரோப்பிய இனங்களின் போராட்டங்களை உள்ளடக்கி 'தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்' என்ற ஐங்கரன் விக்கினேஸ்வராவின் புத்தகமானது வெளியாகின்றது.

விடுதலைக்கான புதிய பாதைகளிற் பயணிக்கவேண்டிய காலத்தில் வானிற் தெரியும் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒன்றாக 'தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்' நூல் புலப்படுகின்றது.

- கலாநிதி இ.நா.ஸ்ரீஞானேஸ்வரன்

ISBN 955524963-6